இந்திய இலக்கியச் சிற்பிகள்

பரஞ்சோதி முனிவர்

பா. சிவநேசன்



பரஞ்சோதி முனிவர்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

பரஞ்சோதி முனிவர்

பா.சிவநேசன்

சாகித்திய அகாதெமி

Paranjothi Munivar: Monograph in Tamil by Pa. Sivanesan, Sahitya Akademi, New Delhi, 2007, Rs. 25.

முதல் பதிப்பு. 2007

ISBN 81-260-2375-9

சாகித்திய அகாதெமி

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம், டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018

ஜீவன் தாரா பில்டிங், நான்காவது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014

விலை ரூ 25

அச்சு *ராயல் கலர் பிரிண்ட், சென்னை* – **6.**

என்னுரை

தமிழ்ப் புலவர்களில் புராண ஆசிரியர்களுக்குத் தனி இடம் உண்டு சேக்கிழாரைத் தொடர்ந்து நம் நினைவிற்கு வருபவர் பரஞ்சோதி முனிவர். இவ்விருவரும் புராண இரட்டையர்கள் என்று அழைக்கப் பெறுபவர் களாவர். சேக்கிழார் வரலாறு விரிவாக ஆராய்ந்து எழுதப் பட்டிருப்பது போன்று, பரஞ்சோதியாரின் வரலாறு விவரிக்கப்படாதது ஒரு நெருடலாக இருந்தது ஆகவே முனிவரைப் பற்றி ஆராயத்தொடங்கியதில் இந்நூல் உருவானது

வேதாரணியத்தில் தோன்றிய இவர், மதுரையில் முனிவர் நாயகமாக விளங்கியிருக்கிறார். கி.பி பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவருடைய வாழ்வு அமைந்திருக்கிறது.

பரஞ்சோதியார் வேதாரணிய புராணம் பாடுவதற்கு முன்பே அத்தலத்தின் மீது அகோரமுனிவர் ஒரு புராணம் பாடியிருந்தார். அது போன்றே முனிவருடைய திருவிளையாடற் புராணத்திற்கு முன்னமேயே பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடிய பழைய திருவிளையாடல் வழக்கில் இருந்தது ஆயினும் இரு தலத்து மக்களின் வேண்டுகோளினை ஏற்று, இந்த இரு புராணங்களையும் பாடியுள்ளார் இதற்கு அகச்சான்றுகள் உள்ளன இதனால் முனிவருடைய திறம் நமக்கு வெளிப்படுகிறது

திருவிளையாடற் புராணத்தைக் காப்பியப் பண்புகள் நிறைந்த புராணமாகப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா ஒரு குட்டித் திருவிளையாடற் புராணமாகவே திகழ்கிறது

இந்நூலில் பரஞ்சோதியாரின் இலக்கியக் கொள்கைகளும் வரை யறுத்துக் கூறப்பெற்றுள்ளன.

பொது அறங்களைச் சைவ அறங்களாக்கி ஆற்றுப்படுத்தியிருப்பது பரஞ்சோதியாருக்குரிய தனிச்சிறப்பாகும். இவர் கருத்துப் புதுமை களையும் செய்துள்ளார். இவ்வகையில் முனிவருடைய வாழ்வியலையும் படைப்பாற்றலையும் தொகுத்துரைக்கிறது இந்த ஆய்வுப்படைப்பு

இந்நூல் உருவாவதற்கு இறையருள் தோன்றாத் துணையாகியது ஆயினும் தோன்றிய துணையாக இருந்தவர் அன்புச் சகோதரர் முனைவர் தி.அரங்கநாதன் ஆவார். அவருக்கு என் உள்ளத்தில் ஓர் இடமுண்டு

சாகித்திய அகாதெமி பரஞ்சோதியாரின் வரலாற்றிற்கு வரவேற்பு அளித்திருக்கிறது. இந்திய இலக்கியச் சிற்பிகளின் வரிசையில் முனிவர் இடம்பெறுவது பொருத்தமுடையதாகும். நல்லுலகம் இந்நூலை ஏற்று மகிழும் என நம்புகிறேன்.

பா.சிவநேசன்.

பொருளடக்கம்

1
வரலாறு

இறைவன் அருள் பெற்ற அருளாளர்கள் வழிபாடு, நூலியற்றல் முதலியவற்றால் சமய நெறியினைப் பேணிக் காப்பர் திருமுறைகள், புராணங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றை இயற்றியவர்கள் அருளாளர்களாவர் அவர்களுடைய வரலாறு பற்றிய செய்திகள் குறைவாகவே உள்ளன. கிடைத்த குறிப்புகளைக் கொண்டு வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. பரஞ்சோதி முனிவர் வரலாற்றை எழுதியோர் மிகச் சுருக்கமாகக் குறித்தனர் அவர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகவும் சுட்டவில்லை பரஞ்சோதியாரின் சிறப்பையும் படைபபையும் நோக்க, அவருடைய வாழ்கைை வரலாற்றை அறிவது மிகவும் இன்றியமையாததாகிறது அதற்கு அகச்சான்றுகளும் வரலாற்று நிகழ்வுகளும் துணை புரிகின்றன

பெயர் விளக்கம்

பரம், சோதி எனும் இரு சொற்களும் சேர்ந்து பரஞ்சோதி என வழங்கி வருகிறது பரம்-மேலானது. சோதி-ஒளி ஆகவே, இச்சொல் மேலான ஒளி என்று பொருள்படுகிறது இது நாளடைவில் மேலானவன், ஒளி வடிவினன் எனும் இரு இறையியல்புகளையும் குறித்தது ஆதலின், இறைவனின் பெயராகவும் ஆயிற்று இச்சொல் முதன்முதலில் திருமந்திரத்தில் காணப்படுகிறது திருமூலர் இறைவனுடைய குரு வடிவத்தைச் சுட்ட இதனைக் கையாண்டுள்ளார்

பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றப்
பரஞ்சோதி என்னுட் படிந்ததன் பின்னைப்
பரஞ்சோதி யுள்நான் படியப்படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக்கண் டேனே.

(2798)

இதில் சொல்லும் பொருளும் ஒத்தமைந்தமையைக் காணமுடிகிறது சுந்தரர்,மாணிக்கவாசகர், கருவூர்த்தேவர் ஆகியோரும் சிவபெருமானை இப்பெயரால் போற்றியுள்ளனர்.

இறைவனுடைய பெயர்களையும் மந்திரங்களையும் மக்கட்குப் பெயராக இடுவது வழக்கம். பேயனார், பேராலவாயர் எனும் கடவுளுடைய பெயர்கள், சங்கப்புலவர்கள் சிலரின் பெயர்களாக அமைந்துள்ளன சோமசுந்தரம்,நமசிவாயம் எனும் பெயர்கள் மக்கட் பெயர்களாக நிலவுகின்றன இறைவன் பெயரை மக்களுக்குச் சூட்டி அழைப்பதால், பெருமானை இடைவிடாது நினைப்பதாகக் கருதப்பட்டது பரஞ்சோதி எனும் பெயரும் அவ்வக்காலங்களில் மக்கட்குப் பெயராகி வந்துள்ளது

தமிழ்ச் சைவ உலகில் பரஞ்சோதியார் எனும் பெயரில் நால்வர் உள்ளனா அவர்கள் சிறுத்தொண்டர் எனப்பெறும் பரஞ்சோதி, மெய்கண்டாருக்கு உபதேசம் வழங்கிய பரஞ்சோதி, சிதம்பரப் பாட்டியல் இயற்றிய பரஞ்சோதி, திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதி என்பவர்களாவர். பிற்காலத்தவர் இவர்களின் பெயரோடு ஆர் விகுதியையும் சேர்த்து அழைத்தனர். இவர்களில் மெய்கண்டாருக்கு உபதேசம் செய்தவர் மாமுனிவர் என்றும், திருவிளையாடற்புராணம் பாடியவர் முனிவர் என்றும் அழைக்கப்பெறுகின்றனர்.

தந்தையார்

திருமறைக்காடு தேவாரத் தலங்களுள் காவிரியின் தென்கரைத் தலமாக விளங்குவது. இங்குச் சைவ வேளாளர் பலர் வாழ்ந்தனர் இவர்கள் மதுரையிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள இவர்களில் உபதேசம் செய்விப்போர் தேசிகர் எனப்பட்டனர் இத்தகையோரில் குறிப்பிடத் தக்கவர் மீனாட்சிசுந்தர தேசிகராவார் இவருடைய மகன் பரஞ்சோதி முனிவர். முனிவரின் தாயார் பற்றிய செய்திகள் தெரியவில்லை. இவருக்கு உடன்பிறந்தோர் பலர் இருந்ததாகக்கூறுவர்

கல்வி

சைவ வேளாள மரபினர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர் என்பதை வரலாற்றின் மூலம் அறியமுடிகிறது. பரஞ்சோதி முனிவர் வடமொழி, தென்மொழிகளை ஒரு நல்லாசிரியர்பால் கற்றார் என்றும், சமய நெறிகளைத் தம் தந்தைவழி உணர்ந்தார் என்றும் கூறுவர் இவர் தந்தை இருமொழிகளையும் கசடறக் கற்றவர். திருமறைக்காட்டில் குரு குலம் ஒன்றை நிறுவி, மாணாக்கர்களுக்கு இருமொழி இலக்கிய இலக் கணங்களைக் கற்பித்தார் இவற்றோடு திருமுறைகளையும், சாத்திரங் களையும் உணர்த்தி வந்தார் ஆகவே, முனிவர் தம் தந்தையிடமே பொதுக் கல்வி மற்றும் சமயக்கல்வியினையும் கற்றார் என்று கூறவேண்டியுள்ளது.

இவர் மேலும் இசை, நடனம், இரத்தின பரீட்சை, அசுவப்பரீட்சை, அத்திரப் பரீட்சை, கஜப்பரீட்சை, அக்னித்தம்பம், சகுனசாத்திரம், சிற்பம், சோதிடம், நீதி, உருவ சாத்திரம், இந்திரசாலம், இரசவாதம் முதலிய கலைகளைத் தாமே உணர்ந்தார் என்பர் ஆகையால் இவரை இராய சொக்கலிங்கம் ‘கலைப் பெருங்கடல்’ என்றார் இவர் இளமையிலேயே நித்திய பூசை, திருவைந்தெழுத்து ஓதல், திருக்கோயில் வழிபாடு முதலிய சைவ ஒழுக்கங்களில் ஈடுபட்டார் மறைக்காட்டில் அடியார் கூட்டத்துள் ஒருவராய் இருந்து நூலாராய்ச்சியும் செய்து வரலானார்

இல்லறம்

பரஞ்சோதி முனிவர் இளமையிலேயே துறவு பூண்டதாகக் கூறுகிறார் மீ.கந்தசாமிப் புலவர் இவர் கூற்று உண்மையன்று. முனிவர், தருமி சோமசுந்தரரிடம்,

.......இல்லற வாழ்க்கை யின்றி நின்
அடிய ருச்சனைக்கு அருக னாவனோ

(52,86)

என வேண்டுவதாகப் பாடியுள்ளார் பிரமராக்கதனுக்கு மாதவன் ஒருவன் அறிவுறுத்தும் வகையில்,

. ....துற வுரைக்கில்
தன்தன் இல்லவள் அல்லர்பால் ஆசையைத் தவிர்தல்

(வேதா· 5. 71)

எனக் கூறியுள்ளார். தம் நெஞ்சம் சொககநாதர் துணையிருப்பார் என்று எண்ணாமல் மனைவி, மக்கள், சுற்றம் என்று உருகுகிறதே என வருந்திப் பாடியுள்ளார், இதனை,

சொக்கர் உண்டுதுணைஎன் றிராய் அவர்
பக்கம்அன்பு பழுத்ததென்று ஓர்கிலாய்
மக்கள் என்றும் மனைஎன்றும் வாழ்வுஎன்றும்
ஒக்கல் என்றும்உருகும்என் நெஞ்சமே

(அந 79)

என்ற பாடல் எடுத்துரைக்கிறது

மக்களே மணந்ததாரம் அவ்வயிற் றவரையோம்பும்
சிக்குளே அழுந்தியீசன் திறம்படேன் தவமதுஓரேன்
கொப்புளே போலத்தோன்றி அதனுளே மறையக்கண்டும்
இக்களே பரத்தையோம்ப என்செய்வான் தோன்றினேனே.

(4.79:2)

எனும் நாவுக்கரசர் பாடல் இங்கு ஒப்புநோக்குதற்குரியது. ஆகவே, அவர் உரிய காலத்தில் இல்லறத்தையும் ஏற்று வாழ்ந்ததாகக் கருத இடமுண்டு

பூவையில் தங்குதல்

பரஞ்சோதிமுனிவர் இல்லறம் மேற்கொண்டு வாழும் நாளில், திருமறைக்காட்டிலிருந்து நீங்கி, பூவையில் தங்கியுள்ளார். இதற்கு வேதாரணிய புராணத்தில் வரும் 'பூவை உறை பரஞ்சோதி' எனும் தொடர் சான்றாகும். பூவை என்பது மதுரைக்கு அருகிலுள்ள திருப்பூவணமாகும். இவ்வூரில் முனிவரின் உறவினர்கள் வாழ்ந்ததால், அங்குச் சிலகாலம் தங்கியுள்ளார். பூவையிலிருந்து விழாக்காலங்களில் திருமறைக்காட்டிற்கு வருவதை வழக்கமாகக் கொண்டார் அவ்வாறு ஒரு முறை வந்தபோது வேதாரணிய புராணத்தைப் பாடியுள்ளார்

துறவில் நாட்டம்

துறவு இல்லறத்தின் வழிவந்த துறவு, இல்லறத்தின் வழிவாராத் துறவு என இரண்டு வகைப்படும் பரஞ்சோதியார் இல்லறத்தின் வழிவந்த துறவுடையார். வேதாரணிய புராணம் பாடப்பட்ட பின்னர்,அவர் சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பச் சிந்தனை கொண்டார் அச்சிந்தனை அவரைத் துறவறத்தில் செலுத்தியது. இதனை

தாழ்ந்திடும் துயருக்கு எல்லாம் தையலார் அன்றே மூலம்

(வேதா.14:45)

தையலார் மயலிற் பட்டார் தமக்கொரு மதியுண்டாமோ

(1·4)

துடையால் இழைபுரை யிடையால் இடைபுனை
துகிலால் வனிதையர் நகிலால்மைப்
படையான் மடவன நடையால் இனி இடர்
படவே நிலமிசை கடவேனோ

(அந்.55)

எனும் பாடல்கள் விளக்குகின்றன. இவ்வுணர்வு மாணிக்கவாசகர் கொண்ட துறவு நிலையோடு ஒத்தமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

மதுரைக்குப் புறப்பாடு

சைவர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றையும் முறையாக வணங்க யாத்திரை மேற்கொள்வர் நால்வர் பெருமக்களும் தலப்பயண முறையைச் சிறக்கச் செய்து, அவர்களும் அதனால் உயர்நிலை பெற்றனர் என்பதை வரலாறு உணர்த்துகிறது திருத்தலங்கள், முனிவர்கள் வசிக்கும் காடுகள், தூய நதிகள் முதலியற்றைக் காண்பதும், தவத்தினர் நோற்கும் முறைகளை ஆராய்ந்து தெளிதலும், தலயாத்திரையின் நோக்கமாகும் என்பர் பரஞ்சோதி முனிவர் இவ்வுண்மை,

புண்ணியம் தழைக்கும்தெய்வத் தலங்களும் புலன்கள்
வென்றோர்
நண்ணிய வனமும் தீர்த்த நதிகளும் தவத்தோர் நோற்கும்
வண்ணமும் நோக்கி நோக்கி

(65.10)

எனும் அருச்சனைப்படலப் பாடலில் அமைந்துள்ளது. திருத்தலப் பயணத்தின்போது நோக்கத்தக்கவை எவை என்பதைத் தெளிவாக வரையறுத்து எடுத்துரைத்த சிறப்பு முனிவர்க்குரியதாகிறது. இவர் திருவாரூர்,திருவானைக்கா, திருவண்ணாமலை, தில்லை, காளத்தி எனும் ஐம்பூதத் தலங்களை முதலில் வணங்கினார். பின்னர், தொடர்ந்து பல தலங்களையும் வணங்கிச் சென்று மதுரையை அடைந்தார்

துறவுக்கோலம்

பரஞ்சோதியார் மதுரைக்குச் சென்றவுடன் அங்குள்ள ஒரு மடத்தில் தங்கினார் சத்திய ஞானதரிசினியாகிய ஞானக்கூத்தருடைய திருமடம் ஒன்று கி.பி. 1547 இல் இருந்ததாக மதுரை முதல் கோபுரத்தென்புறச் சுவரில் உள்ள கல்வெட்டு கூறுகிறது இது போன்ற மடம் பரஞ்சோதி முனிவர் காலத்திலும் இருந்திருக்கவேண்டும் என்பர் இவர் நாள்தோறும் சோமசுந்தரனையும், மீனாட்சியம்மையையும் முக்காலமும் வணங்கி வந்தார் அப்பொழுது ஒரு நாள் சற்குரு எதிர்ப்பட்டு இவருக்கு ஞானோபதேசம் செய்தார். அன்று முதல் இவர் துறவுக்கோலத்தை ஏற்றார். இவர் தான் தங்கியிருந்த மடத்திற்குத் தம்பிரானாகவும் விளங்கியுள்ளார். இவரை அ.சதாசிவம் பிள்ளை, பரஞ்சோதித் தம்பிரான் என்று குறித்துள்ளதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

முனிவர்நாயகம்

பரஞ்சோதியாரின் படைப்புகளைப் பதிப்பித்தோர் அவரை முனிவர் என்றே குறித்துள்ளனர். திருவிளையாடற் புராணத்திற்குச் சிறப்புப் பாயிரம் வரைந்த பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பரஞ்சோதியாரை, 'பரஞ்சோதி மாமுனிவன்', 'பரஞ்சோதி முனிவன்' என்று குறிப் பிட்டுள்ளார். 1896 இல் வெளியிடப்பட்ட திருவிளையாடற் புராணத்தில் உள்ள சிறப்புப் பாயிரம் 'தவம்பல புரிந்து தவநனி யுயர்ந்த பரஞ்சோதி மாமுனி' எனச் சிறப்பிக்கிறது வீமநாத பண்டிதர் கடம்பவன புராணத்தில் இவரை, திருந்துபுகழ் பரஞ்சோதி மாமுனிவன் என்று குறிப்பிட்டுள்ளார். பூவை கலியாணசுந்தர முதலியார், 'முனிவர்கள் நாயகமாம் பரஞ்சோதி' எனப் புகழ்ந்துள்ளார் அரு ந அருணாசல செட்டியார், 'நற்பரஞ் சோதிமா முனிவன்' என்றார் இவ்வாறு பெயரோடு முனிவர் என்று அழைக்கப்படுவதால் இவர் துறவு நெறியில் சிறந்து விளங்கியவர் என்பது தெளிவாகிறது

ஞானகுரு

சமய நெறியில் தேர்ந்தவர்கள் பிறரை நெறிப்படுத்த கல்வி கற்பிப்பதும், ஞானோபதேசம் செய்விப்பதும் மரபு. அவ்வடிப்படையில் பரஞ்சோதியார் மதுரையில் மாணாக்கர் பலருக்குத் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் முதலியவற்றைக் கற்பித்தார் திருமுறைகள், சாத்திரங்கள் இவற்றின் நுட்பங்களை உணர்த்தினார். விரும்புவார்க்கு ஞானோபதேசமும் செய்து வந்தார் மீ கந்தசாமிப் புலவர் இவரைச் சிறப்பிக்கும் வகையில், மதுரையில் முனிவர்கள் தங்கியிருந்த மடம், பூம்பொய்கையானது முனிவர் முருகிதழ்த் தாமரை மலரானார். அவர் வாய்மொழி நறுமணமானது. கருத்துக்கள் தேனாயின. மதுரை மக்கள் வண்டாயினர் என்று உரைத்துள்ளார்

நூல்களை அருளிச்செய்தல்

அருளாளர்கள் தாம் சார்ந்துள்ள சமயத்திற்கு நூல்களை இயற்றியும் தொண்டு புரிந்துள்ளனர் முனிவர் அந்த ஞானத்தொண்டையும் செய்துள்ளார். பரஞ்சோதியாரிடம் மதுரை மக்கள், ஆலாசிய மான்மியத்தைத் தமிழில் பாடியருள வேண்டினர் ஒரு நாள் மீனாட்சி யம்மையாரும் முனிவர் கனவில் தோன்றி, திருவிளையாடல்களைப் பாடுமாறு ஆணையிட்டார் அதன்படி இவர் திருவிளையாடற் புராணத்தை இயற்றினார். பின்னர் திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி எனும் இரு நூல்களையும் படைத்தார்.

மறைக்காட்டிற்கு மீளல்

மதுரையில் வாழும் நாளில் மறைக்காட்டிற்கு மீளவும் அவர் உள்ளம் விரும்பியது முனிவர் திருவிளையாடற் புராண அரங்கேற்றத்தின் போது மக்களும், மடாதிபதிகளும் தந்த பரிசில்களோடும், பல்லக்குப் பரிவாரங்களோடும் தம் ஊருக்கு வந்து தங்கினார் என்பர் சோ பாலசுப்பிரமணியன்.

திருக்கோயில் அமைத்தல்

அன்பர்கள் இறைவனுக்குத் திருக்கோயில் கட்டுவதிலும் விருப்பம் கொள்வர் மடாதிபதிகள் தம் வழிபடு கடவுளுக்குக் கோயிலெடுத்து வழிபடுவர் பரஞ்சோதி முனிவரும் மறைக்காட்டிற்கு அருகிலுள்ள மகராசபுரத்தில் கோயில் கட்ட எண்ணினார். ஓர் இடத்தைக் கோயில் கட்டுவதற்குத் தேர்வு செய்தார். வேதாரணியேசுவரர் பெயரில் சிவலிங்கத்தையும், யாழைப் பழித்த மொழியம்மை பெயரில் அம்பிகையையும் நிறுவினார் அங்கேயே தங்கி நாள்தோறும் வழிபட்டு மகிழ்ந்தார். பரஞ்சோதியாரால் பூசிக்கப்பட்ட இலிங்கத்தை மக்கள் இன்று பரஞ்சோதிலிங்கம் என்றும், அம்பிகையைப் 'பாலினும் இனியள்' என்றும் போற்றி வழிபடுகின்றனர்

திருமடம் நிறுவுதல்

சமயச் சான்றோர் ஞான பரம்பரை வழிவழியாகத் தொடர மடம் அமைத்துத் தொண்டு புரிவர் அவ்வகையில் பரஞ்சோதியார் மகராசபுரத்தில் மடம் ஒன்றை அமைக்க விரும்பினார ஒரு பொழுது வீரசேகரசோழன் என்பான் முனிவரைக் காண வந்தான் அவரை வணங்கிப் போற்றினான். முனிவர் சோழனிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார் அவன் அவருககு, திருவிளையாடல் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் வீதம் அறுபத்து நான்கு ஏக்கர் நிலமளித்தான். அதனைக் கொண்டு திருக்கோயிலுக்கு முன்பாக ஒரு மடத்தைக் கட்டினார் அங்கு மகேசுவர பூசை செய்ததோடு, பலருக்கு அருளுபதேசமும் செய்து வாழ்ந்தார் இவர் அமைத்த மடம், நிலமளித்தவன் பெயரால் வீரசேகர சோழன் மடப்புறம் எனப்பட்டது பின்னர் அப்பெயர் சேகல் மடப்புறம் என மருவியது இப்பெயரே ஊர்ப் பெயராகவும் ஆகியது.

சீவ சமாதி

அருளாளர்கள் தம் வாழ்நாளின் எல்லையை உணர்ந்து சீவசமாதி கூடுவர் தருமைக் குருஞானசம்பந்தர், சிவப்பிரகாசர் முதலியோர்

இவ்வகையில் சமாதியடைந்துள்ளனர். பரஞ்சோதி முனிவரும் சேகல் மடப்புறத்தில் ஒரு குருவார தினத்தில் சீவசமாதி அடைந்துள்ளார். சமாதி இன்று பரஞ்சோதீசுவரர் கோயிலினுள் பிள்ளையார் கோயிலாக விளங்குகிறது. இவருடைய திருவுருவச் சிலை பிரகாரத்தின் ஈசான திசையில் உள்ளது. இவர் மதுரையில் முத்தியடைந்ததாகவும் கூறுவர். ஆனால் முனிவரின் சமாதியும், திருவுருவச் சிலையும் சேகல் மடப்புறத்தில் இருப்பதால் மதுரையில் சமாதி கூடினார் எனக் கூறுதல் பொருந்தாது.

2
காலமும் சூழலும்

ஒருவருடைய காலம் பற்றிய ஆராய்ச்சியில் பல கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன.மேலும் நுணுகி ஆராயும் பொழுது அவ்வேறுபாடுகள் நீங்கும். முடிவுகள் தெளிவுபடுத்தப் பெறும். மாணிக்கவாசகர், கல்லாட தேவநாயனார், கபிலதேவநாயனார், பரணதேவ நாயனார் ஆகியோரின் காலங்களை ஆராய்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட முடிவுகள் கூறப்பட்டன. பிறகு ஆய்வாளர்களின் தொடர் முயற்சியினால் அவர்களுடைய காலங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. அதுபோன்று பரஞ்சோதியார் காலத்தையும் தெளிவாக அறுதியிட வேண்டியிருக்கிறது.

திருவிளையாடற் புராணத்திற்குப் பதிப்பு முன்னுரையினையும் முனிவரது வரலாற்றுக் குறிப்பினையும் தந்தோர் பலர். அவர்கள் பரஞ்சோதியார் இன்றிலிருந்து 240 ஆண்டுகளுக்கு முன்னரும் 800 ஆண்டுகளுக்குள்ளும் வாழ்ந்தவர் எனக் கூறியுள்ளனர்.

பதிப்பு முன்னுரைகள்

ஆறுமுகநாவலரின் மாணாக்கரின் மாணாக்கர் கதிரைவேற்பிள்ளை (1907) பரஞ்சோதியார் 800 ஆண்டுகளுக்கு முன் தோன்றினார் எனச் சுட்டுகிறார். இவர் கூற்றுப்படி, கணக்கிட்டால்(1907-800=1107)இவரது காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டாகும்.

1931 ஆம் ஆண்டு வெளிவந்த திருவிளையாடற் புராணப் பதிப்பில், 400 ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர் என்ற குறிப்பு உள்ளது. (1931-400= 1531) இதன்படி, பரஞ்சோதியாரை கி.பி.16 ஆம் நூற்றாண்டினர் எனக் கூற இடமிருக்கிறது.

ந.மு.வே.

ந.மு.வேங்கடசாமி நாட்டார் (1927) முனிவர் 280 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்பர். இவர் கருத்தைக் கொண்டால் (1927-280=1647) முனிவர் கி.பி.17ஆம் நூற்றாண்டினராவார்

இராய. சொ.

பரஞ்சோதியார் காலம் இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன் என்று காலக்கணக்கர் கூறுவர் என்பர் இராய.சொக்கலிங்கம். இவர் கருத்தை ஏற்றால், முனிவரின் காலம்(1973-350=1623) கி.பி. 17ஆம் நூற்றாண்டாகும்.

தெ.பொ.மீ

திருவிளையாடற்புராணம் 300 ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழரின் புத்துணர்ச்சிப் பெருக்கத்தின் வழியே தோன்றியது என்பர் தெ.பொ.மீ. இவர் கூற்றை வைத்து எண்ணினால்(1955-300=1655) முனிவர் கி.பி.17ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியினராவார்.

பட்டுசாமி ஓதுவார் பரஞ்சோதியார் காலம் சுமார் 240 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் என்பது தெளிவு என்று கூறியுள்ளார். இக்குறிப்பினால் (1955-240=1715) இவரை கி பி 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினர் என்று கூறவேண்டியுள்ளது

ஆய்வாளர்களின் கருத்துரைகள்

இலக்கிய வரலாற்று ஆசிரியர் பலரும், ஆய்வாளர் சிலரும் பரஞ்சோதியாரின் காலத்தினைப் பலதிறத்தனவாகக் கூறியுள்ளனர்

உவில்சன்

கி பி 1051 ஆம் ஆண்டிற்குச் சரியான சகவருடம் 973இல் திருவிளையாடற் புராணம் பாடப்பட்டதாகப் பாண்டிய ராச்சிய சரித்திரம் எனும் நூலை எழுதிய உவில்சன் கருதுவதாகச் சதாசிவம் பிள்ளை கூறுகிறார்

தமில்சுவலபில்

ஆலாசிய மகாத்மியம் கி பி 1400 இல் எழுந்தது என்றும், அதன் பிறகு இரு நூற்றாண்டு கழித்தே பரஞ்சோதியார் புராணம் பாடியிருக்க வேண்டும் என்றும் கமில் சுவலபில் குறிப்பிட்டுள்ளதாகக் கோபாலன் தம் நூலில் எழுதியுள்ளார்பரஞ்சோதியார் கி பி 15 ஆம் நூற்றாண்டில் வாழந்தவர் என, கோ.சுந்தரமூர்த்தியும், சோ பாலசுப்பிரமணியனும் கருதுகின்றனர் இவர் கி.பி 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தாரென அ.சிங்காரவேலு முதலியார், ந சி கந்தையா, மு.கோவிந்தராசன், வி.ஆர் இராமச்சந்திர தீட்சதர் ஆகியோர் கூறுகின்றனர்.

பரஞ்சோதி முனிவர் கி பி 16 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டிலும், அதி வீரராமர் பாண்டிய நாட்டிலும் தமிழை வளர்த்தவராவர் இந் நூற்றாண்டைப் பரஞ்சோதி, அதி வீரராமன் நூற்றாண்டு எனக் கூறலாம் என்பர் மு.கோவிந்தசாமி.

கே.கே.பிள்ளை

திருமலை நாயக்கரின் காலமாகிய(1625-59)கி பி 17ஆம் நூற்றாண்டே முனிவரின் காலமாகும் என்பர் கே கே பிள்ளை.

பரஞ்சோதியாரைப் பாலூர்கண்ணப்பமுதலியார் கி.பி 17ஆம் நூற்றாண்டினர் என்றும் மு அருணாசலம் கி பி 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் என்றும் கூறியுள்ளனர்

சமகாலத்தவர்கள்

பரஞ்சோதியாரை நிரம்ப அழகியர், அதிவீரராமா, குமரகுருபரர், திருமலை நாயக்கர், அகோரமுனிவர் ஆகியோரின் சமகாலத்தவராகவும் கருதுகின்றனர்

நிரம்ப அழகியர்

முனிவர் சேதுபுராணம் பாடிய நிரம்ப அழகியருடன் கல்வி பயின்றதாகக் கூறுவர் நிரம்ப அழகியரும், குருஞானசம்பந்தரும் கி பி 16ஆம் நூற்றாண்டினரான கமலை ஞானபபிரகாசரிடம் உபதேசம் பெற்றவர்கள் குருஞானசம்பந்தர் தருமையாதீனத்தையும், நிரம்ப அழகியர் துழாவூர் ஆதீனத்தையும் தோற்றுவித்தவர்கள் ஆவர் நிரம்ப அழகியரின் காலம் கிபி 1550-1575 க்கு இடைப்பட்டதாகும் பரஞ்சோதியார் நிரம்ப அழகியரையும் நிரம்ப அழகியர் பரஞ் சோதியாரையும் தத்தம் படைப்புகளில் குறிப்பிடவில்லை ஆகவே, நிரம்ப அழகியருடன் பரஞ்சோதியார் பயின்றார் என்ற கருத்து ஏற்புடையதல்ல என்கிறார் மு அருணாசலம்

அதிவீரராமர்

முனிவர் அதிவீரராம பாண்டியனின் வேண்டுகோளினால் திரு விளையாடற் புராணத்தைப் பாடியதாகக் கூறுவர் அதிவீரராமன் கி பி 1564 முதல் 1604 வரை கொற்கையை ஆண்டவன் இவன் விசய நகர மன்னர்களுக்குக் கட்டுப்பட்டவன் ஆதலால் மதுரையை ஆண்டிருக்க வாய்ப்பில்லை பரஞ்சோதியார் அதிவீரராமருக்குப்பின் 150ஆண்டுகள்

கழித்து வாழ்ந்தவர். ஆதலால், பரஞ்சோதியார் அதிவீரராமர் காலத்தவர் என்ற கருத்து, பிழையானதாகும் கி.பி. 16 ஆம் நூற்றாண்டினரான தத்துவப் பிரகாசரைத் தோணியப்பர் என்பவர், 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை' என்று குறை கூறிப் பாடினார் இதில் வரும் பிள்ளைப் பாண்டியன் அதி வீரராம பாண்டியன் ஆவான். அவன் தோணியப்பர் காலத்தில் இளம் பிள்ளையாய் இருந்திருக்க வேண்டும் என்பர் அதி வீரராமன் பற்றிய இக்குறிப்பு, 'பாத்தனதாக் கொண்ட பிள்ளைப் பாண்டியன்' எனத் தமிழ்விடுதூதிலும் இடம் பெற்றுள்ளது எனவே, அதிவீரராமரும், தமிழ்விடுதூது ஆசிரியரும் பரஞ்சோதியாருக்கு முற்பட்டவர்கள் என்பது தெளிவாகும்.

குமரகுருபரர்

பரஞ்சோதியாரைக் குமரகுருபரர் காலத்தில் வாழ்ந்தவராகக் கூறுவர். குமரகுருபரர் திருமலைநாயக்கர் காலத்தில்(1628-1659) வாழ்ந்தவர்.இவர் மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் முனிவர் பாடிய திருவிளையாடற் கதைகளைப் பல இடங்களில் பாடியுள்ளார். சான்றாக அந்நூலின் தாலாட்டுப் பருவ எட்டாவது பாடலைக் காட்டலாம் என்பர் சோ.பாலசுப்பிரமணியன்.

குமரகுருபரர் கி பி 1625இல் தோன்றியவர் தருமையாதீனம் நான்காவது பட்டம் ஸ்ரீமாசிலாமணி தேசிகரிடம்(கி.பி 1640-1660) ஞானோபதேசம் பெற்றவர் இவர் கி பி.1688 இல் பரிபூரணம் அடைந்தவர் இவர், ''அடுத்த பதஞ்சலியார் அஞ்சலியா நிற்ப, எடுத்த பதஞ்சலியார்'' எனச் சொக்கநாதர் பதஞ்சலிக்காக நடனம் புரிந்ததைப் பாடியுள்ளார். இவ்வரலாறு நம்பி திருவிளையாடலில், பதஞ்சலிக்கு நடம் செய்த வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. பரஞ்சோதியார் பெருமான் பதஞ்சலிக்காக மட்டுமின்றி, வியாக்கர பாதருக்காகவும் நடனம் ஆடினான் என்று கூறியுள்ளார் இதனால் பெரும்பற்றப்புலியூர்நம்பி குறிப்பிட்ட திருவிளையாடலையே குமரகுருபரர் பாடியுள்ளதாகத் தெரிகிறது இதனைக் கொண்டு முனிவரை, குமரகுருபரருக்குப் பிற்பட்டவராகக் கூறவேண்டியுள்ளது.

குமரகுருபரர் முதல் பெண்பாற் பிள்ளைத் தமிழைப் பாடியவர் ஆவார் அவர் அந்நூலை மீனாட்சியம்மையின் மீது பாடினார். அதில் அவர் அம்மையின் இளமைப் பருவ விளையாடல்களை விளக்கிப் பாடியுள்ளார். அம்மையார், தோழியரோடு தளிர் கொய்தும், வண்டல் மணலால் செப்புகளைச் செய்தும், மயில், அன்னம், புறா, கிளி ஆகியவற்றை வளர்த்தும் விளையாடினாள் இதனைக்,

காமரு மயிற்குஞ்சு மடவனப் பார்ப்பினொடு
புறவுபிற வும்வளர்த்தும்
காந்தள்செங் கமலத்த கழுநீர் மணந்தெனக்
கண்பொத்தி விளையாடியும்

(36)

எனும் பாடல் உணர்த்துகிறது. இதுபோன்றே பரஞ்சோதியாரும் தடாதகையாரின் விளையாட்டை,

........கன்னி யன்னமே
அளியால் இமவான் திருமகளாய் ஆவிஅன்ன மயில்பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து விளையாட்டு
அயரும் செயல் என்னே

எனப் பாடியுள்ளார். அம்மையார் உலகத்தை உண்டாக்குவதும், அவற்றைப் பெருமான் அழிப்பதும், அம்மை மீள ஆக்குவதுமாக இருப்பாள் என்பதைக் குமரகுருபரர்,

புன லிற்கழு புவனப் பழங்கலம்
எடுத்துஅடுக் கிப்புதுக் கூழ்
இன்னமுதம் சமைத் தன்னைநீ பன்முறை
இழைத்திட அழித்து அழித்தோர்
முற்றவெளி யில்திரியும் மத்தப் பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவும்
முனியாது வைகலும் எடுத்தடுக் கிப்பெரிய
மூதண்ட கூடமூடும்
சிற்றில்விளை யாடும் ஒரு பச்சிளம் பெண்பிள்ளை

(16)

எனக் குறித்திடுவர். பரஞ்சோதியார் இக்கருத்தை ஏற்று,

அண்டக் குவைவெண் மணற்சிறுசோறு
ஆக்கித் தனியே விளையாடும்
கொண்டற் கோதாய் படியெழுதல்
ஆகாஉருவக் கோகிலமே
கொண்டற் குடுமி இமயவரை
அருவி கொழிக்கும் குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும்
விளையாட்டு அயரும் வனப்பென்னே.

(4·77)

எனப் பாடியுள்ளார். இக்கருத்தொற்றுமையாலும், பரஞ்சோதியாரைக் குமரகுருபரருக்குப் பிற்பட்டவர் எனக் கூற இடமிருக்கிறது

திருமலை நாயக்கர்

ஸ்ரீபார்வதிகாந்தன் என்பவரின் மகனான சரசுவதி பண்டாரம் திருவிளையாடற் புராணத்தைத் திருமலை நாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினார். அப்பொழுது நாயக்கர் அவருக்கு நன்செய் நிலம் அளித்ததாகவும், அந்நிலம் சரசுவதி பண்டாரத்திற்கு விட்ட மானியம் என்று வழங்குகிறது என்றும் ஒரு செவிவழிச் செய்தி நிலவுகிறது. திருவிளையாடற் புராணத்தைப் பரஞ்சோதியார் அரங்கேற்றியதற்குச் சான்று உள்ளது. சரசுவதி பண்டாரம் அரங்கேற்றம் செய்ததற்குச் சான்று இல்லை. மானியம் பரஞ்சோதியார் பெயரில் இல்லாமல் சரசுவதி பண்டாரம் பெயரில் இருக்கிறது. ஆதலால், இப்பெயர் முனிவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

திருமலை நாயக்கர் தெலுங்கர் அவர் தமிழில் திருவிளையாடலைக் கேட்க விரும்பி, அதைச் சரசுவதி பண்டாரத்திடம் கேட்டிருக்கலாம் அதன்படி சரசுவதியார் திருவிளையாடற்புராணத்தை இரண்டாவது முறையாக அரங்கேற்றியிருக்கக்கூடும் அதற்காக மன்னன் மானியம் வழங்கியிருக்கலாம் என்பர் சோ.பாலசுப்பிரமணியன். இவர் கருத்தை ஏற்பதற்கில்லை. நூலாசிரியரால் அரங்கேற்றம் செய்யப்பட்ட ஒரு நூலை, இன்னொருமுறை வேறொருவரால் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்று கூறுவது பொருத்தமன்று இதற்கு அகச்சான்று இல்லையாதலால், பரஞ்சோதியார் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர் என்பது பொருந்தாது. திருமலை நாயக்கருக்குப்பின் சக்தி வழிபாட்டு இயக்கம் மதுரையில் தோன்றியது என்றும், அதனால் பரஞ்சோதியார் தம் நூலைச் 'சத்தியாய்' எனத் தொடங்கிப் பாடினார் என்று அ கி.ப கூறுவர் இக்கூற்று இங்கு எண்ணத்தக்கதாகும்.

பரஞ்சோதியார் சித்தர்களின் செயலை விவரித்துப் பாடியுள்ளதால், மதுரையில் சித்தமதம் பரவிய காலமாகிய கி.பி 17ஆம் நூற்றாண்டே இவரது காலமாகும் என்பர் ப.கோபாலன். இவர் கருத்தின்படி ஆராய்ந்தால்,பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், பழைய திருவிளையாடலைப் பாடியவருமான பெரும்பற்றப் புலியூர் நம்பியையும் இக்காலத்தவராகவே எண்ணத்தகும். ஆகவே, பரஞ்சோதியார் சித்தமதம் பரவிய காலத்தில் வாழ்ந்தவர் எனக் கூறுவது பொருத்தமன்று.

அகோர முனிவருக்குப் பின் வாழ்ந்தவர்

முனிவர் வேதாரணியத்திற்குத் தலபுராணம் பாடுவதற்கு முன்பே, அத்தலத்திற்கு அகோர முனிவரால் ஒரு தலபுராணம் பாடப்பட்டிருந்தது அகோரமுனிவர் கமலை ஞானப் பிரகாசர் வழிமுறையில் துறவு மேற்கொண்டவர் இவர் அதிவீரராமருக்குத் தீக்கை செய்வித்தவராதலால் *பரஞ்சோதியார் இவருக்குப் பிற்பட்டு வாழ்ந்தவராவார்*

ஆத்மநாததேசிகருக்குப் பிற்பட்டவர்

சோழ மண்டல சதகத்தின் ஆசிரியர் வேளூர் ஆத்மநாத தேசிகர் ஆவார் இவர் கி பி 1650-1728க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவர் அச்சதகத்தைக் கி பி 1723இல் எழுதி முடித்துள்ளார் இதில் தொண்டை மண்டலத்திலிருந்து சோழ மண்டலத்திற்கு வந்த அநதாரியைப் பற்றிய குறிப்பு உள்ளது. அநதாரி தொண்டை நாட்டிலுள்ள வாயலில் பிறந்து கல்வி கற்க உறையூருக்கு வந்தவர். இவர் கச்சி வீரப்பனின் வேண்டு கோளின்படி சுந்தரபாண்டியத்தைப் பாடினார் எனச்சோழமண்டல சதகம் குறிக்கிறது ஆனால் இந்நூலில் சோழ மண்டலப் புலவர் பரஞ் சோதியாரைப் பற்றிய குறிப்பு இல்லை சதக ஆசிரியர் பரஞ்சோதியார் மரபினர் ஆதலாலும், திருத்துறைப் பூண்டிக்கு அருகிலுள்ள வேளூரில் வாழ்ந்ததாலும் பரஞ்சோதியாரை அறியாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆகவே, சதகம் இயற்றப்பட்ட ஆண்டான கி பி. 1723க்குப் பிறகே திரு விளையாடற்புராணம் இயற்றப்பட்டிருக்க வேண்டும் இதனால் முனிவரை ஆத்மநாத தேசிகருக்குப் பிற்பட்டவராகக் கருத வேண்டியுள்ளது

வீமநாதருக்கு முன் வாழ்ந்தவர்

திருவிளையாடற்புராணங்களைப் பட்டியலிடுவோர், பழைய திருவிளையாடல், கடம்பவனபுராணம், சுந்தரபாண்டியம், திருவிளை யாடற் புராணம் என்று வரிசைப்படுத்துவர் இம்முறைவைப்புத தவறானது. கடம்பவன புராண ஆசிரியர் வீமநாதபண்டிதர் பரஞ்சோதி யாருக்குப் பிற்பட்டவர். வீமநாதர் தம் நூலில்,

திருந்துபுகழ்ப் பரஞ்சோதி மாமுனிவன்
சிவனருளால் செப்பும் எண்ணெண்
பொருந்திவளர் திருவிளையா டல்புரா
ணமும் இருக்கப் பின்னும் யானீர்
தரும்தரணி புகழ்பதினோர் அத்தியா
யத்தொர்வகை சாற்றப் புக்கேன்

என்று கூறியுள்ளதால் இவ்வுண்மை அறியப்படுகிறது. ஆகவே, பரஞ்சோதியார் வீமநாதருக்கு முன்பு வாழ்ந்தவர் ஆவார்.

தாயுமானவர் கி.பி. 1705இல் தோன்றி, கி.பி. 1742இல் பரிபூரணம் அடைந்துள்ளார். இதனால் தாயுமானவரைப் பரஞ்சோதியாரின் சமகாலத்தவராகக் கருத வேண்டியுள்ளது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுப்பிரதீபக் கவிராயர் பரஞ்சோதியாரின் மாணவர் ஆவார். இவர் 1736இல் கூளப்ப நாயக்கன் கதை, விறலிவிடுதூது எனும் நூல்களை இயற்றியதாகக் கூறுவர். திருவிளையாடற் புராணத்திற்குச் சாற்றுக் கவிகள் வரைந்தவர் பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் ஆவார். இவர் சுப்பிரதீபக் கவிராயருக்குப் பின்னும் வாழ்ந்துள்ளார். பரஞ்சோதியாரின் சீடர் ஒருவரால் கி பி.18ஆம் நூற்றாண்டில் திருஞானசாகரம் எனும் நூல் இயற்றப்பட்டிருக்கிறது. இவற்றால் பரஞ்சோதியார் கி.பி. 1700க்கும் கி.பி. 1760க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்பது தெளிவாகின்றது

காலச்சூழல்

இலக்கியம் அது தோன்றிய காலத்தைச் சித்திரித்துக் காட்டும். புலவர்கள் காலச் சூழலுக்கு உட்பட்டு இலக்கியத்தினை இயற்றுவர் தமிழ்ப் புலவர்களின் காலச்சூழல் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். பரஞ்சோதி முனிவர் காலத்தில் வடமொழியின் செல்வாக்கு இருந்தது. இன்று ஆங்கிலம் பெற்றுள்ள மதிப்பை அன்று வடமொழி கொண்டிருந்தது. தமிழ் நூல்களுக்கு வடமொழி நூல்களை மூலமாகக் காட்டவேண்டிய சூழல் உருவாகி இருந்தது. பல புராணங்கள் இந்நோக்கில் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டன. பரஞ்சோதியார் தாம் பாடிய புராணங்களுக்கு வடமொழி நூல்களையே மூலமாகக் கொண்டார். வடமொழிப் புராணங்களை 'உத்தம புராணங்கள்' எனப் பாராட்டவும் செய்தார்.

பரஞ்சோதியார் அகத்தியருக்குப் பாணினி மிகவும் பிற்பட்டவர் என்ற உண்மையைத் திரித்துப் பாடும் நிலைக்கு உள்ளானார். பாணினி கி.மு. 400இல் வாழ்ந்தவர். அகத்தியர் இவருக்குமுன் வாழ்ந்தவர். தலைச்சங்கப் புலவராய்த் திகழ்ந்தவர். ஆனால் இவர், இறைவன் முதலில் வடமொழியைப் பாணினிக்கு உணர்த்தியபின், அகத்தியருக்குத் தமிழிலக்கணத்தைக் கற்பித்தார் என்று பாடியுள்ளார். இதனால் இவர் வடமொழிக்கு வரம்பு மீறிய உயர்புகழ்ச்சி விளம்பரம் செய்துள்ளார் என்று குறை கூறுவர் வே.பெருமாள். பரஞ்சோதியார் அகத்தியரின் காலம் பற்றி அறியாதவர் அல்லர். காஞ்சிபுராண ஆசிரியர் சிவஞானசுவாமிகளும்,

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்குஇணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்எனில்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்

(248)

என்று கூறியுள்ளார். இவரும் அகத்தியர், பாணினி ஆகியோரின் காலத்தைத் தெரியாதவர் அல்லர்.

மன்னுமுழு வாண்டில் வடகலையும் தென்கலையும்
அன்னைமுலைப் பாலின் அறிந்தோரும்

(5)

எனத் தமிழ்விடு தூதும் வடமொழியை முன்வைத்துக் கூறியுள்ளது. எதைக் கூறினும் வலப்பகுதியை முன்கூறுவது வழக்கம். உறுப்புக்களிலும் வலப்பக்க உறுப்பையே முதலில் கூறுவர் திசையைச் சொல்லும் பொழுது வடதிசையை முன் சொல்லுவர். இதனை, 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' எனத் தொடங்கும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் உணர்த்தும். இவ்வாறு வடமொழியை முன்னதாகக் குறிப்பிடுதல் காலத்தின் அடிப்படையில் அன்று. அவ்வாறு கூறுவது ஒருமரபாகக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால், பரஞ்சோதியாருக்கு வடமொழியை வரம்பு மீறிப் புகழும் நிலை இல்லை என்பது தெளிவாகும். முனிவரின் காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் இருமொழிப் புலமையுடையவர்களாய் இருந்தனர். மலையத்துவசனை, 'வடசொற்கடல் தமிழ்க்கடல் இகந்தோன்' என அறிமுகப்படுத்துவதால், ஒருவருக்கு இருமொழிப் புலமை தேவை என இவர் கருதியுள்ளார்.

முனிவர் காலத்தில் சமண பௌத்தங்கள் வீழ்ச்சியடைந்து விட்டன. கிறித்துவம் தமிழகத்தில் பரவத் தொடங்கியது. வைணவத்தின் தாக்குதல் ஓரளவு இருந்துள்ளது. இவர் மதுரையில் வேளாளர், வணிகர், அந்தணர்களுக்குத் தனித்தனியே தெருக்கள் இருந்ததைக் குறித்துள்ளார். ஆதலால் சாதி வேறுபாடுகள் பெருகிய காலத்தில் இவர் வாழ்ந்துள்ளார் என்று கூறும்படியாக உள்ளது.

3
படைப்புகள்

பரஞ்சோதியார் இயற்றிய இலக்கியங்கள் நான்கு. அவை, வேதாரணிய புராணம், திருவிளையாடற்புராணம் எனும் இரண்டும் புராணம் என்ற வகையில் அடங்கும் திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பாவும் மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதியும் சிற்றிலக்கிய வகையைச்சாரும்

முறைவைப்பு

முனிவருடைய நூல்களில் திருவிளையாடற்புராணம் நன்கு அறிமுக மான நூலாதலால் அதனை முதலில் கூறும் வழக்கம் உள்ளது. அடுத்து, திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப்பதிற்றுப் பத்தந்தாதி, வேதாரணிய புராணம் எனும் மூன்றும் கூறப்படுகின்றன இந்நூல்களை இவ்வரிசையில் கூறுவது பொருத்தமன்று. வேதாரணிய புராணம் பாடியதற்குக் கிடைத்த பரிசைத் தம் தந்தையிடம் கொடுத்தார் என்றும், அதன் பிறகு துறவறம் ஏற்றார் என்றும் வரலாறு தெரிவிக்கிறது வேதாரணியபுராணமே முனிவர் பாடிய முதல் நூலாகும் மதுரையில் வாழ்ந்தபோது திருவிளையாடற்புராணம் பாடப்பட்டுள்ளது அவர் திருவிளையாடல்களைத் தனித்தனிப் படலமாகப் பாடியபோதும், அமைதி கொள்ளவில்லை. மேலும் திருவிளையாடல்களைப் புகழ விரும்பினார் அருச்சனைப் படலத்தின் இறுதியில் ஆறு பாடல்களில் பல திருவிளை யாடல்களைச் சுட்டினார் அதோடு அமையாது, திருவிளை யாடல்களைப் புகழ ஒருதனி நூலையும் பாடினார் அந்நூலே திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பாவாகும் மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி இறுதியில் பாடப் பட்ட தாகும். எனவே, இவருடைய படைப்புகளை வேதாரணிய புராணம், திருவிளையாடற்புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி எனப் பாடப்பட்ட முறைப்படி சொல்வதே சிறப்பாகும்

1.வேதாரணிய புராணம்

வேதாரணியம் நாகை மாவட்டத்திலுள்ள ஓரூர். இது முன்பு திருமறைக்காடு எனத் தமிழில் அழைக்கப்பட்டுள்ளது. மறைகள்

உடலெடுத்து வந்து பூசித்ததால், இத்தலத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று இது தேவாரப்பாடல் பெற்ற காவிரியின் தென்கரைத் தலங்களுள் 125 ஆவது தலம் இத்தலத்திற்குப் பத்துத் தேவாரப் பதிகங்கள் உள்ளன. இத்தலத்தின் பெருமை வடமொழியில் குமார சம்மிதை, சூதசம்மிதை, காளிகாண்டம், பிரமாண்டம், பிரம கை வர்த்தம் எனும் ஐந்து நூல்களில் கூறப்பட்டுள்ளன அகோர முனிவர் பாடிய தலபுராணத்திலும், பரஞ்சோதியார் பாடிய தலபுராணத்திலும் இத்தலத்தின் சிறப்புரைக்கப் பட்டுள்ளன பரஞ்சோதி முனிவர், இறையருளால் பதினெண் புராணத்தை நன்கு ஆராய்ந்து சூதமுனி அருளிய வடமொழிப் புராணத்தைத் தமிழால் தொகுத்தேன் என்று கூறியுள்ளார்.

புராணம் எழுந்த சூழல்

ஓர் இலக்கியத்தை ஆராய்வதற்குமுன், அது எழுந்ததற்கான காரணத்தை ஆராய்தல் இன்றியமையாததாகும் வேதாரணியத்தில் மாசிமகப் பெருவிழா ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் ஒவ்வோர் ஆண்டும் முனிவர் அதில் கலந்து கொள்வது வழக்கம் அதுபோல் ஓர் ஆண்டில் திருக்கோயில் வழிபாட்டை முடித்து, அடியார் கூட்டத்துள் ஒருவராய் அமாந்திருந்தாா அப்பொழுது அருணந்தி தேவர் என்பார், முனிவரிடம் வேதாரணிய தலபுராணத்தை வடமொழியிலிருந்து தமிழ்ப்படுத்தி அருளுமாறு விண்ணப்பித்துக் கொண்டார். முனிவர் அவருடைய வேண்டுகோளை ஏற்றுப் புராணம் பாடினார் இதனை,

அறையும்அத் தவத்தோர் கூட்டத்து அருணந்திதேவன் பூவை
உறைபரஞ்சோதி வேந்த உகந்த செந்தமிழினாலே
மறைசையம் புராணம் தன்னை வகுத்தி டவேண்டும்என்ன
இறையருள் முன்னூல் கண்ட வாறுகண்டு இயம்புகின்றேன்

(வேதா 1 67)

எனும் பாடல் எடுத்துக் காட்டுகிறது இந்நூல் மடாதிபதிகள், ஊர்ப் பொதுமக்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்பர் இதுவே, வேதாரணிய புராணம் எழுந்த சூழலாகும்

பெயர்

வேதாரணியம் திருமறைக்காடு, சத்தியகிரி, மறைவனம், நிகமவனம், ஆரணவனம், வேதவனம் எனும் பெயர்களாலும் அழைக்கப்பெறுகிறது திருஞானசம்பந்தர், ''கற்பொலிசு ரத்தின்'' எனத்தொடங்கும் பதிகத்தில் 'வேதவனம்' என்று கூறியுள்ளார் பரஞ்சோதியார் இவ்வூரை 'வேதவனம்,

மறைசை', 'மறைவனம்' எனும் பெயர்களால் குறித்துள்ளார். இவர் தலபுராணத்திற்கு வேதவனபுராணம் எனப் பெயரிட்டதை அவரே, 'வேதவன புராணம் என விளம்புவன் யான்' என்று சுட்டியுள்ளதால் உணரமுடிகிறது. வனம் என்பது சோலைகள் சூழ்ந்த ஊரைக்குறிக்கும். திருஞானசம்பந்தர் இவ்வூரை,

சோலையின் மரங்கள் தொறும் பிண்டிஇன
வண்டுமது வுண்டு இசைசெய
வேலையொலி சங்குதிரை வங்கசுறவம் கொணரும் வேதவனமே
(வேதா.1:64)

எனச் சோலைகள் சூழ்ந்த ஊராகவே பாடியிருக்கின்றார். இவ்வூர் வேதாரணியம் எனப்பட்டது பிற்காலத்திலாகும். வேதங்கள் காடாக இருந்த இத்தலத்தில் அவை இறைவனை வழிபட்ட சிறப்பால் வேதாரணியம் என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர். வேதவன புராணத்தை அச்சிட்ட ஸ்ரீலஸ்ரீ சோமாஸ்கந்தபட்டாரகர் இந்நூலைப் பதிப்பிக்கையில் வேதாரணியபுராணம் என்று பதிப்பித்துள்ளார். அதுமுதல் இந்நூல் வேதாரணியபுராணம் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

அமைப்பு

வேதாரணியபுராணம் 18 சருக்கங்களையும், 1173 பாடல்களையும் கொண்டுள்ளது. முகவுரைச் சருக்கத்தில் விநாயகர் காப்பைத் தொடர்ந்து, வேதாரணியேசுவரர், யாழைப்பழித்த மொழியம்மை, வீரகத்திவிநாயகர், சுப்பிரமணியர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் முதலியோருக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது. அடுத்து வாழ்த்து, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, புராண வரலாறு, அவையடக்கம், நூல்வழி ஆகிய செய்திகளும் அமைந்துள்ளன இதன் இறுதியில் சருக்க அடைவும் உள்ளது.

தலமேன்மையினைத் தலவிசிட்டச் சருக்கமும்,மூர்த்திச் சிறப்பை இலிங்கோற்பத்திச் சருக்கமும் எடுத்தியம்பியுள்ளன. தீர்த்தத்தின் பெருமைகளை மணிகன்னிகைச் சருக்கம்,வேதநதிச் சருக்கம், கோடி தீர்த்தச்சருக்கம் எனும் மூன்று சருக்கங்களும் உரைத்துள்ளன. வேதைத் தீர்த்தங்களில் நீராடி முத்திபெற்றோரின் கதைகளைத் தீர்த்தமுத்திச் சருக்கம் குறிப்பிடுகிறது. பெருமான் அகத்தியருக்கு மணக்கோலம் காட்டிய வரலாறு மணவாளச் சருக்கத்தில் இடம்பெற்றுள்ளது. முசுகுந்தன் சப்தவிடங்கரை நிறுவி வழிபட்டதைப் புவனிவிடங்கச் சருக்கம்

விவரிக்கிறது. இராமனைத் தொடர்ந்த வீரகத்தியை நீக்கிய வரலாறு வீரகத்திச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது. பிரமசாரி, கோலாகலன், மாவலி, சவுதாசன், விசுவாமித்திரர், குளகேசன், தனபாலன் ஆகியோர் அருள்பெற்ற வரலாறுகள் தனித்தனிச் சருக்கங்களாக அமைக்கப் பட்டுள்ளன. தேவர்கள் தொழக்கூடிய பதினாறு வகை மன்றங்கள் பற்றிய செய்திகளைத் தேவர் தொழுமன்றச் சருக்கம் குறிப்பிடுகிறது.

பரஞ்சோதியார் ஒவ்வொரு சருக்கத்தின் தொடக்கத்திலும், முன்சருக்கச் செய்தியினை நினைவு படுத்துகிறார். திருஞானசம்பந்தர் பதிகப்பயன் கூறுவது போன்று,முனிவர் ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் அச்சருக்கத்தினைப் படிப்பதனால் உளவாகும் பயனைக் கூறியுள்ளார்.

முனிவர் வேதாரணியம் உம்பர்வள நாட்டைச் சார்ந்தது என்று இப்புராணத்துள் பாடியுள்ளார் இவ்வாறு அவர் கூறியதற்குக் கல்வெட்டுச் செய்தி ஆதாரமாயிருக்கிறது. முனிவர் உம்பர் வளநாடு என்பதற்குச் சமயநோக்கில், ஒரு காரணமும் உரைத்துள்ளார். நரசிங்கமூர்த்தி தேவர்களையும், மனிதர்களையும் துன்புறுத்தினார். அப்பொழுது தேவர்களும், முனிவர்களும் அம்மூர்த்தியிடமிருந்து காத்துக்கொள்ள வேதவனத்துள் தங்கினர். உம்பர்கள் தங்கியதைக் கொண்டு, அந்நாடு உம்பர் நாடாயிற்று என்பர்.

வேதவனபுராணத்தில் சிவதருமங்கள், மார்கழி மற்றும் சிவராத்திரி வழிபாடுகள், பாவங்களின் வகைகள், கயிலையின் சிறப்பு, அகத்தியர் தபோவனத்தின் பெருமை ஆகியன விளக்கப்பட்டுள்ளன. கவுசிகன், ஏமாங்கதன், நாசிகேது முதலியோர் வழிபட்ட வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன. இதில் தவம், துறவு, இன்பம், துன்பம், தானம்,ஞானம், என்பனவற்றிக்கு விளக்கமும் பரஞ்சோதியாரால் கூறப்பட்டுள்ளன. பூவை.கலியாணசுந்தர முதலியார் இந்நூலின் சிறப்பினை,

அலங்கார கற்பனையில் தொடைபொருட் சொல்
நயம்அனைத்தும் அமையாதிக
இலங்குறவே அருளின்நல் அழகழகா ய்அந்நூலில்
இனிமை யாகும்

(3)

என எடுத்துரைப்பர். இப்புராணம் தலபுராண அமைப்பினை முழுமையாகப் பெற்றுள்ளது.

2. திருவிளையாடற்புராணம்

மதுரையில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களை விளக்குவதற்கென்று நான்கு நூல்கள் எழுந்துள்ளன. பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் முதலில் தோன்றியது. இந்நூல் 1753 செய்யுட்களை உடையது. இதனை அடுத்துத் தோன்றியது அநதாரி இயற்றிய சுந்தர பாண்டியமாகும். இது 2015 பாடல்களைக் கொண்டது. மூன்றாவதாக எழுந்த நூல் பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம் ஆகும் இம்மூன்றும் தலத்தின் பெயர் கொண்டு அமையவில்லை. இறைவன் திருவிளையாடல்களுக்கு முதன்மை கொடுக்கும் வகையில் பெயர் அமைந்துள்ளன.

திரு என்னும் சொல் அழகு, ஒளி, சிறப்பு, செல்வம், தெய்வத்தன்மை, நல்வினை, பொலிவு எனும் பொருள்களைத் தரும். திரு என்பது கண்டோரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்பார் பேராசிரியர். இச் சொல்லிற்கு வீடு என்ற பொருளும் உண்டு ''திருவழி'' என வரும் திருமந்திரச் சொல்லிற்கு வீட்டு நெறி என்று பொருளுரைப்பர். இறைவனைச் சம்பந்தர் 'நீடு விளையாடன்'' எனப் பாராட்டுவர்

......ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
(8:7:11)

என மாணிக்கவாசகரும் கூறுவர். பெருமான் ஐந்தொழில்களையும் எளிதாகச் செய்வான். எளிதாகச் செய்தலை விளையாட்டாகச் செய்தல் என்று கூறுவது வழக்கம். கடவுள் திருவிளையாடல் புரிவது, உயிர்களுக்கு வீட்டு நெறியினை வழங்குவதற்காகும். இறைவன் திருவிளை யாடல்களைக் கூறும் புராணம் திருவிளையாடற் புராணமாகும். இந்நூலை முனிவர் 'சுந்தரன் சரிதம்' எனவும் குறித்துள்ளார்.

புராணம் எழுந்த சூழல்

மதுரைமக்கள் முனிவருக்கிருந்த இருமொழிப் புலமையினை நன்கு உணர்ந்திருந்தனர். அவர்கள் அவரிடம், 'வடமொழி ஆலாசிய மான்மியத்தைத் தமிழில் பாடியருள்க' என்று வேண்டினர் பரஞ்சோதியார் ஒருநாள் மக்களின் வேண்டுகோளை எண்ணித் துயின்றார். அவர் கனவில் மீனாட்சியம்மையார் தோன்றினார். அம்மையார் அவரிடம், 'பெருமான் திருவிளையாடலைப் பாடுவாயாக' என்று கூறி மறைந்தார். முனிவர்

அம்மையின் அருளாணையின்படி, 'சத்தியாய்' எனத் தொடங்கிப் புராணத்தைப் பாடி முடித்தார். மீனாட்சியம்மையார் பார்ப்பனப் பெண்ணாகக் கனவில் வந்தார் என்றும், அவர் குலதெய்வமாகிய மாரியம்மனே மீனாட்சியாக வந்ததாகவும் கூறுவர். பரஞ்சோதியாரின் மரபினர் மாரியம்மனை வழிபடு கடவுளாகக் கொண்டவர்கள். இவர் உடன்பிறந்தோர் வேதாரணியத்தில் மாரியம்மனுக்குக் கோயில் எடுத்து வழிபட்டுள்ளனர். அங்கு ஒரு மடமும் அமைத்துள்ளனர். இக்கோயில் இன்று நாட்டுமட மாரியம்மன் கோயில் என வழங்குகின்றது. இவர் மக்களின் வேண்டுகோளை ஏற்றதை,

.. .... ஆலவாய்ப் புகழ்மை அந்தச்
சிறந்திடம் வடநூல் தன்னைத் தென்சொலால்
செய்தி என்றிங்கு
உறைந்திடும் பெரியோர் கூறக் கடைப்பிடித்து

(க வா 25)

எனும் பகுதி குறிக்கிறது. மீனாட்சியம்மையார் தம்மைப் புராணம் பாடப் பணித்து ஆட்கொண்டதைப் பரஞ்சோதியார்,

இரும்புமனம் குழைத்துஎனை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி

(க வா.5)

மாசறுத்து எமையா னந்த வாரிநீர் ஆட்டிப் பண்டைத்
தேசுரு விளக்க வல்ல சிவபரம் பரை

(5 154)

என்று போற்றியுள்ளார் இவர் புராண அரங்கேற்றத்தைச் சோமசுந்தரர் திருமுன்பில் அறுகாற் பீடத்திலிருந்து செய்தார் என்றும், அப்பொழுது மடாதிபதிகள், பெரும்புலவர்கள், அடியார்கள் ஆகியோரும் ஒருங்கிருந்தனர் என்றும் கூறுவர் புராண அரங்கேற்றத்தினை,

. கூடல்மான் மியத்தை அருந் தமிழால் பாடி...
அறுகால்பீ டத்துஇருந்து பரஞ்சோதிமுனிவர்
அரங்கேற் றினானே

எனும் சிறப்புப் பாயிரப்பாடற் பகுதி காட்டுகிறது இதனை முனிவரின் ஒருசாலை மாணாக்கருள் ஒருவர் இயற்றிருக்க வேண்டும் என்பர்.

மூலநூல்

திருவிளையாடற்புராணத்தின் மூலநூல் ஆலாசிய மான்மியம் ஆகும். அந்நூல் வடமொழியில் காந்த மகாபுராணத்தில் உள்ள ஈசசங்கிதையில் அமைந்துள்ளது என்று பரஞ்சோதியாரே கூறியுள்ளார். திருவிளையாடற் புராணம் ஆரியத்தினின்றும் மொழிபெயர்க்கப் பெற்றது ஆயினும், இதில் கூறப்படும் திருவிளையாடல்கள் ஆரியத்தில் எழுதப்படும் முன்பே மக்களிடத்தில் இருவகை வழக்கிலும் பயின்று வந்துள்ளன.

பரஞ்சோதி முனிவர், வடநூலை முதனூலாகக் கொண்டது பொருத்தமானது என்கிறார் ந.மு. வேங்கடசாமி நாட்டார். 'ஆசிரியர்காலம் ஆரியத்தினின்று தமிழ் தோன்றிற்று என்று கூறுவதைப் பெருமையாகக் கொண்ட காலம். ஆரியத்தினின்று மொழிபெயர்த்த நூலை மதிக்கின்ற காலம். வடமொழி தெய்வமொழி. தமிழ் அதன் வழிமொழி; இழிமொழி என்று எண்ணிய காலம். ஆரியர்கள் நம்நாட்டுக் கதைகளை ஆரியத்தில் எழுதி, இவை முன்னரே எம்மொழியில் இருக்கின்றன என எடுத்துக் காட்டிய காலம். அக்காலத்தில் வாழ்ந்த முனிவர் அதனை முதல் நூலாகக் கொள்ளல் மிகவும் பொருத்தமுடையதாகும்'. இந்நூல் ஆரிய மொழி பெயர்ப்பாயினும் இதில் கூறப்படும் கதைகள் தமிழ்நாட்டில் நிகழ்ந்தவை. முனிவர் புராணம் பாடுவதற்கு நம்பி திருவிளையாடல், கல்லாடம், தேவாரம், திருவாசகம், தமிழ் விடுதூது, மதுரைக் கலம்பகம் முதலிய வற்றிலுள்ள திருவிளையாடல் பற்றிய குறிப்புக்களும் துணையாகி இருக்க வேண்டும்.

புராண அமைப்பு

திருவிளையாடற்புராணம் மூன்று காண்டங்களையும் 68 படலங்களையும் கொண்டுள்ளது. 3363 விருத்தப்பாக்களை உடையது. இதில் 64 திருவிளையாடல்களும் 64 படலங்களாக அமைக்கப் பட்டுள்ளன. தலம், தீர்த்தம், மூர்த்திச் சிறப்புக்கள் தனித்தனிப் படலங்களில் கூறப்பட்டுள்ளன. இறுதியில் அருச்சனைப் படலம் உள்ளது. நூலின் முகப்பில் காப்பு, வாழ்த்து, நூற்பயன், கடவுள் வாழ்த்து, பாயிரம், நூல் செய்தற்குரிய காரணம், திருவிளையாடல் தொகை, அவையடக்கம், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, திருக்கயிலாயச் சிறப்பு, புராண வரலாறு முதலியன இடம் பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்து 20 பாடல்களைக் கொண்டுள்ளது. இதிலுள்ள பாடல்கள் திருக்கோயில் வழிபாட்டிற்குரிய துதிகளாக உள்ளன. நாட்டுச் சிறப்பில் தமிழின் மேன்மையும், நகரச் சிறப்பில் சைவர்களின் திறமும் பேசப்பட்டுள்ளன.

1. மதுரைக் காண்டம்

மதுரைக் காண்டத் தொடக்கத்தில் தலம், தீர்த்தம், மூர்த்திச் சிறப்புகளும், பதிகமும் விளங்குகின்றன. இக்காண்டம் 18 படலங்களை உடையது இந்திரனுக்கும், வெள்ளையானைக்கும் அருள்புரிந்த வரலாறுகள் முதலிரண்டு படலங்களில் வருகின்றன இவை விண்ணுலகில் நிகழ்ந்தவற்றிற்கு மண்ணுலகில் தீர்வுகண்ட வரலாறுகளாகும். இறைவனின் அருளாணையால் நகரம் உருவாக்கப்பட்டதைத் திருநகரம் கண்டபடலம் உணர்த்துகிறது. சிவபெருமான் சுந்தரபாண்டியனாகத் தோன்றி, தடாதகையாரை மணந்ததுவும், உக்கிரகுமாரனைத் தோற்றுவித்துச் சிறப்பித்ததுமான நிகழ்வுகள் தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப்படலம் மேருவைச் செண்டால் அடித்த படலம் ஈறாக உள்ள 12 படலங்களில் இடம்பெற்றுள்ளன. இறைவனின் உறவுமுறை தொடர்பான நிகழ்வுகள் யாவும் மதுரையில் நடைபெறுவதால் இப்பகுதிக்கு மதுரைக்காண்டம் எனப் பெயரிடப் பட்டுள்ளது பாண்டியர்களின் வழிமுறை தழைக்க, இறைவன்தம் குடும்பத்தோடு வந்து அருள்புரிந்தமை இக்காண்டத்தால் புலனாகிறது.

2. கூடற் காண்டம்

இது 30 படலங்களைக் கொண்டுள்ளது சிவபெருமானுடைய ஏவலால் நான்கு மேகங்களும் மதுரையில் நான்கு மாடங்களாகக் கூடின இது இக்காண்டத்தின் முதற் படலமாகும் இக்காண்டம் தொடக்க நிகழ்ச்சியைக் கொண்டு, கூடற்காண்டம் எனப்பட்டது. இறைவன் எல்லாம் வல்ல சித்தரானதும், கல்லானைக்குக் கரும்பருத்தியதுமான வரலாறுகள் இக்காண்டத்தில் அமைந்துள்ளன. இறைவன் ஆதரவற்றோர்க்கு அருளுபவன் என்பது, விருத்த குமார பாலரானது, பழியஞ்சியது, அங்கம் வெட்டியது, மாமனாக வந்து வழக்குரைத்தது ஆகிய திருவிளையாடல்களில் விளக்கப்பட்டுள்ளன கடவுள் அரசர்களையும், மக்களையும் பிறசமயத் தாக்குதலில் இருந்து காப்பவன் என்பதற்கு யானை எய்தது, நாகம் எய்தது, மாயப்பசுவை வதைத்தது ஆகிய வரலாறுகள் சான்றுரைக்கின்றன பெருமான் எளிவந்து அருளுபவன் என்பதை வளையல விற்ற படலமும், விறகுவிற்ற படலமும் சுட்டுகின்றன பாணபத்திரன், அவன் மனைவி ஆகியோருக்கு அருளிய பாங்கு இக்காண்டத்தில் அமைந்துள்ளது. பன்றி, கரிக்குருவி, நாரை எனும் அஃறிணை உயிர்களுக்கு அருளிய விதத்தினை இறுதியிலுள்ள நான்கு படலங்கள் விவரிககின்றன. இறைவழிபாடு பிரமகத்தி பாவத்தை நீக்கும் என்பது, மாபாதகம் தீர்த்த படலத்தாலும், வரகுணனுக்குச் சிவலோகம்

காட்டிய படலத்தாலும் அறியவருகிறது. இறைவன் எல்லா உயிர்களுக்கும் அருளுபவன் என்பதை இக்காண்டம் மிகவும் வலியுறுத்துகிறது.

3. திருவாலவாய்க்காண்டம்

திருவாலவாய்க் காண்டத்தில் 16 படலங்கள் உள்ளன. பெருமானின் திருக்கரத்திலிருந்த பாம்பு, நகரின் எல்லையைக் காட்டியதால், நகரம் அப்பாம்பின் பெயரால் திருவாலவாய் எனப்பட்டது. இந்நிகழ்ச்சியே இக்காண்டத்திற்குத் தொடக்கமாக அமைவதால், திருவாலவாய்க் காண்டம் எனப் பெயர் பெற்றது. இறைவன் தமிழ் தொடர்பாக நிகழ்த்திய திருவிளையாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. சிவன் மாணிக்கவாசகர் பொருட்டுப் புரிந்த திருவிளையாடல்கள் நான்கு படலங்களில் சொல்லப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் மதுரையில் நிகழ்த்திய அற்புதங்கள் இரண்டு படலங்களில் கூறப்பட்டுள்ளன. அவர் திருப்புறம் பயத்தில் நிகழ்த்திய அற்புதம் ஒரு படலத்தில் குறிக்கப்பட்டுள்ளது தமிழுக்கும் சைவத்திற்கும் சிறப்புச் சேர்க்கும் செய்திகள் இக்காண்டத்துள் மிகுதியாகப் பதிவாகியுள்ளன.

அருச்சனைப் படலம்

பரஞ்சோதியார் அருச்சனைப் படலம் என்ற ஒன்றை அமைத்துள்ளார் இப்படலம் பழைய திருவிளையாடலில் இல்லை. வசிட்டர் முதலிய முனிவர்கள் அகத்தியர் வழி இறைவன் திருவிளையாடல்களைக் கேட்டு மகிழ்ந்தனர் பின்னர் அவர்கள் சோமசுந்தரனை வழிபட வேண்டும் என்ற விருப்பத்தை அகத்தியரிடம் தெரிவித்தனர் அகத்தியர் அவர்களைக் கயிலையில் இருந்து அழைத்துக் கொண்டு, வான்வழியே மதுரைக்கு ஏகினார் வழியில் சிவத்தலங்கள் பலவற்றையும் காட்டி விளக்கம் கூறினார் மதுரையை அடைந்ததும் பொற்றாமரையில் நீராடினர். திருக்கோயிலுட் சென்று சோமசுந்தரனையும், மீனாட்சியம்மையையும் வணங்கினர். இறைவன் இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, அவர்களுக்குக் காட்சி கொடுத்தான். இவ்வரலாறு இப்படலத்தில் வந்துள்ளது. இதில் தேவாரப் பாடல்பெற்ற ஐம்பது தலங்கள் சுட்டப்பட்டுள்ளன. இப்படலத்தில் திருவிளையாடல்களைப் போற்றும் வகையில் ஆறு செய்யுட்கள் உள்ளன.

தலபுராணப் போக்கு

பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணத்தின் முற்பகுதியைத் தலபுராண அமைப்போடு பாடியுள்ளார். இதில் தலம், தீர்த்தம்,மூர்த்தி

விசேடப்படலங்கள் அமைந்துள்ளன. இந்நூலைத் தலபுராணமாகக் காட்ட வேண்டி, இராமன் வழிபட்டதாக ஒரு வரலாற்றையும் இணைத்துள்ளார். மாயப்பசுவை வதைத்த படலத்தில் பதின்மூன்று பாடல்களில் இவ்வரலாறு வந்துள்ளது. இராமன் அகத்தியன் வழி மதுரையின் சிறப்பை அறிந்தான் என்றும், பின்னர் பொற்றாமரையில் நீராடி, சோமசுந்தரனை வழிபட்டான் என்றும் கூறியுள்ளார். அப்பொழுது இறைவன்,

இரவிதன் மரபின்வந்த இராமகேள் எமக்குத் தென்கீழ்
விரவிய திசையிற்போகி விரிகடல் சேது கட்டிக்
கரவிய வுள்ளக்கள்வன் கதிர்முடி பத்தும்சிந்தி
அரவமே கலையினாளை அருஞ்சிறை அழுவ நீக்கி

(34)

மீண்டுநின் அயோத்தி எய்தி விரிகடல்உலகம் பன்னாள்
ஆண்டினிது இருந்து மேனாள் வைகுண்டம் அடைவாயாக

(35)

என்று அசரீரியாக மொழிந்ததாகப் பாடுகிறார். இராமன் பெருமானின் ஆணைப்படி செயல்பட்டதாகவும் கூறுகிறார் மதுரைப் பெருமானை வழிபட்ட பின்பு இராவணவதம் நிகழ்ந்ததற்கு வேறு சான்றுகள் இல்லை தேவாரத்திலும் இக்குறிப்புக் காணப்பட்டிலது. சொக்கநாதரை இராமன் வழிபட்டதாகக் காட்ட எண்ணி, முனிவர் இவ்வாறு பாடியிருக்கிறார். இதனாலும் திருவிளையாடற் புராணத்தைத் தலபுராணம் என்று குறிக்க வேண்டியுள்ளது.

காப்பியப் பண்புகள்

காப்பியத்தில் இடம்பெறும் நகர, நாட்டுப்படலங்கள், வருணனைகள், அணிகள், கதைகள் ஆகியன புராணத்திலும் அமைந்துள்ளன. அதனால் புராணமும் காப்பியம் எனக் கூறப்பட்டது. 'புராணமும் காப்பியம் என்று கருதப்படும்' எனப் பிரபந்த மரபியல் உரைக்கிறது. தமிழிலுள்ள சில தலபுராணங்கள் காப்பியப் பண்புகளைப் பெற்றுள்ளன. தணிகை புராணம், திருவிளையாடற்புராணம் ஆகியனவற்றுள் காப்பியப் பண்புகள் காணப்படுகின்றன.

1. தொடக்கம்

காப்பியத்துள் வாழ்த்து, வணக்கம், வருபொருள் முதலியன தொடக்கப் பகுதியாக அமையும். திருவிளையாடற்புராணத்துள் 'மல்குக

வேத வேள்வி' எனத்தொடங்கும் வாழ்த்து உள்ளது. கடவுள் வாழ்த்துப் பகுதியில் இறைவணக்கமும், அடியார் வணக்கமும் சொல்லப்பட்டுள்ளன. பதிகத்தில் முனிவர் வருபொருள் உரைத்துள்ளார்.

2. நாற்பொருள்

இலக்கியத்தின் பயன் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கையும் அடையச் செய்தலாகும் பெருங்காப்பியம் இப் பொருள்களைக் கொண்டு விளங்க வேண்டும் திருவிளையாடற் புராணம் நாற்பொருளையும் நவின்றுள்ளது.

அறம்

இறைவன் அருளிப்பாடுகள் அறத்தின் வழிப்பட்டது 32 அறங்களுள் பசித்தோர்க்கு உணவிடல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், வேதம், ஆகமம், முத்தமிழ் பயிறறுவித்தல், பறவைக்கு நூல் முறை தெரித்தல், மகளிர்க்கு ஆபரணம் அருளல் எனும் அறங்களை இறைவன் செய்துள்ளான் இந்நூலில் பாடப்பட்டுள்ளன

பொருள்

பரம்பொருளுக்கு உலகியற் பொருள் தேவையில்லை ஆயினும்,பரமன் மனிதர்க்குப் பொருளளித்து உதவியுள்ளான் பொருள் நல்வினைக்குரியதாக வேண்டும் என்ற கருத்து இரண்டு படலங்களில் வலியுறுத்தப் பெறுகிறது

இன்பம்

தடாதகையார் கயிலைக்குச் சென்று இறைவனைக் கண்டதாகப் பாடுவர் அவ்விடத்தில் காட்சி இன்பம் சுட்டப்பெறுகிறது அம்மைக்குக் கோலம் புனைவதில் தோழியர் இன்பங்கண்டனர். தருமிக்குப்பொற்கிழி அளித்த படலததில் இன்பம் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளது.

வீடு

காபபியங்களில் தலைவன் இறுதியில் வீடுபெறுவதாகக் கூறப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலிய காப்பியங்களில் இவ்வகையில் வீடுபேறு குறிக்கப்பட்டுள்ளது சுந்தரர் வெள்ளையானை மீதேறிக் கயிலை செல்வதாகப் பெரியபுராணம் கூறுகிறது இப்புராணத்தில் இறைவன் உயிர்களுக்கு வீடுபேறு வழங்கும் சிறப்புக் கூறப்படுகிறது.

கௌரி, நாரை, கார்த்திகைப் பெண்கள், அடியார்க்கு நல்லான், வரகுணன், அரிமர்த்தனன், வந்தி ஆகியோர் வீடுபேறு அடைந்தமை இந்நூலில் குறிக்கப்பெற்றுள்ளது.

3. தன்னிகரில்லாத தலைவன்

காப்பியத் தலைவன் தன்னிகரில்லாத தலைவனாக விளங்குவான். மனிதன் விதிக்கு ஆட்படுபவனாதலால், அவன் இவ்விலக்கணத்திற்குப் பொருத்தமுடையவன் அல்லன். தன்னிகரில்லாதவன் இறைவன் ஒருவனேயாவான். இதனை முனிவர்,

தன்னிகர் உயர்ச்சி இல்லான் காப்பியத் தலைவனாக
முன்னவர் மொழிந்த தேனோர் தமக்கெல்லாம் முகமன் அன்றோ
அன்னது தனதேயாகும் அண்ணலே பாண்டி வேந்தாய்
இந்நகருக்கு அரசன் ஆவான் இக்கவிக்கு இறைவன் ஆவான்
(3:108)

எனப்பாடுவர்.

4. மலைவளம்

காப்பியங்களில் காப்பியத்தலைவன் வாழும் மலையின் வளத்தினைச் சிறப்பிப்பது மரபு. முனிவர் திருவிளையாடற் புராணத்தில் 'திருக் கயிலாயச் சிறப்பு' எனும் பகுதியினை அமைத்து அம்மலையின் பெருமைகளை உரைத்துள்ளார்

5. நாடும் நகரமும்

பரஞ்சோதி முனிவர் நாட்டு நகரப் படலங்களின் மூலம் பாண்டி நாட்டின் வளத்தை விளக்கியுள்ளார். புராணத்தில் பொருநையின் சிறப்பை முதலில் கூறுகிறார். பாண்டி நாட்டை அம்மை, இறைவன், முருகன் எனும் மூவரும் ஆண்டதால் 'மூன்று தலைவரால் முறை செய்தநாடு' என்று கூறினார். மதுரையிலுள்ள பொழில்கள், அகழிகள், மதில்கள், தெருக்களின் அமைப்பு, திருக்கோயிலின் சிறப்பு ஆகியவற்றையும் வருணித்துள்ளார்.

6. பருவமும் இருசுடர் தோற்றமும்

காப்பியங்களில் கதைச்சூழலுக்கேற்ப வருணனைகள் இடம்பெறும். திருவிளையாடற் புராணத்தில் 'இளவேனில்', முதுவேனில்', 'மாலைப் பொழுது', சூரியனின் எழுச்சி', 'சந்திரனின் தோற்றம்' முதலியவற்றின் வருணனைகள் அமைந்துள்ளன.

7. நன்மணம்

காப்பியத்தில் காப்பிய நாயகனின் திருமணமும்,அவனோடு தொடர்புடையவர் திருமணமும் கூறப்படும். இவ்வகையில் தடாதகைப் பிராட்டியார், உக்கிரகுமாரன், வணிகப்பெண் ஆகியோரின் திருமண நிகழ்முறைகள் திருவிளையாடற் புராணத்துள் குறிக்கப்பட்டுள்ளன.

8. முடிகவித்தல்

தடாதகையார், உக்கிரகுமாரன் எனும் இருவரும் முடிசூட்டிக் கொண்ட வரலாறு இந்நூலில் வந்துள்ளது.

9. இன்ப நிகழ்வுகள்

காப்பியப் புலவர்கள் காப்பியத் தலைவனுடைய வாழ்க்கையில் பொழில் நுகர்தல், நீர்விளையாடல் முதலிய இன்ப நிகழ்வுகளை இடம்பெறச் செய்வர். இந்நூலில் புதல்வரைப் பெறுதல் ஒன்றே இறைவனோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது இறைவனுடைய இன்பம் வரம்பிலாதது; சிறிதும் துன்பமும் இல்லாதது மனிதன் பெறும் இன்பம் துன்பம் கலந்தது ஆகவே மனிதனின் இன்பச் செயல்களை இறைவன் நிகழ்த்தியதாகக் கூறவில்லை. ஆயினும் துணைக் கதாப்பாத்திரங்களின் வழி இச் செயல்களை முனிவர் விளக்கியுள்ளார். பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், மதுவுண்டு களித்தல், புலவியிற் புலத்தல், கலவியிற் கலத்தல் எனும் நிகழ்வுகள் தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்தில் உரைக்கப்பட்டுள்ளன.

10. போரும் வெற்றியும்

தடாதகைப் பிராட்டியாரின் வெற்றி திருமணப் படலத்தில் இயம்பப்பட்டுள்ளது. சோமசுந்தரன் சித்தனோடு இருபது நாழிகை போரிட்டதாகக் கூறுவர். சுந்தரேசபாதசேகரனுக்கும், ஆயிரம் பரிக்கோர் சேவகனுக்கும் நடந்த போரில் இறைவன் பாண்டியனுக்கு வெற்றியினைத் தேடித் தந்தான் என்பர். பெருமான் விக்கிரமசோழன் மீது பேரம்பைச் செலுத்தியதால் வங்கியசேகரன் வெற்றியடைய முடிந்தது. இறைவன் அம்பினால் சோழனுடைய வீரர்கள் மாய்ந்ததைப் பதின்மூன்று பாடல்களில் வருணிப்பர் முனிவர்.

11. கிளைக் கதைகள்

காப்பியத்தில் கட்டாயமாக இடம்பெற வேண்டிய உறுப்பு கிளைக் கதையாகும் மூலக் கதைகளுக்குக் கருத்து விளக்கமாகவும், காப்பிய மாந்தரை உயர்த்தவும் கிளைக்கதைகள் பயன்படுத்தப்பெறுகின்றன. ததீசி, நகுலன் ஆகியோரின் வரலாறுகள் கிளைக் கதைகளாக வந்துள்ளன.

12.நூற்பிரிவு

காப்பியத்தின் பெரும்பிரிவு காண்டம் எனப்படும். சிறு பிரிவு படலம், சருக்கம், இலம்பகம் என்பவற்றில் ஏதேனும் ஒன்றைப் பெறும். திருவிளையாடற் புராணத்தின் பெரும் பிரிவு காண்டம் எனவும், சிறுபிரிவு படலம் எனவும் பெயர் பெற்றுள்ளது. திருவிளையாடற் புராணம் மதுரை ஒன்றையே சுற்றியமையினும் அதன் காண்டங்கள் அந்நகரின் மூவேறு பெயரால் பகுக்கப்பட்டுள்ளன. இவை திருவிளையாடற் புராணத்தில் அமைந்த காப்பியப் பண்புகளாகும். ஆகவே, இந்நூலை காப்பியப் பண்புகள் நிறைந்த தலபுராணம் என்று கூறலாம்.

சிற்றிலக்கியங்கள்

திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா

போற்றிக் கலிவெண்பா என்பது இறைவன், தொண்டர் ஆகியோரைப் போற்றுவதைப் பாடுபொருளாகக் கொண்ட நூலாகும். இது கலிவெண்பா யாப்பில் அமைந்தது. கலிவெண்பா வெண்டளை தழுவி ஈற்றடி முச்சீரான் முடிவது. நக்கீரதேவநாயனார் இயற்றிய போற்றித் திருக்கலிவெண்பாவே இவ்வகையில் முதல் நூலாகும். அடுத்து எழுந்தது பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பாவாகும் தமிழில் போற்றிக் கலிவெண்பா எனும் பெயரில் பத்து நூல்கள் உள்ளன.

நூலமைப்பு

முனிவர் நக்கீரதேவரைப பின்பற்றியே இந்நூலை இயற்றியுள்ளார் நக்கீரர் பெருமானின் அருளை விறல், நலம், திறம், வரம் எனும் சொற்களால் குறிப்பர். முனிவர் அருள், கருணை, விறல், சயம், முறை, நடை, அறம், நலம், குணம், புகழ், நிலை, சீர், மாண், வரம், திறம் எனும் சொற்களால் சுட்டுவர். இவர் 64 திருவிளையாடல்களையும் ஒவ்வொன்றாகக் கூறிப் போற்றியுள்ளார். அதனால் இவ்விலக்கியம் குட்டித் திருவிளையாடற் புராணம் எனக் கருதத்தக்கது

மதுரைப்பதிற்றுப் பத்தந்தாதி

ஒரு பாடலின் ஈற்றடியின் இறுதிச் சீர் அடுத்த பாடலின் முதற்சீராக அமைவது அந்தாதி ஆகும். அந்தாதி எழுத்து, சீர், பா, அசை, எண்ணிக்கை, பொருள் எனும் அடிப்படையில் பகுக்கப்படுகிறது அந்தாதி நூலில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு பதிற்றுப்பத்தந்தாதி, நூற்றந்தாதி, பதிற்றந்தாதி என வகைப்படுத்தலாம்.

பதிற்றுப்பத்தந்தாதி சந்தவேறுபாட்டால் அறுசீர் ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கொச்சகக்கலிப்பா, எழுசீர் ஆசிரியவிருத்தம், கலிநிலைத் துறை, எண்சீர் ஆசிரிய விருத்தம் எனும் இவை முதலிய பத்துவகைச் செய்யுள்களால் ஆனது இதில் நூறு பாடல்களும் அந்தாதியாகத் தொடரும். இதன் பெயரைக் கொண்டு இவ்வகை நூலும் நூறு பாடல்களை உடையது என அறியலாம் தமிழில் பதிற்றுப்பத்தந்தாதி எனும் பெயரில் 85 நூல்கள் உள்ளன. இவ்வகை நூல்கள் பெரும்பாலும் ஊர்ப்பெயரைப் பெற்றிலங்கும். அதிவீரராமர் பாடிய திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி இவ்வகையில் முதல் நூலாக விளங்குகிறது பரஞ்சோதியாரால் பாடப்பெற்றது மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதியாகும்

நூலமைப்பு

மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதியில் சித்திவிநாயகர் காப்பு முதலில் அமைந்துள்ளது இது நூறுபாடல்களைக் கொண்டது முனிவர் மூன்று பாடல்களில் மதுரையின் இயற்கை வளத்தினை வருணித்துள்ளார். ஒரு பாடலில் மதுரேசனைப் பரம்பரர்,சஞ்சலர், நிமலர், சிரஞ்சனர், சொக்கர் எனும் ஐந்து பெயர்களால் விளித்துப் போற்றியுள்ளார் இந்நூலில் ஆறு அழைத்தது, விறகுவிற்றது, நாரை, பன்றி, கரிக்குருவி எனும் மூன்றிற்கும் அருளியது, பழியஞ்சியது, பிரம்படிபட்டது எனும் ஏழு திரு விளையாடல்கள் குறிக்கப்பட்டுள்ளன

பரஞ்சோதியார் இரண்டு பாடல்களின் மூலம் மனிதரை ஆற்றுப்படுத்துகின்றார்

பிறந்திறந்து உழல்வீர் நீங்கள் பிறதெய்வம் தொழுதோ உய்வீர்
கறந்தருந் தினரும் உண்டோ கற்பக முலையைக் கையால்
அறந்துறந் தவர்க்குஎய் தாத ஆலவாய்ச் சொக்கர் தாளை
மறந்திருந் தினிக்கெ டாமல் வணங்குவீர் வணங்கு வீரே

(29)

எனும் பாடல் குறிக்கத்தக்கது. பரஞ்சோதியார் இந்நூலை வாழ்த்துப் பாடலோடு முடித்துள்ளார்.

4
இலக்கியக் கொள்கைகள்

முனிவரின் படைப்புக்களைத் தொகுத்து ஆராய்கையில் அவருடைய இலக்கியக் கொள்கைகள் வெளிப்படுகின்றன தமிழிற்கு உயர்வளித்தல், இலக்கிய மரபுரைத்தல், சமய நோக்கம் கொள்ளல், திருவிளை யாடல்களைப் போற்றல், புராண நுட்பம் கூறல், புத்தாக்கம் செய்தல், எளிய சொற்களை ஆளுதல் என்பன முனிவருடைய கொள்கைகளாகும்.

1. தமிழிற்கு உயர்வளித்தல்

பரஞ்சோதி முனிவர் தமிழ்மீது பெரும் ஈடுபாடு கொண்டவர் அவர் தம் படைப்புக்களில் தமிழைச் சிறப்பிக்கத் தவறவில்லை. தமிழை முத்தமிழ், தண்டமிழ், உரைபெறு தமிழ், செந்தமிழ்,அருந்தமிழ், ஒண்தமிழ், வண்டமிழ், இன்தமிழ் என்று புகழ்ந்துள்ளார் பாண்டி நாட்டையும் மதுரையையும் குறிக்கும் பொழுது தமிழ் எனும் அடை கொடுத்தப் பாடியுள்ளார். நாட்டைத் தீந்தமிழ் வழங்கும் திருநாடு என்றும் மதுரையைத் தெள்ளுதமிழ் உயர் மதுராபுரி, முத்தமிழ் மதுரை, தெளிதமிழ்க்கூடல், தமிழ்க்கூடல், முத்தமிழ் ஆலவாய், தண்தமிழ் ஆலவாய் என்று உயர்த்திப் பாடியுள்ளார் முனிவர் இறைவனையும் தமிழையும் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார் இறைவனைத் தண்டமிழ் மூன்றும் வல்லோன் என்கிறார். மேலும், சங்கத்தார் சங்கையறத் தேற்றும் தமிழ் போற்றி, இனிக்கும் தமிழ் மதுரேசன், புகழும் தமிழ் மதுரேசர், தமிழ் பகரும் பசுபதி என்று தமிழோடு இறைவனை இணைத்துப் பாடியுள்ளார் அகத்தியனை அருந்தமிழ்க் கொண்டல் என்கிறார் புலவர்களின் செய்யுட்களைக் கீரன் முத்தண்டமிழ், கபிலன் தமிழ், பரணன் தமிழ் என்றே குறித்துள்ளார். தேவாரத்தை மூவர்வாய்துதி என்றும், வேதத்தமிழ் என்றும் சிறப்பித்துள்ளார் மாணிக்கவாசகரை வாதவூர்த் தமிழ்க்கடல் என்று புகழ்வர் சங்கப்பலகை கொடுத்த படலம், தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம், கீரனைக் கரையேற்றிய படலம்,கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம், சங்கத்தார் கலகம் தீர்த்த படலம், இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் எனும் ஆறு படலங்களில் தமிழின் சிறப்பை எடுத்தோதியுள்ளார்.

இத்திறத்தால் திருவிளையாடற் புராணத்தைத் தமிழ்ச் சுவை சொட்டச் சொட்டப் பாடியுள்ளார் என்று முனிவரைப் புகழ்ந்தார் தெ.பொ.மீ.

பிற மொழிகளுக்கு இல்லாத சிறப்பு தமிழிற்கு உண்டு. அது இறைவனே தமிழை ஆராய்ந்தது ஆகும். ஆகவே, தமிழை இலக்கண வரம்பில்லாத சில மொழிகளைப் போலக் கருதக்கூடாது என்கிறார் முனிவர். இதனை,

கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து
பண்ணு றத்தெரிந்து ஆய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ

(87)

எனும் பாடல் விளக்குகிறது. தமிழின் அருமையினை மதுரையிலுள்ள நீரும், நெருப்பும் அறியும் என்கிறார்.

யாரறிவார் தமிழருமை என்கின் றேன்என்
அறிவீனம் அன்றோ வுன் மதுரைமூதூர்
நீரறியும் நெருப்பறியும்

(அந்.45)

2. இலக்கிய மரபுரைத்தல்

இலக்கிய மரபினை இலக்கண நூல்கள் எடுத்துக் காட்டும். ஆனால் முனிவர், மரபு தொன்று தொட்டுப் போற்றப்பட வேண்டும் என்ற நோக்கில் இலக்கிய மரபுகள் சிலவற்றையும் சுட்டிச் செல்கின்றார். கவிதையின் இலக்கணம், இலக்கிய அமைவு, நூற் பொருள் புலப்படும் விதம், காப்பியத் தலைவனை அடையாளப்படுத்துதல் எனும் மரபுகளைப் பதிவு செய்துள்ளார்.

அ. கவிதையின் இலக்கணம்

ஒரு நல்ல கவிதை, பொருள் மயக்கமின்றி படிப்பவரைத் தெளிவடையச் செய்ய வேண்டும் பொருள் விளங்காத கவிதைகள் மக்கள் மனதில் நிலைத்து நில்லாது. முனிவர் கவிதையின் தன்மையை வெளிப்படுத்தக் கருதினார். வையையின் நிலையைக் கவிதையோடு ஒப்புமைப்படுத்திக் காட்டினார். வையை கல்லாதவருடைய கவிபோலக்

கலங்கியிருந்தது என்றும் நூல் வல்லார் கவிபோலப் பல துறைகளிலும் சென்று பொருள்களை ஆழ்ந்து தெளியச் செய்தது என்றும் உவமை வழி விளக்கம் தந்துள்ளார். அன்னக் குழியும் வைகையும் அழைத்த படலத்தில்,

கல்லார் கவிபோல கலங்கி கலை மாண்ட கேள்வி
வல்லார் கவிபோல் பலவான் துறை தோன்ற வாய்த்து
செல்லாறு தோறும் பொருள் ஆழ்ந்து தெளிந்து தேயத்து,
எல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ள இறுத்தது அன்றே

(22)

என்று பாடியுள்ளார். திறம்படக் கல்லாதவர் கவிதை சிறப்படையாது என்பதும், கசடறக் கற்றவரின் கவிதை மதிப்படையும் என்பதும் இதன் மூலம் தெரிய வருகிறது.

ஆ. இலக்கிய அமைவு

ஓர் இலக்கியம் எவ்வகையில் அமைய வேண்டும் என்பதைத் தொல்காப்பியமும், நன்னூலும் விவரித்துள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருள் அமைவு, பொது, சிறப்பு எனும் பாயிரங்கள், குறிப்பு, பொழிப்பு எனும் இரு உரைகளுக்கு இடம் தரல், உடன்படல் முதலிய எழுவகை மதங்கள், குன்றக்கூறல் முதலான எழுவகை குற்றங்கள் இல்லாமை, பத்து அழகுகள், எண்ணான்கு உத்திகள் எனும் உறுப்புக்களைக் கொண்டிலங்க வேண்டும் இச்செய்திகளை முனிவர்,

இருவ கைப்புற உரைதழீ, எழுமத மொடுநாற்
பொருளொ டும்புணர்ந்து ஐயிரு குற்றமும் போக்கி
ஒருவில் ஐயிரண்டு அழகொடும் உத்தியெண் ணான்கும்
மருவு மாதிநூ லினைத்தொகை வகைவிரி முறையால்

(54:20)

எனும் பாடலில் தொகுத்துக் கூறியுள்ளார்.

இ.பொருள் புலப்பாடு

நெற்கதிர் வெளிப்பட்டுத் தோன்றுவதற்கு நூற்பொருள் புலப்படும் திறத்தை ஒப்புமையாக்கி விளக்கியுள்ளார் முனிவர் நெற்கதிரானது, நூலின் பொருள் உள்ளடங்கி இருப்பது போன்று, கருவை அடக்கி வைத்து, பிறகு அந்நூலின் கருத்துப் புலப்படுதல் போலக் கருவைச் சிறிதளவு வெளிப்படுத்தும். நூலின் உரை, நூற் பொருளைத்

தெளிவாக்குவது போன்று பயிர் கதிரை முழுமையாகத் தோற்றுவிக்கும் என்று திருநாட்டுச் சிறப்பில் குறிப்பிட்டுள்ளார்.

புரை அறஉணர்ந் தோர் நூலின் பொருள் உள் அடங்கி அந்நூல்
வரையறை கருத்தும் ஆன வளர்கருப் புறம்பு தோன்றி
கரையமை கல்வி சாலாக் கவிஞர் போல் இறுமாந்து அந்நூல்
உரையென விரிந்து

(24)

என்பது அப்பாடலாகும்.

ஈ. காப்பியத்தலைவன்

ஒரு காப்பியத்தின் தலைவன் தன்னிகரில்லாத தலைவனாக விளங்க வேண்டும் என்று தண்டியலங்காரம் குறிப்பிடுகிறது. முனிவர், சிவபெருமானே தம் காப்பியத்திற்குத் தலைவன் என்கிறார். மற்ற காப்பிய ஆசிரியர்கள் காப்பியத் தலைவனை இவ்வாறு சுட்டவில்லை ஆகவே, காப்பியத் தலைவனை அடையாளப் படுத்துவது இவருடைய கொள்கைகளுள் ஒன்றாகத் தெரிகிறது.

3.சமய நோக்கம் கொள்ளல்

படைப்பாளிகள் தாம் கொண்டுள்ள நோக்கத்தைக் கருத்து முதலான புனைவுகளில் இயைபுபடுத்தி விளக்குவர். பரஞ்சோதி முனிவரும் இத்தன்மையினைக் கொண்டுள்ளார். இயற்கையை வருணிக்கும் போதும் அவர் சைவ நலம் தோன்றும் வகையில் பாடியுள்ளார். ஒரு பாடலில் மேகத்தின் செயலை வருணிக்கிறார். மேகம் நீறணிந்த சிவபெருமானின் நிறம்போல இருந்தது என்றும், அது கடலைக் குடித்து நீரை முகந்து வந்தபோது உமையவள் நிறம்போன்று காட்சி தந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தெய்வ நாயகன் நீறணி மேனிபோல் சென்று
பௌவம் மேய்ந்து உமை மேனிபோல் பசந்து பல் உயிர்க்கும்
எவ்வம் மாற்றுவாம் சுரந்திடும் இன்னருள் என்னக்
கௌவை நீர்சுரந்து எழுந்தன கனைகுரல் மேகம்

(நாட்.2)

என்பது அவ்வருணனையாகும்.

பொருநை வெள்ளம் கலங்கி இருந்ததற்கு ஒரு காரணம் கற்பிக்கிறார் முனிவர். சிவனைப் பரம்பொருள் என்றும், வெண்ணீற்று நெறியே வீடென்றும் தெளியாத அறிவிலியின் உள்ளம் எனக் கலங்கியிருந்தது என்கிறார். அது பின்பு, முறைப்படி அறிவு பெற்றார் போலத் தெளிந்தது என்றும் பாடியுள்ளார்.

மறைமுதல் கலைகள் எல்லாம் மணிமிடற்றவனே எங்கும்
நிறைபரம் என்றும் பூதி சாதனம் நெறிவீடு என்றும்
அறைகுவது அறிந்தும் தேறார் அறிவுஎனக் கலங்கி அந்த
முறையின்வீடு உணர்ந்தோர் போலத் தெளிந்தது மூரிவெள்ளம்
(45)

என்பது அப்பாடலாகும்

4.திருவிளையாடல்களைப் போற்றல்

முனிவர் சிவபெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களைப் புகழும் நோக்கில் திருவிளையாடற் புராணத்தை இயற்றியுள்ளார் 64 படலங்களில் 64 திருவிளையாடல்களையும் விவரித்தார். அவர் அதோடு அமையாது அந்நூலில் உள்ள அருச்சனைப் படலத்தில் ஆறு பாடல்களில் 27 திருவிளையாடல்களைப் போற்றவும் செய்தார். மேலும், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா என்ற ஒரு தனி நூலையும் இயற்றி மகிழ்ந்தார். அடுத்துப் பாடிய அந்தாதியில் ஐந்து பாடல்களில்(8,19,63,73,75) ஆறு அழைத்தது, விறகு விற்றது, நாரை, பன்றி, கரிக்குருவி எனும் மூன்றிற்கும் அருளியது, பழியஞ்சியது, பிரம்படிபட்டது எனும் ஏழு திருவிளையாடல்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றால் திருவிளையாடல்களைப் போற்றுவது அவருடைய தலையாய கொள்கை என்பது தெளிவாகிறது.

5.புராண நுட்பம் கூறல்

புராண நிகழ்வுகள் சிலவற்றிற்குக் காரணம் கூறுதல் சிக்கலான பணி. காரணத்தை மரபிற்கு உட்படுத்திக் கூற வேண்டும். இல்லையேல் பழி ஏற்படும்.பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் சில நிகழ்வுகளுக்கு நுட்பமாக விளக்கம் வழங்கியுள்ளார். புராணத்தைப் படிப்போருக்கு எழும் வினாக்களுக்கு அவர் விடை பகர்ந்துள்ளார்.

அ.தென்பால் உகந்தாடல்

சிவபெருமான் பொன்னம்பலம், வெள்ளியம்பலம், இரத்தின சபை, தாமிரசபை, சித்திரசபை எனும் ஐந்து சபைகளில் தெற்கு நோக்கி நடனம் ஆடுகிறான். இவ்வாறு ஆடுவதற்கு, 'அண்ணலார் தென்பால் உகந்தாடும், செய்தி எல்லாம் உன்னிடத்தில் அன்பால் என்று அப்பாலும் ஆரறியார் என்று தமிழ்விடுதூது ஒரு காரணத்தை மட்டும் குறித்தது ஆனால் முனிவர் இரண்டு காரணங்களைக் கூறுகிறார். பொதிகைத் தென்றல் திருமுகத்தில் வீசுவதற்கும், தமிழின் இனிமையைத் திருச்செவி கேட்பதற்கும் தென்திசை நோக்கி ஆடினார் என்பர். இதனை,

கடுக்க வின்பெறு கண்டனும் தென்திசை நோக்கி
அடுக்க வந்துவந்து ஆடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென் கால்திரு முகத்திடை வீசி
மடுக்க வும்தமிழ் திருச்செவி மாந்தவும் அன்றோ

(86)

எனும் பாடல் உணர்த்துகிறது.

ஆ) மாமனும் மருமகனும்

மாமனான மலையத்துவசனும், மருகனான சிவனும் எதிர்ப்படுகின்றனர் மாமன் மருமகனை வணங்கும் வழக்கம் இல்லை. இவர்கள் எதிர்கொள்ளும் சூழலை எப்படிப் பாடுவது முனிவர், மலையத்துவசன் வணங்குவதற்கு முன்பே, இறைவன் அவனைத் தழுவிக் கொண்டதாகப் பாடினார்.

வந்தான் மருகன் சரணம் பணிவான்
முந்தா முனம்மா மன்எனும் முறையால்
அந்தா மரையங் கையமைத்து மகள்
தந்தானை எதிர்ந் துதழீஇ யினனால்

(10·12)

என்பது அப்பாடல். இந்நுட்பம் பழைய திருவிளையாடலில் இல்லை.

இ.முருகனுக்குக் கல்வி

முருகன் உக்கிரகுமாரனாக அவதரித்தபொழுது அவனுக்கு வியாழபகவான் பல கலைகளையும் உணர்த்தினான். முருகன் முற்றுணர்வினன் ஆதலால் அவனுக்குக் கலைகள் கற்பிக்கப்பட்டன என்று பாடுவது பொருந்தாது. ஆகையால் குருமுகத்து அறிய வேண்டும் எனும்

கொள்கையை உலகிற்கு உணர்த்த, ஒரு முறை கேட்டனன் என்று பாடினார் முனிவர்

ஈ.இறையியல்பு

இறைவன் பொன்னனையாளிடம் உலோகங்கள் பொன்னாகும் திறத்தைக் கூறியருளினான். அவள் சோமசுந்தரனை இரவு தங்கிச் செல்லச் சொன்னாள். அப்பொழுது பெருமானுடைய நிலையை முனிவர் ‘அங்க யற்கணாள் தனைப்பிரியார் அதற்கு இசையார்’ என்று பாடிக் காட்டினார். ஈசன் உமையைப் பிரியாது உறைபவன் என்று சுட்டவும், இன்னொரு பெண்ணொடு ஒரு ஆண் தங்கக் கூடாது என்பதை உணர்த்தவும் இவ்வாறு கூறினார். ‘மாதரார் தாம் இருந்த இட வ்கையில் தனிப் புகுதோம்’ என்று பெருமான் திருவெண்காட்டு நங்கையிடம் கூறிய பெரிய புராண வரலாற்றுப்பகுதி இங்கு இணைத்துக் காணுதற்குரியது.

உ.கீரனுக்கு உபதேசம்

சோமசுந்தரக் கடவுள் நக்கீரனுக்கு இலக்கணத்தைத் தாமே உபதேசிக்காது அகத்தியனைக் கொண்டு உணர்த்தினான் அதற்கு அம்மையார் காரணம் கேட்டாள்.

இவன்ள டுத்தமற் சரத் தினால் யாமுணர்த்தாதுஅத்
தவனை விட்டு உணர்த் தினம் எனச் சாற்றினான்

(54:25)

என்ற காரணத்தைப் பெருமான் கூறியதாகக் குறிப்பார் பரஞ்சோதி முனிவர் புராண நிகழ்ச்சிகளுக்கு இதுபோன்ற நுட்ப விளக்கங்கள் நம்பி திருவிளையாடலில் அமையவில்லை. முனிவருடைய புராணம் சிறந்து விளங்குவதற்கு இந்த நுட்பங்கள் ஒரு காரணமாயிற்று.

6. புத்தாக்கம் செய்தல்

பரஞ்சோதி முனிவர் நூல் அமைப்பிலும், கருத்திலும் சில புதுமைகளைச் செய்துள்ளார் அப்புதுமைகள் சைவப் போக்கிற்குப் பொருந்தியுள்ளன அருச்சனைப் படல அமைப்பும், பரமயானம், தீர்த்தமுத்தி எனும் கருத்துப் புதுமைகளும் இங்கு விளக்கப் பெறுகின்றன.

அ.அருச்சனைப் படலம்

இப்படலம் திருவிளையாடற்புராணத்தின் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளது. அருச்சனை என்பது அகத்தும் புறத்தும் செய்யக்கூடிய வழிபாடு. வசிட்டர் முதலியோர் அகத்தியரிடம் திருவிளையாடல்களைக் கேட்டதால் அகவழிபாட்டையும், சோமசுந்தரனை வழிபட்டதால் புறவழிபாட்டையும் ஒருங்கே செய்துள்ளனர். ஆகவே அகவழிபாடு, புறவழிபாடு எனும் இரண்டின் சிறப்பினை விளக்கவே முனிவர் அருச்சனைப் படலத்தை அமைத்தார் எனத் தெரிகிறது

ஆ பர மயானம்

பரம்-மேலான. மயானம்-சுடுகாடு பரமயானம் என்பது மேலான சுடு காடு எனப்படும். சிவனுக்குக் கோயிலே சுடுகாடு எனத் திருவாசகம் குறிப் பிடும் பிரமன் தம் சரீரத்தை யோகாக்கினியில் லயப்படுத்தி ஐக்கியமான இடமே மயானமாகும் அவன் அவ்வாறு ஐக்கியமான இடங்கள் ஐந்தாகும். நாலூர் மயானம், கச்சி மயானம், கடவூர் மயானம்,காசி மயானம், வீழி மயானம் எனும் அவ்வைந்தும் பஞ்சமயானம் எனப்படும் திருக்கடவூரில் ஐக்கியமான பிரமன் மூன்றாவது பிரமனாவான் பிரமன் ஒவ்வோர் ஊழி முடிவிலும் ஒவ்வோர் மயானத்தில் இலயிப்பான் எனத் தெரிகிறது பரமயானம் இப்பஞ்ச மயானத்திலும் வேறானது பஞ்ச மயானங்கள் பிரமன் முதலிய உயிர்களைமீண்டும் தோற்றுவிக்கும். ஆனால் பரமயானம் உயிர்களை மீளப் பிறக்கச் செய்யாது. முனிவர் வேதாரணியத்தைப் பர மயானம் என்கிறார்

மரித்திட எவையும் தாங்கும் ஊழியா மயானம் மீளத்
தரித்திடும் வினைக்குர டாகத் தருமுடல் இத்தலத்தை
விரித்திடில் உலகுக்கு எல்லாம் வினையறுத்து உடலைமீளப்
பரித்திடாது அருளி னாலே இறைக்கிது பரம யானம்

என விளக்குவர் பரஞ்சோதி முனிவர் பரமயானம் என்ற பெயர் பரஞ்சோதி முனிவரால் புதிதாகச் சொல்லப்பட்டதாகும்.

இ.தீர்த்தமுத்தி

தலங்கள் யாவும் உயிர்களின் ஈடேற்றத்திற்கு உதவுவன ஆயினும், சில தலங்கள் சிறப்பாகக் குறிக்கப் பெறுகின்றன. சைவத் தலங்களில் ஐந்து தலங்கள் முத்தி தரும் தலங்களாகப் போற்றப் பெறுதல் உண்டு. ஆரூரில் பிறத்தல், அண்ணாமலையை நினைத்தல், ஆலவாயைக் கேட்டல்,

தில்லையைக் காணல், காசியில் இறத்தல் என்று ஐந்திற்கும் உயர்வு கூறுதல் சைவ மரபு. இப்பட்டியலில் தீர்த்த முத்தியளிக்கும் தலமாகத் திருமறைக்காட்டைச் சேர்த்துள்ளார் முனிவர். சிவபோகசாரம்,

தில்லை வனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லை வனம் கூடல் முதுகுன்றம்-நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்ற மறைக்காடு அருணை காளத்தி
வாஞ்சியம் என் முத்தி வரும்

எனும் 15 தலங்களின் பெயரைச் சொன்னாலே முத்தி கிட்டும் என்கிறது. இப்பாடல் திருமறைக்காட்டின் பெயரைச் சொன்னால் போதும் என்றிட, முனிவரோ தீர்த்தம் ஆடவும் முத்தி வாய்க்கும் என்கிறார் வேதாரணிய புராணத் தலவிசிட்டச்சருக்கத்தில்,

மாசிலா மேன்மை பூண்ட மறைசையம் பதியோ கூறில்
ஆசறு தீர்த்தம் தன்னில் ஆடவே அளிக்கும் முத்தி
(26)

என்றும்,தீர்த்த முத்திச் சருக்கத்தில்,

அப்பரிசு உரைத்த வேத வனத்தில்நீ ராடில் போதும்
ஒப்பரு முத்தி சார்வர் உரைக்கில் ஈது உண்மை
(10)

என்றும் பாடியுள்ளார் மறைக்காட்டில் மணிகன்னிகை, வேதநதி, கோடி தீர்த்தம் எனும் மூன்று தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் மணிகன்னிகை குளம். வேதநதியும் கோடிதீர்த்தமும் கடல். இத்தலத்திற்குக் கீழ்க்கடலும், தென் கடலுமாகிய இரண்டு கடல்கள் தீர்த்தங்களாக விளங்குகின்றன. கிழக்கிலும், தெற்கிலும் கடல்கள் சூழப்பெற்ற சிறப்பினாலும் கங்கைக்கு இணையாக மணிகன்னிகை இருப்பதாலும், இறையருள் எல்லோருக்கும் கிட்டுவதாலும் மறைக்காட்டைத் தீர்த்த முத்தியளிக்கும் தலமாகச் சிறப்பித்துள்ளார் பரஞ்சோதி முனிவர். இச்செய்தி சைவக் கருத்தியலுக்குப் புதுவரவாகும்

7.எளிய சொற்களை ஆளுதல்

மக்களிடம் பேச்சு வழக்கில் உள்ள சொற்களைக் கையாண்டால், அந்த படைப்பு செல்வாக்கு பெறும். இதனை உணர்ந்த பரஞ்சோதி முனிவர் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதற்கு எளிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். முனிவர் இறைவனை வயித்தியன் (அந்.42)

கருவூலம்(அந் 7) சுமைதாங்கி, அதிகாரி(அந்.43) என்று கூறியுள்ளார். பாவத்தைச் சரக்கு (அந். 49) என்ற சொல்லால் சுட்டியுள்ளார். நுகர்வினையைப் பழஞ்சரக்கு என்றும், வருவினையைப் புதுச்சரக்கு என்றும் குறித்துள்ளார்.

தமிழிற்குச் சிறப்பளித்தல் என்பது பொதுக் கொள்கை. இருமொழிப் புலவரான முனிவர், தமிழின் அருமையினை நன்குணர்ந்தவராதலால், இக்கொள்கை அவரைப் பொருத்த வரையில் சிறப்புக் கொள்கையாகும். திருவிளையாடல்களைப் போற்றுவது முனிவருடைய உயிர் நாடியான கொள்கை. அதற்கு அடுத்த நிலையில் நுட்பம் வழங்கும் கொள்கை இடம்பெறுகிறது. இதுவே அவரைச் சைவ உலகிற்கு நன்கு அறிமுகம் செய்வித்தது. இலக்கியத்திற்குள்ளேயே இலக்கிய மரபுரைத்தல், எளிய சொற்களை ஆளுதல் எனும் இரண்டும் போற்றப்பெறும் கொள்கைகளாகும். எதையும் சமய நோக்கோடு காணும் திறம் ஓரளவே பதிவாகி இருக்கிறது. நூல் அமைப்பிலும், கதையிலும் புத்தாக்கம் செய்திருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும்.

5
நம்பியும் முனிவரும் - ஒப்பீடு

நம்பி, திருவிளையாடல் பாடிய பிறகு 400 ஆண்டுகள் கழித்துத் தோன்றியது பரஞ்சோதியாரது திருவிளையாடற்புராணம். இவ்விரண்டும் படலப்பெயர், அமைப்புமுறை, நிகழ்ச்சிகள் எனும் வகையில் வேறுபட்டுள்ளன.

1. படலங்களின் முறைவைப்பு

நம்பி, திருவிளையாடற் கதைகளைத் திருவிளையாடல் என்று குறிக்க, பரஞ்சோதியார் படலம் என்று சுட்டுகிறார். திருவிளையாடல்களின் முறை வைப்பும் இருநூல்களிலும் ஒத்து அமையவில்லை இரண்டிலும் முதலில் வரும் 11 திருவிளையாடல்கள் வைப்பு முறையில் மாறாது உள்ளன. எஞ்சியவை முறை பிறழ்ந்துள்ளன.

2. தனிப்படலமாக அமைத்தல்

நம்பி ஒரே திருவிளையாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளைச் சொல்லியுள்ளார். முனிவர் அவ்வாறு வரும் கதைகளைத் தனிப்படலமாக வைத்துள்ளார் நான்கு படலங்கள் அவ்வாறு இடம் பெற்றுள்ளன. நம்பி நான்மாடக்கூடலான திருவிளையாடலில் வருணன் விட்ட கடலை வற்றச் செய்த திருவிளையாடலை இணைத்துப் பாடுகிறார். முனிவர் நான்மாடக் கூடலானதையும், வருணன் விட்ட கடலை வற்றச் செய்ததையும் தனித்தனிப் படலமாக வைத்துக் கூறியுள்ளார். அதுபோன்று, மதுரையான திருவிளையாடலில் வரும் நாகம் எய்தது, மாயப்பசுவை வதைத்தது எனும் இரண்டு திருவிளையாடல்களையும் முனிவர் வேறுவேறு படலங்களாகக் கொண்டுள்ளார். புலிமுலை புல்வாய்க்கு அருளின திருவிளையாடலில் அடங்கியுள்ள திருநகரம் கண்டது, பரஞ்சோதியாரால் திருநகரம் கண்ட படலமாக அமைக்கப்பட்டது இறுதியில் அருச்சனைப் படலம் என்ற ஒன்றைப் பரஞ்சோதியார் மட்டுமே பாடியுள்ளார்.

3. முனிவர் பாடாதவை

நம்பி பாடிய மூர்த்தியாருக்கு அரசளித்த திருவிளையாடல், காரியார் நாரியார் பாப்பகுத்த திருவிளையாடல், புலிமுலை புல்வாய்க்கு அருளின திருவிளையாடல் எனும் மூன்றும் பரஞ்சோதியாரால் பாடப்பெறவில்லை.

மூர்த்தியார் சந்தனக்கட்டைக்கு முட்டு ஏற்பட்டபோது, தம்முழங்கையைக் கட்டையாகக் கொண்டு தேய்த்தவர். இவரது செயல் வல்வினையின் பாற்படும் என்பதால், இவ்வரலாறு பெரியபுராணத்தில் இருப்பது பொருத்தமாகும் எனக்கருதி, முனிவர் இதில் சேர்க்காது விட்டார் எனக் கருத இடமுள்ளது.

காரியார், நாரியார் எனும் இருவரும் இறைவன்மீது பாடல்களைப் பாடியவர்கள் பரஞ்சோதியார் இவர்களின் வரலாற்றைக் கூறாதுவிட்டார். இறைவன் தாயை இழந்த மான்குட்டிக்குப் பாலூட்டப் புலிக்கு ஆணையிட்ட திருவிளையாடலையும் இவர் கூறவில்லை.

பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடல் உத்தரமா புராணத்தின் ஒரு பகுதியாகிய சாரசமுச்சயம் என்பதின் மொழிபெயர்ப்பு. பரஞ்சோதியார் ஆலாசிய மகாத்மியத்தின் முறைவைப்பின்படி, திருவிளையாடற் கதைகளைக் குறித்துள்ளார். அதனால், இம்மூன்று கதைகளும் இவர் நூலில் இடம்பெறவில்லை. பரஞ்சோதியாருக்குச் சிலப்பதிகாரம், திருவாசகம், கல்லாடம், பெரியபுராணம், தமிழ்விடுதூது, திருவாதவூரர் புராணம், நம்பி திருவிளையாடல் முதலிய நூல்கள் துணைபுரிந்துள்ளன. ஆயினும், படலங்களை மூலநூலின் வழியே அமைத்துள்ளார்.

4. படலப் பெயர்கள்

21 திருவிளையாடல்களின் பெயர்கள் இருநூல்களிலும் சிறிதும் மாறாது உள்ளன பரஞ்சோதியார் 30 திருவிளையாடல்களின் பெயரைச் சிறிது மாற்றியமைத்துள்ளார். 9 திருவிளையாடல்களின் பெயர்களைப் புதிதாகக் கூறியுள்ளார்.

பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடலைப் பரஞ்சோதியார், வெள்ளியம்பலக் கூத்தாடிய படலம் என அமைத்துள்ளார். நம்பி திருவிளையாடலில் பதஞ்சலியின் பொருட்டு நடனமாடினார் என வருகிறது. புலிக்கால் முனிவருக்காகவும் கூத்தாடியதாகக் கூறுவர் பரஞ் சோதியார். இரு முனிவர்களும் முன்பு தில்லையில் வேண்ட, இறைவன் அங்கு நடனமாடியுள்ளான். அதனை நினைவில் கொண்டு பரஞ்சோதியார் [illegible] இருவரின் வேண்டுகோளை ஏற்றார் என்று பாடினார். பரமன்

தில்லையில் ஆடியது பொன்னம்பலக் கூத்து என்றும், மதுரையில் ஆடியது வெள்ளியம்பலக் கூத்து என்றும் பெயர்பெறும். எனவே, முனிவர் தில்லையையும், மதுரையையும் ஒருசேர நினைவுகூரும் வகையில், அம்பலத்தின் பெயரையே படலத்தின் பெயராக ஆக்கினார்.

நம்பி திருவிளையாடலில் உள்ள பூதம் உண்ட திருவிளையாடலை முனிவர் குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம் என்று மாற்றினார். பூதம் உண்டது என்பதில் பூதத்தின் செயல் முன்னும், இறைவனருள் பின்னும் தெரியவருகிறது. பரஞ்சோதியார் இறைவன் அருள் முன்னும், பூதத்தின் செயல் பின்னும் புலப்படுமாறு குண்டோதரனுக்கு அன்னமிட்டது என்றார்.

குறுமுனிக்குத் தமிழுரைத்த திருவிளையாடலைப் பரஞ்சோதியார் கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலமாக ஆக்கினார். நக்கீரனைக் கரையேற்றிய பெருமான், அவனுக்கு இலக்கணம் உபதேசிக்கக் கருதினான். அப்பொழுது உமாதேவி, உம்மால் தமிழ் கற்பிக்கப்பட்ட அகத்தியனே சிறந்தவன் என்கிறாள். அகத்தியனை அழைத்து மெய்ஞ்ஞான உபதேசம் திருநோக்கால் உபதேசித்துப் பின் கீரனுக்குத் தமிழுரைக்கச் செய்தார் என்பர் நம்பி. இது பொருத்தமானதன்று நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடலுக்குப் பின், நக்கீரனுக்குத் தமிழுரைத்த திருவிளையாடல் என அமைதலே நன்றாகும். இவர் குறுமுனிக்குத் தமிழுரைத்த திருவிளையாடல் என்று அமைத்துள்ளார். முன்பு தமிழுரைத்த அகத்தியனுக்கு, மீண்டும் உபதேசித்தார் என்றும் கூறியுள்ளார். அதனையே திருவிளையாடல் தலைப்பாகவும் ஆக்கியுள்ளார். எனவே, முன்னுள்ள திருவிளையாடலோடு, இத்திருவிளையாடல் தொடர்பில்லாததாகிறது. கதையிலும் மாறுபாடு உள்ளது. இருமுறை அகத்தியனுக்கு தமிழுரைத்ததாகவும் வருகிறது. இப்போக்கை மாற்றும் வகையில் பரஞ்சோதியார், படலப்பெயரையும், கதைநிகழ்வையும் சிறிது மாற்றிப் பொருத்தம் உடையதாக்கினார். கீரனைக் கரையேற்றிய படலத்திற்குப் பின் கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் என்றமைத்தார். மறுமுறை இறைவன் அகத்தியனுக்கு இலக்கணம் உபதேசித்தார் என்று கூறவில்லை. முன்பு உபதேசித்தை நினைவு கூர்தலை மட்டுமே சொல்லியுள்ளார். இப்படலப்பெயர் அமைப்பிலும், கதைநிகழ்விலும் பரஞ்சோதியாரின் அமைப்புமுறையே சிறந்து விளங்குகிறது.

ஊமை தமிழறிந்த திருவிளையாடலை இவர் சங்கத்தார் கலகம் தீர்த்த படலம் எனக் கொண்டுள்ளார். பரஞ்சோதியார் உருத்திரசன்மர் என்ற ஒருவனுக்கு அருளியது என்பதைவிட, சங்கப்புலவர் பலரின் பிணக்குத் தீர்த்தார் என்று கூறுவது சிறந்தது எனக் கருதியிருக்கிறார்.

பொன்னனையாளுக்கு அருள்செய்தபடலம் பரஞ்சோதியாரில் இரசவாதம் செய்த படலமாக அமைந்துள்ளது. இரசவாதம் புரிதல் ஒரு அரியகலை. இக்கலை சித்தர்களால் நிகழ்த்தப்பெறுவது. ஈசன் சித்தர் வடிவினராக வந்து பொன்னனையாளுக்கு அருள்புரிகிறான். இறைவன் எவ்வடிவில் தோன்றுகிறானோ அவ்வடிவிற்குரிய சிறப்பினை வெளிப்படுத்துவது இயல்பு. அவ்வகையில் பொன்னனையாளுக்கு அருள் செய்தது எனப் பொது நிலையில் சுட்டாமல் இரசவாதம் செய்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

விடைக்குறியம்பெய்த திருவிளையாடலை முனிவர் சுந்தரப் பேரம்பு எய்த படலமாகக் கூறியுள்ளார். இடபக்குறி பற்றிய ஒரு செய்தி திருவிளையாடற்புராணத்தில் 34 ஆம் படலத்தில் வருகிறது. மேலும் இடபக்குறி பற்றியில்லாமல், இறைவன் திருப்பெயர் அமைந்த அம்பு என்றிருத்தல் நன்று எனக் கருதி, சுந்தரப்பேரம்பு எனக்குறித்தார்.

சாதாரி பாடின திருவிளையாடல் முனிவரால் விறகு விற்ற படலமாக ஆக்கப்பட்டது. முன்னதில் சாதாரி பாடின குறிப்புத் தெரிகிறது. பாணபத்திரன் பொருட்டுப் பெருமான் விறகு சுமக்கும் எளிவந்த கருணையை உணர்த்தும் வகையில் விறகு சுமந்த படலம் என்றாக்கினார் பரஞ்சோதியார்.

ஆறழைத்த திருவிளையாடல் என்று சுருக்கமாக இருக்கும் பெயரை இவர், அன்னக்குழியும், வையையும் அழைத்த படலமாகவும், சான்றழைத்த திருவிளையாடலை, வன்னியும், கிணறும், இலிங்கமும் சான்றழைத்த படலமாகவும் பாடினார்

பரஞ்சோதியார் நம்பி திருவிளையாடலில் சுருக்கமாகக் கூறப்பட்ட பெயர்களை விரிவாக ஆக்கியுள்ளார். இவர் திருவிளையாடல் படலப் பெயரிலும் இறைவனுடைய அருட்திறம் வெளிப்பட வேண்டும் எனக் கருதியுள்ளார் எனத் தெரிகிறது.

5. கதை வேறுபாடுகள்

1. மலையத்துவசன் ஆதிமரபில் வந்த வடிவ மங்கையைத் திருமணம் புரிந்தான் என நம்பி கூற, பரஞ்சோதியார் சூரிய குலத்தவனாகிய சூரசேன சோழன் மகள் காஞ்சனமாலையை மணந்ததாகக் கூறுவர்.

2. தடாதகைப் பிராட்டிக்குப் பங்குனி உத்திரத்தில் திருமணம் நிகழ்ந்தது என்பர் நம்பி இவரது திருமணம் ஒரு சோமவாரத்தினத்தன்று நிகழ்ந்ததாகக் குறிப்பர் பரஞ்சோதியார்.

3. திருமணத்தை முருகன் செய்வித்ததாக நம்பி மொழிவர். திருமணச் சடங்குகளைப் பிரமதேவன் நடத்தியதாகப் பரஞ்சோதியார் இயம்புவர்.

4. உக்கிரகுமாரன் சடையுடன் பிறந்தான் என்கிறது நம்பி திருவிளையாடல். தடாதகையார் திருவயிற்றில் வேப்பந்தார் அணிந்த பாண்டியனாக முருகன் பிறந்தான் என்று திருவிளையாடற்புராணம் கூறுகிறது.

5 உக்கிரகுமாரன் ஆதிமாமரபில் வந்த வடிவணங்கு என்ற பெண்ணை மணந்தான் என நம்பி குறிப்பிட, சோமசேகரராசாவின் மகள் காந்திமதியை மணந்தார் என்று பரஞ்சோதியார் சுட்டுகிறார்

6.மாணிக்கம் விற்கும் வணிகராக வந்த பெருமான், வீரபாண்டியனின் அமைச்சர்களிடம் வலவை, மாவலி, கங்கை, கம்பளை, கல்லணை ஆகிய நான்கு நதிகளிலிருந்து மாணிக்கம் பிறக்கும் எனக் கூறினார் என்பர் நம்பி. வலன் என்னும் அவுணனுடைய உடற்கூறுகளே மாணிக்கமாகும் என்று கூறுகிறார் முனிவர்.

7. அபிடேக பாண்டியன் எல்லாம் வல்ல சித்தரின் செயலை அறிந்து வெகுண்டான் என்றும், அவரை அழைத்துவர ஆளை அனுப்பினான் என்றும் நம்பி திருவிளையாடல் கூறும். அபிடேக பாண்டியன் பெரியவரை மதித்து நாமே அங்குச் சென்று வர வேண்டும் என்று கருதிச் சென்று சித்தரை அழைத்தனன் என்று திருவிளையாடற்புராணம் குறிப்பிடும்.

8.நம்பி கௌரியின் தந்தை, தாய் பெயரைக் குறிப்பிடவில்லை. பரஞ்சோதியார், விருபாக்கன், சுபவிரதை என்பவர்களைக் கௌரியின் பெற்றோராகக் கூறுவர்.

9.நம்பி, மாயப்பசு இடபமலையாக மாறியதோடு வரலாற்றை முடிக்கிறார். ஆனால் பரஞ்சோதியார் அதன்பிறகு இப்படலத்தில் இராமன் கதையினை விவரிக்கிறார்.

10.குலபூடணனுக்குப் பொற்கிழியருளிய இறைவன், அவன் படுக்கையின் மேல், தலைப்பக்கம் அப்பொற்கிழியினை வைத்துவிட்டு மறைந்தார் என்று நம்பியில் உள்ளது. பாண்டியனிடம் இறைவன் நேரடியாகக் கொடுத்தார் என்று திருவிளையாடற் புராணத்தில் உள்ளது.

11 இறைவன் சித்தராகி, பொன்னனையாள் வீட்டிலுள்ள பாத்திரங்களில் மருந்து பூசித் தம்திருக்கரங்களால் தொட்டுப் பொன்னாக்கினான் என்பர் நம்பி. முனிவர் வேறுவிதமாக எடுத்துரைக்கிறார். பொன்னனையாள் தந்த பாத்திரங்களின் மீது

திருநீற்றினைத் தூவி, இவற்றை இன்றிரவு நெருப்பிலிட்டு எடு, அப்போது அவை பொன்னாகும் என்று கூறுகிறார். அப்பெண்ணும் சித்தர் கட்டளைப்படி செய்ய, பாத்திரங்கள் பொன்னாயின என்பர் பரஞ்சோதியார்.

12. தம் விருப்பத்திற்கு உடன்படாத பாணபத்திரன் மனைவியைப் பாண்டியன், அவள் செருக்கை அடக்க ஒரு விறலியைக்கொண்டு வாதிடச் செய்தான் என நம்பி திருவிளையாடலில் வருகிறது இராசராசபாண்டியன் காமக்கிழத்தியின் சொற்படி ஈழநாட்டு விறலியை அழைத்துவந்து பாணபத்திரன் மனைவியோடு வாது புரியச் செய்தான் என்பர் பரஞ்சோதியார்.

13.சங்கப் புலவர்கள் தாமியற்றிய பாடல்கள் இறையனார் பொருளிலக்கணத்தின்படி அமைக்கப் பெற்றிருத்தலைக் கண்டு மகிழ்ந்தனர் என்றும், நக்கீரர் மட்டும் தாம் இயற்றிய நூலில் ஐந்தாம் பனுவலுக்கு ஒப்பில்லை என்று கூறினார் என்றும், பின் இறைவன் அருளால் செருக்கு நீங்கப் பெற்றார் என்றும் பழைய திருவிளையாடல் அறிவிக்கின்றது புலவர்கள் பலர் செய்யுளியற்றித் தத் தம் செய்யுளே உயர்ந்ததெனக் கூறிப் பிணங்கினர். இறைவன் ஒரு புலவனாக எழுந்தருளி, அவர்கள் கொண்ட பிணக்கினைத் தீர்த்தருளினான் என்பது பரஞ்சோதியார் குறிப்பிடும் வரலாறாகும்

14 நக்கீரன் பொற்றாமரையிலிருந்து கரையேறியபின், பெருமான் அருளை வியந்து கயிலைபாதி காளத்திபாதி அந்நாதி பாடினான் என்பதை மட்டும் குறிப்பர் நம்பி பரஞ்சோதியார், நக்கீரன் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி, கோபப்பிரசாதம், பெருந்தேவபாணி, திருவெழுகூற்றிருக்கை முதலிய நூல்களையும் அருளியதாகக் கூறுவர்

15 இறையனார் அகப்பொருளுக்கு மதுரையிலிருந்த புலவர்கள் பலர் உரை எழுதினர் அவ்வுரைகளுள் சிறந்ததை அறிய இறைவனை நாடினர் இறைவன் பிறவியில் ஊமையான உருத்திரசன்மன் தேர்ந்து சொல்வான் என்றான் உருத்திரசன்மன் புலவர்களின் உரைகளைக் கேட்டு, மெய்ப்பாடுகளின் மூலம் நக்கீரர்,கபிலர், பரணர் எனும் மூவரது உரையே சிறந்தது என்றனன் நம்பி, இதனை ஊமை தமிழறிந்த திருவிளையாடலில் கூறினார் புலவர்கள் இறையனார் அகப்பொருளுக்கு உரை செய்ததாகப் பரஞ்சோதியார் பாடவில்லை, 49 புலவர்கள் தமிழில் பல பாடல்களைச் செய்து மாறுபட, கடவுள் அவர்களது பிணக்கைப் போக்க உருத்திரசன்மன் முன் பாடுவீர் என்றான். நக்கீரர், கபிலர், பரணர் எனும் மூவரின் பாடலைக் கேட்ட உருத்திரசன்மன் வியந்தான். இவ்வரலாற்றை முனிவர்,சங்கத்தார் கலகம் தீர்த்த படலத்தில் உரைக்கிறார்.

16.பாண்டியன்,பெருமானிடம் நீவிர் உமாதேவியோடும், புலவர்களோடும் மதுரை விட்டகன்று இங்கு இருப்பதற்குக் காரணத்தைக் கூறியருள்க என்றான். அதற்கு இறைவன், என் புகழை அந்தாதியில் சொன்ன கபிலனின் தோழனான இடைக்காடன் செய்யுளை நீ செருக்குக் கொண்டு போற்றாதிருந்தாய் என்று கூறியதாக அமைத்தார் நம்பி. முனிவர் இடைக்காடரைக் கபிலரின் தோழர் என்று கூறுகிறார் ஆனால் அவர் சிவபெருமான் திருவந்தாதி பாடியதைக் குறிப்பிடவில்லை.

17 அம்மை அதியரையன் மகளாகப் பரதவக்குடியில் தோன்றினாள் என்பர் நம்பி. பரஞ்சோதியார் பரதவராசனின் மகள் எனக் குறித்தார்.

18 பரமன் வேதப்பொருளை உணர்த்தியபொழுது, அம்மையார் ஊக்கக் குறைவுடன் கேட்டாள், இதனால் இறைவன் அவளைப் பரதவர் குடியில் மீனவப் பெண்ணாகப் பிறக்கச் சாபமிட்டான். இதனை உணர்ந்த விநாயகர்,வேதநூல்களைக் கடலில் எறிந்தான் எஞ்சியிருந்த பகுதிகளை முருகன் கிழித்தெறிந்தான். கடவுள் இவர்களை அங்கு அனுமதித்த நந்தியைச் சுறாவாகப் பிறக்கச் சபித்தான் முருகனை, மதுரை வணிகனுக்கு ஊமைப்பிள்ளையாகுமாறு செய்தான் அவன் விநாயகருக்குச் சாபமிடவில்லை இவ்வரலாற்றை இருபுராணங்களும் கூறுகின்றன. ஆனால் விநாயகருக்குச் சிவன் சாபம் இடாததற்கு நம்பி காரணம் கூறார் பரஞ்சோதியார் விநாயகருக்குச் சாபம் இட்டால், அது அவரையே சாரும் என்பதால் சாபம் இடவில்லை எனக் காரணம் கற்பித்துக் கூறியுள்ளார்

19. நம்பி, மாணிக்கவாசகரது முன்னோர்கள் வாழ்ந்த ஊரை மானமங்கலம் என்றும், அவர் முற்பிப்பில் கணத்தலைவராக இருந்தார் என்றும் கூறுவர் மாணிக்கவாசகர் பிறந்த ஊரையும், முற்பிறப்பையும் பரஞ்சோதியார் கூறவில்லை

20 மாணிக்கவாசகரை அமைச்சராக்கிக் கொண்ட பாண்டியன் பெயரை நம்பி குறிப்பிடவில்லை பரஞ்சோதியார் அப்பாண்டியனை அரிமர்த்தனன் என்று கூறுகிறார்

21. சிவபெருமான் மாணிக்கவாசகரிடம் நம்மைப்பாடு என்றதும், அவர் திருவாசகம் பாடினார் என்பர் நம்பி மாணிக்கவாசகர், சிவபெருமான் தமக்கு அருளிய திறத்தை நினைந்து பாடிப் பரவினார் என்பர் பரஞ்சோதியார்

22. குதிரைச் சேவகனாகிய கடவுள் பாண்டியன் தந்த பொன்னாடையைக் கோலால் வாங்கி முடிமீது சூடிக்கொண்டதாகவும், அவ்வேளையில் அவனது செயலுக்கு மாணிக்கவாசகர் அமைதி கூறியதாகவும் நம்பி கூறுவர் பாண்டியன் அளித்த பட்டாடையை

இறைவன் குதிரையிலிருந்து இறங்கிப் பெற்று முடிமீது சூடிக்கொண்டான் என்பர் பரஞ்சோதியார்.

23. மாணிக்கவாசகர் பாடிய அதிசயப்பத்து, கோயிற்பத்து, புணர்ச்சிப்பத்து, செத்திலாப் பத்து, பிரார்த்தனைப் பத்து, ஆசைப்பத்து, உயிருண்ணிப்பத்து, திருப்புலம்பல், வாழாப்பத்து, திருச்சுண்ணம், கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருவெம்பாவை, திருச்சதகம் முதலிய பதிகங்களை நம்பி குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், சிவபுராணத்தைத் துறவு மேற்கொண்டு தில்லைக்குச் செல்கையில் பாடியதாகவும் கூறுவர். பரஞ்சோதியார் பதிகங்களைத் தனித்தனியே சுட்டாது பன்னாள் வாசக மாலைசாத்தி பூசனை செய்து வரலானார் என வரலாறு முடிப்பர். திருக்கோவையாரைச் சித்திரக் கோவை என்பர் நம்பி. இதைப் பரஞ்சோதியார் சுட்டவில்லை.

24. மண்சுமந்த பெருமானைப் பாண்டியனின் ஏவலாள் அடித்தான் என்பர் நம்பி. பாண்டியனே பரமனை அடித்ததாகப் பரஞ்சோதியார் பகர்வர்.

25. 'மங்கையர்க்கரசி', 'நீலமா மிடற்று', 'செய்யனே', 'மானினேர்விழி', 'வேதவேள்வி', 'மந்திரமாவது' எனத் தொடங்கும் பதிகங்களைச் சம்பந்தர் மதுரையில் கூன்பாண்டியன் வெப்புநோயை நீக்கியபோதும், சமணரை வென்றபோதும் பாடியதாக நம்பி குறிப்பிடுகின்றார். அவர் மறைக்காட்டில் கோளாறு பதிகம் அருளியதையும் சுட்டுகிறார். பரஞ்சோதியார் சம்பந்தர் காட்டுமாவது உரித்து. வாது செய்யத் திருவுளமே எனும் பதிகம் பாடியதை, 'வாது செய்யத் திருவுளம் செய்து குறித்துரை பதிகம் பாடி' என்றும், 'செய்யனே' எனத் தொடங்கும் பதிகத்தைக் குறிக்க, 'வேந்தனைப் பற்றெனப் பாடினார்' என்றும், 'மந்திரமாவது நீறு' எனும் பதிகத்தைச் சுட்ட, 'ஆலவாய் திருநீறெனச் சிறப்பித்து' என்றும் பாடியுள்ளார். நம்பி சம்பந்தர் பதிகத்தின் முதற்குறிப்பைச் சுட்ட, இவர் ஈற்றடியை வைத்துச் சிறப்பித்துள்ளார்.

26. பெரும்பற்றப் புலியூர்நம்பி பாண்டியர்களில் மலையத்துவசன், சுந்தரமாறன், உக்கிரன், வடிவலம்ப நின்றான், தத்தன், வீரமாறன், வரகுணன் முதலிய ஏழுவரை மட்டும் குறிப்பர். பரஞ்சோதியார் ஒவ்வொரு திருவிளையாடலும், ஒவ்வொரு பாண்டியன் காலத்தில் நிகழ்ந்தது என்றும், பாண்டியர்களை இவன், இவனுக்கு மகன் என்றும் வழித்தோன்றலாகத் தொடர்ச்சியாகக் கூறிச் செல்கிறார்.

முனிவர் திருமுகம் கொடுத்தவரலாறு வரகுணன் காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறுவர். வரகுணன் சேரமான் பெருமாள் காலத்தில் இருந்ததற்குச் சான்று இல்லை. இதுபோன்று, இவர் குறிப்பிடும் பாண்டியர்களின் பெயர்கள் ஆராய்ச்சிக்கு உரியனவாக இல்லை.

6
வாழ்வியல் அறம்

மனிதன் மேம்பாடு அடைவதற்கு அறக்கருத்துக்கள் உதவுகின்றன அறங்கள் சமூகத்தின் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்ட வழிசெய்வன. ஆகவே அறங்களைப் போற்றுதல் என்பது ஒரு சமூக மரபாக இருந்துள்ளது என்பர் ஆ. வேலுப்பிள்ளை. தமிழ்ப்புலவர்கள் அறக்கருத்துக்களை விதியாகவும், கதைகளின் வழியாகவும் விளக்கியுள்ளனர். திருக்குறள், நாலடியார், ஆத்திசூடி முதலிய நூல்கள் அறத்தினை விதியாகச் சொல்லியுள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம் ஆகிய நூல்கள் கதைகளின் வழியே புலப்படுத்தியுள்ளன.

பரஞ்சோதிமுனிவரின் பங்களிப்பு

அடியவர்கள் அறநெறியில் நின்றதாகப் பெரியபுராணம் குறிப்பிட்டுள்ளது. சூரன் செய்நன்றிகொன்ற செய்தியைக் கந்தபுராணம் உரைத்துள்ளது. ஆனால் திருவிளையாடற்புராணம் மனிதர்கள்மட்டுமின்றி, சிவபெருமானும் அறத்தைப் பின்பற்றியதாகக் குறிப்பிடுகிறது பரஞ்சோதியார் விருந்தோம்பல், ஈகை, ஒப்புரவு, நடுவுநிலைமை, அடைந்தவரைக்காத்தல், பொறையுடைமை ஆகியவற்றை ஏற்று வாழ்வாங்கு வாழ வழி கூறியுள்ளார். மேலும் அழுக்காறு, செருக்கு, காமம், பெரியோரைப் பிழைத்தல் என்னும் தீமைகளை நீக்கி வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்

1. விருந்தோம்பல்

விருந்தினர் இருவகைப்படுவர். ஒருவர் முன்பே அறிமுகமானவர். மற்றொருவர் அறிமுகமின்றிப் புதியவராய் வருபவர். இவர்களைப் போற்றுவது சிறந்த கடமையாகும். இதனை விருந்து புறந்தருதல், விருந்தெதிர் கோடல் எனும் குறிப்புக்களால் உணர முடிகிறது. திருவள்ளுவர்,

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

(81)

எனக் கூறியுள்ளார். 'அதிதி தேவோபவ' என்பது உபநிடதம். சைவத்தில் இதற்குள்ள பெருஞ்சிறப்பு பிறசமயப்பிரிவுகளில் இல்லை. புராணங்களில் வரும் சங்கம வழிபாடுகளை இந்த அறத்திற்குச் சான்றுகளாகக் காட்டமுடிகின்றது. பரஞ்சோதி முனிவர் விருந்தோம்பற் பண்பினை நான்கு படலங்களில் விளக்கியுள்ளார். விருந்தோம்பலில் நான்கு நியதிகளைக் கடைபிடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (1) விருந்தினர் விருப்பத்தை நிறைவேற்றுதல். (2) இன்மொழி கூறுதல் (3) நாள்தோறும் விருந்தோம்புதலைச் செய்தல். (4) வறுமையிலும் கடைபிடித்தல் என்பன அவை.

அ. விருப்பத்தை நிறைவேற்றல்

மீனாட்சி, சுந்தரேசர் திருமணத்தில் வியாக்கரபாதரும், பதஞ்சலியும் பங்கேற்றனர். சுந்தரேசர் இம்முனிவர்களை விருந்துண்ண அழைத்தார். அவர்கள் தில்லையில் தங்கள் திருக்கூத்தைக் கண்ட பிறகே உணவு உண்பது வழக்கம் என்றனர் இறைவன் பொன்னம்பலத்தில் திருக்கூத்தாடிக் காட்டினான். முனிவர்கள் நடனத்தைக் கண்டபிறகு விருந்துண்டனர். இச்செய்தி வெள்ளியம்பலக் கூத்தாடிய படலத்தில் வந்துள்ளது.

வழிபடு தொண்டர் கொண்ட நிலைகண்டு வெள்ளி
மணி மன்று ளாடி சரணம்

(43)

என அருச்சனைப் படலத்துள்ளும் கூறினார். விருந்தினரைப் போற்றுபவர் விருந்தினர் விருப்பத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்பதை முனிவர் இவ்வரலாற்றின் மூலம் தெரியப்படுத்துகின்றார்.

ஆ. இன்மொழி கூறுதல்

அந்தணனாக வந்த இறைவனுக்குக் கௌரி முல்லை அரும்பு போன்ற சோற்றை வெள்ளிமலை என இட்டாள். மலையெனப் பருப்பும், நறுஞ்சுவைக் கறிகளும் அமைத்தாள். அருவிபோல நெய்யை வார்த்தாள். சிற்றுண்டிகளையும் பரிமாறினாள். உணவு உண்பிப்பதனுக்கிடையே இனிய மொழிகளையும் பேசினாள்.

செய்யவா யிடையிடையே முகமனுரை
யின்னமுது செவியிலூட்டத்
தையலாள் வளைக்கையறு சுவையமுது வாயூட்ட
(23:25)

என்பதன் மூலம் விருந்தினரிடத்து இனிய மொழிகள் பேச வேண்டும் என்று கூறுகிறார். மதுரையில் வாழும் வேளாளர்களும் இவ்வியல்பினராக இருந்தனர் எனவும் பாடியுள்ளார். விருந்தினரைச் சேய்மையில் காணும்போது இன்முகம் கொண்டும், அருகில் வந்தவுடன் இன்சொல் கூறியும் போற்ற வேண்டும் என்று பரிமேலழகர் கூறியுள்ளது இங்கு நினைக்கத்தக்கது.

இ. நாட்கடமையாதல்

பொன்னனையாள் விருந்தினரைப்போற்றுவதைத் தம் நாட் கடமைகளுள் ஒன்றாகக் கொண்டாள். விருந்தினர் உணவுண்ட பின்னரே அவள் உணவு உண்ணும் கடப்பாட்டினள். அவளுக்கு இறைவன் அருளிப்பாடு எளிதில் அமைந்தது. இவ்வரலாற்றின்வழி விருந் தோம்பலை நாள்தோறும் இயற்ற வேண்டும் என்று உணர்த்தியுள்ளார் முனிவர்.

ஈ. வறுமையிலும் தொடர்தல்

அடியார்க்கு நல்லான் தன் இல்லத்திற்கு வரும் விருந்தினரைப் பேணுபவன். அவன் வறுமை வந்தபோதும் கடன்வாங்கி இந்நியதியைக் காத்தவன். இறைவன் இவனுக்கு உலவாக் கோட்டையை அருளினான். பரஞ்சோதியார் வறுமை வந்தபோதும் இந்நியதியைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றும், அதனால் இறைவன் அருள் எளிதில் கூடும் என்றும் கூறியுள்ளார்.

உ. அறிமுகமானவரின் பசிதீர்த்தல்

அறிமுகமானவரின் பசி போக்குவதைப் பரஞ்சோதி முனிவர் குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலத்தில் கூறுகிறார். மதுரையில் பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் திருமணம் நிகழ்ந்தபின், குண்டோதரனுக்குஅன்னமிடுதல் நிகழ்கிறது. அவன் அறுசுவை உணவுகளை மிகுதியாக உண்டபிறகும், பசிதணியாது துன்பப்படுகிறான். அவன் தன் நிலையைச் சிவபெருமானிடம்,

அட்ட போனகம் பணிவரை அனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவுமென் சுடுபசி தணியாது
இட்டு உணாதவர் வயிறுபோல் காந்துவது என்றான்

(7:21)

எனக் கூறினான். பிறகு இறைவன் அவன் பசியை அன்னபூரணி மூலம் நீக்கினான் எவ்வுயிராயினும் அதன் பசியைப் போக்க வேண்டும் என்பதனை இவ்வரலாற்றினால் விளக்குகிறார் பரஞ்சோதியார்.

2. ஒப்புரவு

தமக்குக்கிடைத்த பொருளை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்து ஒற்றுமையுடன் வாழ்தல் ஒப்புரவாகும். இது மேகம் போன்று பலன் கருதாததாக இருக்க வேண்டும் என்பர்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

(212)

என விளக்கம் தருவார் திருவள்ளுவர். ஒப்புரவு ஒழுகு என்றார் ஔவையார்.

உக்கிரகுமாரனும், பாண்பத்திரனும் ஒப்புரவுப் பண்பில் தலைசிறந்து இருந்ததாகப் பரஞ்சோதியார் பாடுகின்றார். பாண்டி நாட்டில் ஒரு சமயம் பஞ்சம் ஏற்பட்டது. உக்கிரகுமாரன் சோமசுந்தரன் ஆணைப்படி மேருவைச் செண்டால் அடித்து, அங்குள்ள செல்வத்தை எடுத்து வந்தான். அவற்றைத் தன் மக்கட்குப் பகிர்ந்தளித்தான். இவ்வரலாற்றை,

பொன்மலைக் கடவுள் ஈந்த புண்ணிய நிதியை யந்த
நன்மலை மானக் கூப்பி நல்கிப்பல் குடியும் ஓம்பித்
தென்மலைக் கிழவன் தெய்வத் தென்புல வாணர் ஒக்கல்
தன்மனை விருந்து காத்து

(15:39)

எனும் பாடல் குறிக்கிறது. முருகனே உக்கிரகுமாரனாக அவதரித்துள்ளான். கடவுளே இப்பண்பைக் காத்ததாகப் பாடி, முனிவர் இந்த அறத்திற்கு வலிமை சேர்த்துள்ளார். குலபூடணன் பொற்கிழியிலிருந்து பொருளை எடுத்து எல்லோருக்கும் வழங்கியதாகவும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

பாணபத்திரன் சேரமானிடம் பொருள் பெற்று வந்தான்.அப்பொருளை அந்தணர், புலவர் முதலியோருக்கும் வழங்கினான். இதனை,

....

கொணர்ந்த நிதியெல்லாம்
இந்து மருமா னகருள்ளார் யாரும் அறிய யாவர்க்கும்
முந்தை வேத முதல்வர்க்கும் புலவோர் தமக்கு முறைநல்கிச்
சந்த யாழின் இசைப்பாணர் தரும மனையான் வைகினான்

(42:30)

எனும் பாடலில் கூறுகிறார். பரஞ்சோதியார் இவ்விருவரின் வரலாற்றால் அரசர்க்கும், கலைஞர்க்கும் இப்பண்பு இன்றியமையாதது என்று உணர்த்தியுள்ளார்.

3.ஈகை

ஈகையினால் இம்மையில் புகழும், மறுமையில் நற்கதியும் உண்டாகும். இல்லாதவர்க்குக் கொடுப்பது ஈகை இது கொடுப்பவர் எப்பலனையும் எதிர்பார்க்காது செய்கிற அறமாகும். இதற்குரிய விளக்கத்தை,

மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவற்கு
உறுமா றியைவ கொடுத்தல் வறுமையால்
ஈதல் இசையாது எனினும் இரவாமை
ஈதல் இரட்டி யுறும்

(95)

என நாலடியார் நவில்கிறது.

ஈகைக்கு வலன் வரலாறு சிறந்த சான்றாகிறது. இந்திரன் வலனிடம் வேள்விப்பசுவாக வரவேண்டும் என்றான். வலன் ''ஈவதே பெருமையன்றி இரக்கின்றது இழிபே யன்றோ'' என்று கூறி வேள்விப் பசுவாகி இறந்தான் இவ்வாறு உயிரைக் கொடுக்கும் அளவிற்கு வலனின் ஈகைத்திறம் இருந்தது.

பாண்டி நாட்டுச் சோலையில் செவ்வந்திமலரும், மகிழம்பூவும் நிலத்தில் உதிர்ந்து கிடக்கின்றன. அவை வாடிய பொழுதும் வண்டுகளுக்குத் தேனைக் கொடுக்கின்றன. இதற்குப்பரஞ்சோதியார் ஈகை குணம் உடையவரை ஒப்புமைப்படுத்துகிறார்.

மலர்ந்தசெவ் வந்திப் போதும் வகுளமும் உதிர்ந்து வாடி
உலர்ந்துமொய்த்து அளிதே ன்நக்கக் கிடப்பன வுள்ள மிக்க
குலந்தரு நல்லோர் செல்வம் குன்றினும் தம்பால் இல்லென்று
அலந்தவர்க்கு உயிரை மாறி யாயினும் கொடுப்பர் அன்றோ

(52:17)

இயற்கையை வருணிக்குமிடத்திலும், மனிதனின் உயர்ந்த பண்பைக் குறிப்பிட வேண்டும் என்ற முனிவரின் வேட்கையை இப்பாடல் உணர்த்துகிறது.

4. நடுவு நிலைமை

பகை, நொதுமல், நட்பு என்னும் மூன்று நிலையிலும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்பது நடுவுநிலைமையாகும். இப்பண்பு அவையில் உள்ளோர்க்குச் சிறப்பாக உரியது. திருமூலர்,

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே

(319)

எனப்பாடுவர். அவரவர் செயலுக்குத் தக்க பயனை அவரவர்க்குத் தப்பாமல் ஊட்டுவதால், இறைவனை நடுவுநின்றான் என்றார் திருமூலர்.

பரஞ்சோதியார் நடுவுநிலைமையினை வலியுறுத்துவதற்குப் பழியஞ்சின படலத்தையும், மாமனாக வந்து வழக்குரைத்த படலத்தையும் நிலைக்களன்களாகக் கொண்டுள்ளார். திருப்புத்தூர் அந்தணன், அம்பால் தாக்கப்பட்டு இறந்த மனைவியை வேடன் கொலை செய்ததாகக் கருதினான். அவ்வேடனைக் குலோத்துங்க பாண்டியன் முன்நிறுத்தி நியாயம் வேண்டினான் பாண்டியன் உண்மைக் குற்றவாளியை அறிய பல முயற்சிகளை எடுத்து முடிவு தெரியாது வருந்தினான். இறுதியில் சோமசுந்தரனைப் பணிந்து உண்மையை உணர்த்துமாறு வேண்டினான் பின்னர், இறைவன் மொழிந்த அசரீரியின்படி செயல்பட்டான். வேடனை விடுதலை செய்தான். அந்தணன் வேறு திருமணம் செய்து கொள்ளப் பொருள் வழங்கினான் இவ்வழக்கில் பாண்டியன் இறையருளால் நடுவுநிலைமை மாறாதவனாக இருந்தான்

பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலன் வழக்கில் நடுவுநிலைமை தவறியதால், இறந்தும் மாறாத பழியுடையவன் ஆனான். நெடுஞ்செழியன் போன்று இன்னொரு பாண்டியன் உருவாகிவிடக் கூடாது என்ற கருத்தில் நடுவுநிலைமையைப் பழியஞ்சின படலத்தில் கூறினார். இவ்வரலாற்றில் சோமசுந்தரன் பழியஞ்சிய சொக்கன் எனப்பட்டான்.

.....ஆறடைந்தோர்
வஞ்சி யுயிரிழப்ப நாடு மறப்பழியை
அஞ்சி எளிசெய்த அறம் போற்றி

(25)

எனப் பெருமானையும் தொடர்புபடுத்தி விளக்கம் வழங்கியிருக்கிறார்

இராசசேகரன் காலத்தில் தனபதி என்ற வணிகனின் சுற்றத்தினர் அவன் தங்கைமீதும், தங்கையின் மகன் மீதும் பொய்வழக்குத் தொடுத்தனர் அவர்களுடைய பொருள்களையும் கவர்ந்து கொண்டனர் பரமன் தனபதியாக எழுந்தருளி வணிகச் சிறுவனுக்குப் பொருளை மீட்டுத் தந்தனன் நடுவு நிலைமையைக் காக்க இறைவனே முன்நின்றுள்ளதாகக் கூறியதின் மூலம், இதனைச் சிறந்த அறமாக உயர்த்திக் காட்டியமை புலனாகிறது இவ்விரு வரலாறுகளிலும் இறைவன் அருள் இல்லையாயின், பாண்டியர்கள் பழிக்கு உள்ளாகியிருப்பர் இறைவனுக்குப் பாண்டியர்கள்மீது பெருங்கருணை இருந்ததால், அவர்களுக்கு வர இருந்த பழியைப் போக்கினான்.

பெருமான் அடிமையாளாக வந்து, அடிமைத் தொழில் புரிவோர் செய்யும் குற்றஙகளையும், குறும்புகளையும் செய்தான் அதனால் உலகினருக்கு ஒரு அரச நீதியைப் புரிய வைத்தான். அரசன் தம் நாட்டு மக்களிடம் உயர்வு தாழ்வு பார்க்காது அவரவர் செய்கைகளுக்கு ஏற்ப, நீதி வழங்க வேண்டும் அவ்வாறே அரிமர்த்தனன், கூலியாளாகி வந்த இறைவன் செயல்களுக்குத் தண்டனை கொடுத்தான் இறைவனும் அதனை ஏற்றான் அரசன் நீதி தவறான் என்பதை உலகிற்கு உணர்த்த, தாமே குற்றங்களைச் செய்து, தண்டனையைப் பெற்றுள்ளான் முனிவர் அரசநீதி இறைவனால் காக்கப்பட்டதை இவ்வரலாற்றின்வழி தெளிவு படுத்தியுள்ளார்

5. அந்தணரைப் போற்றுதல்

அரசனின் செங்கோலாட்சி வேதத்தின் வழிப்பட்டும், அறத்தில் பொருந்தியும் அமையும் இதிலிருந்து மாறுபட்ட அரசு கொடுங்கோலுடையது ஆகும் அரசன் மாறுபட்டால் பசுக்கள் பயனைக் குறைப்பதும், அந்தணர்கள் வேதத்தை மறப்பதுமான நிலை ஏற்படும் இதனை,

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்

(560)

எனும் குறள் உரைக்கிறது இதனால் அரசர்கட்கு இதுபற்றி வலியுறுத்தப்பட்டது 'வாழ்க அந்தணர்' என்றார் சம்பந்தர். 'வேதநெறி தழைத்தோங்க' என்று பாடினார் சேக்கிழார் ஆகவே, வேதத்தையும், அந்தணர்களையும் போற்ற வேண்டும் எனத் தெரிகிறது. குலபூடணன் அந்தணர்களை மதிக்காததால், வேள்விகள் குறைந்தன. நாட்டில் மழை வளமும் இல்லை. அந்தணரைப் போற்றாததால் இந்நிலை உண்டாயிற்று எனச் சோமசுந்தரன் கூறினான் மேலும், 'அந்தணர்களை நம்மைப் போலப் போற்ற வேண்டும்' என்று அறிவுறுத்தி மறைந்தான் என்பது வரலாறு இந்த அறத்தைப் பரஞ்சோதி முனிவர் சொக்கநாதன் கூற்றில் வைத்தே பாடியுள்ளார் அந்தணரைப் போற்றுவதன் இன்றியமையாமை இத்திருவிளையாடலால் புலனாகிறது

6 பெற்றோரை மதித்தல்

தாய், தந்தையரைப் போற்றுவது ஒருவகை தவமாகும். அதனினும் வேறுதவம் செய்ய வேண்டுவதில்லை பெற்றோரைப் போற்றுவது மகன், மகள் எனும் இருவருக்கும் உரியது தந்தையின் கடமை அவருக்குப்பின் மகனுக்காகிறது மகன் இல்லை எனில், அதனை மகள் ஏற்று நடத்துவாள் பெற்றோர் உயிரோடு இருக்கும்பொழுது, அவர் விரும்பியவாறு செயல்படுவதும், அவர் இறந்த பிறகு அவர்க்கு இறுதிக்கடன் செய்வதும், பிறகு அவர் விட்டுச் சென்ற கடமைகளை ஏற்று நடத்துவதும் பெற்றோரைப் போற்றுதலில் அடங்கும் தடாதகையாரும், உக்கிரகுமாரனும் பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றியவர்களாகப் பரஞ்சோதியாரால் காட்டப் பட்டுள்ளனர்

அ. தடாதகையார்

மலையத்துவசன் முதுமை காரணமாகத் தடாதகையாருக்கு முடிசூட்டினான் தடாதகையார் தந்தை மறைவிற்குப் பின் அவருக்குச் செய்ய வேண்டிய கடன்களை முறைப்படி ஆற்றினார் இதனை முனிவர்,

விரதநெறி யடைந்துசுற்றுக் கடன்பிறவும்
தாதைக்கு விதியால் இயற்றி
அரதனமெல் லணைமேற்கொண்டு உலகமெலாம்
ஒருகுடைக்கீழ் ஆள் வாளா னாள்

(4 42)

எனக் குறிப்பர்.

காஞ்சனமாலை மலையத்துவசன் இறந்ததும் கடல் நீராட விரும்பினாள். அவ்விருப்பதினைத் தன்மகள் தடாதகையாரிடம் தெரிவித்தனள். அம்மையார் இறைவனிடம் எம் அன்னையின் பொருட்டுக் கடலினை அழைத்துத் தருக என வேண்டினார். இறைவனும் ஏழுகடலை அழைத்தனன். ஆயினும் நீராடுவதற்கு ஒருதடை இருந்தது. கன்றின் வாலைப் பற்றிக் கொண்டு நீராட வேண்டிய நிலை ஏற்பட்டதே எனத் தடாதகையாரிடம் கூறினாள். அம்மையார் பரமேசுவரனிடம் அன்னையின் நிலையைக் குறிப்பிட்டார். அவனும் மலையத்துவசனை நினைந்தனன். மலையத்துவசனும் விண்ணிலிருந்து மண்ணிற்கு வந்து காஞ்சனமாலையோடு நீராடினான். இருவரும் அம்மையப்பரின் அருள் வடிவைப் பெற்று இறைவனுலகை அடைந்தனர். தடாதகையார் அரசுரிமையினை ஏற்றல், தந்தைக்கு இறுதிக் கடனியற்றல், காஞ்சனமாலைக்கு நீராட உதவுதல், தாய் தந்தையர் சிவனுலகை அடைய வழிசெய்தல் முதலிய நிலைகளில் பெற்றோரைப் போற்றியுள்ளார் என்பது தெரிகிறது.

ஆ. உக்கிரகுமாரன்

சுந்தரேசன், உக்கிரகுமாரனிடம் இந்திரனும், வருணனும் உமக்குப் பகைவர்களாவர். மேருமலையும் உம்மிடத்தில் செருக்கோடு நடந்து கொள்ளும். வளைகொண்டு இந்திரன் முடியினைச் சிதறுவாய். உன் வேலால் வருணன் ஏவலால் வரும் கடலை வற்றச் செய்வாய். மேருமலையின் செருக்கடக்க, அதனைச் செண்டால் புடைப்பாய் என்றான் உக்கிரகுமாரன் தந்தையின் அறிவுரையின்படி இந்திரன், வருணன், மேரு ஆகிய மூவரின் செருக்கினை அடக்கினான் என்பது வரலாறு.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

(70)

என்று கூறும் அளவிற்கு உக்கிரகுமாரனின் செயல் இருந்தது. பரஞ்சோதி முனிவர் இந்த அறத்தை மக்கட்கு உணர்த்த இறைவியும், முருகனும் மனித வடிவில் தோன்றி வாழ்ந்து காட்டியுள்ளனர் என விளக்கியுள்ளார்.

7. அடைந்தவரைக் காத்தல்

தம்மை நாடி வருவோரைக் காப்பது மனிதனுடைய தலையாய கடமையாகும். ஆதலால் ஆன்றோர் இக்கடமையினை வலியுறுத்தி வந்தனர். நாலடியார்,

..........தற்சேர்ந் தவரை
எடுக்கலம் என்னார் பெரியோர்

(203)

எனப் பெரியோரின் இயல்பினைப் பாராட்டிற்று. சிலப்பதிகாரம் இதற்கு அடைக்கலக்காதை வழி விளக்கம் கூறியது. சோமசுந்தரன் மனிதன், தெய்வம் என்னும் இரு நிலைகளிலிருந்து இக்கடமையினைக் கடைபிடித்ததாகப் பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுகிறார்.

அ. மனித நிலை

இறைவன் சுந்தரபாண்டியனாகத் தோன்றிப் பாண்டிநாட்டு மக்களைப் பாதுகாத்தனன் இதனை முனிவர்,

மனித்த ருக்குஅர சாகித் தெவ் வேந்தர்க்கு
மடங்கலாய் மடநல்லார்க்கு
இனித்த ஐங்கணைக் காளையாய் நிலமகட்கு
இணர்த்துழாய் அணிமாலாய் நின்றான்

(5:199)

எனப்பாடுவர். பாணபத்திரன், தருமி, வணிகச் சிறுவன், வந்தி ஆகியோரைப் பாதுகாத்தது மனித நிலையில் நின்று செயல் புரிந்ததற்குச் சான்றுகளாகும்.

ஆ. தெய்வநிலை

பெருமான் காத்தற் தொழிலை உடையவன். இதனை, ''ஆதி படைத்து அவை தாங்கிநின் றானே'' எனத் திருமந்திரம் குறிப்பிடும். அப்பர், ''தன் கடன் அடியேனையும் தாங்குதல்'' எனக் குறிப்பிடுவர் உயிர்களைக் காப்பதற்கே இறைவன் திருவிளையாடல்களைப் புரிந்துள்ளான். 'மாபாவி உய்யும் வகையினை அருளுக'' என்று உமாதேவி கடவுளிடம் கேட்டாள். அதற்கு அவன்,

அடுபழி அஞ்சாநீச ராயினும் நினைக்கின் அச்சம்
படுபழி அஞ்சான் செய்த பாதகத் தொடக்குண்டு எங்கும்
விடுவகை யின்றி வேறு களைகணும் இன்றி வீயக்
கடவனைக் காப்பது அன்றோ காப்புஎன்றான்
கருணைமூர்த்தி

(26:35)

என விடையளிப்பதாகக் குறிப்பிடுகிறார் பரஞ்சோதியார்.

8. பொறையுடைமை

பொறுமை மனிதனுக்கு அணிகலன் போன்றது பிறர் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்வது ஒருவகை அறம். திருவள்ளுவர் பொறையுடைமைக்கு நிலத்தைச் சான்று காட்டுவர் துன்பம் செய்தவரைத் தண்டிக்கும் ஆற்றல் உள்ளவனின் பொறுமையும், மூடர்களின் சொற்களைக் கேட்பவனின் பொறுமையும் சிறந்ததாகக் கருதப்பெறுகிறது. இதனை,

ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை

(65)

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித்து இருத்தல் தகுதி

(72)

என்று நாலடியார் உரைத்துள்ளது நீதிநூல் ஆசிரியர்கள் பொறையுடைமையினை அறிவுறுத்தியுள்ளனர். பரஞ்சோதி முனிவர் இறைவன், அடியவர், தேவகுரு, மகளிர் முதலியோரின் செயல்களைப் பொறையுடைமைக்குச் சான்றுகளாகக் காட்டுகிறார்

அ இறைவனுடைய பொறை

இறைவனுக்குரிய பொருள் அன்பும் அருளும் ஆகும் இவ்விரண்டிற்கும் மேலாகப் பொறுமையும் பொருளாக அமையும் இதனைக்,

கொல்லையில் நின்று குதிகொள்ளும் கூத்தனுக்கு
எல்லையி லாத இலயம்உண் டாமே

(532)

எனத் திருமந்திரம் குறித்துள்ளது முனிவர் இறைவன் பொறையுடையவனாதலை நக்கீரனுடைய வரலாற்றின்மூலம் வெளிப்படுத்துகிறார் சோமசுந்தரன் தருமிக்கு எழுதிக்கொடுத்த பாட்டில் நக்கீரன் பொருட்குற்றம் கண்டான். பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணமில்லை என்றதோடு நில்லாமல், ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்கும் இயற்கையில் மணம் கிடையாது என்றான். அதனால் மகேசுவரன் நெற்றிக் கண்ணைக் காட்டினான் நக்கீரன் வெப்பம் தாங்காது பொற்றாமரையில் வீழ்ந்தான் கபிலர், பரணர் முதலிய புலவர்கள் சோமசுந்தரனிடம்,

யாவ ராலும் அகற்றரிது இப்பிழை யாவர்க்கும்
தேவ ராம்அவ ரேதிரு வுள்ளம் திரும்பினால்
போவது இது

(53·6)

என எண்ணி, நக்கீரனைக் கரையேற்ற வேண்டினர் அவனும் நக்கீரனின் பிழையைப் பொறுத்து ஆட்கொண்டனன் நக்கீரன் வெப்பம் தணிந்து எழுந்து வணங்கினான் பரஞ்சோதியார்,

போதையார் உலகம் ஈன்ற புனிதையர் பரஞானப்பூங்
கோதையார் குழற்குத் தீங்கு கூறிய கொடிய நாவின்
தீதையார் பொறுப்ப ரேயோ அவர் நன்றி

(53 13)

என வியப்பதோடு, அந்தாதியில்,

.. . நக்கீரன்
மெய்வெந் தழற்கண்ணால் வெந்துஓடை வீழ்ந்தோனைக்
கைதந்து ஏறிட்ட கரைபோற்றி

(53)

எனப் போற்றவும் செய்துள்ளார். நக்கீரனுக்குக் கூடல் நாயகன் நெற்றிக் கண்ணைக் காட்டாமலே அவன் பிழையைப் பொறுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு வரலாறு இல்லை காரணம், பிழை செய்தவன் முதலில் தன் பிழையை உணர வேண்டும் அதற்காக முதலில நெற்றிக் கண்ணைக் காட்டினான் பின்னர், அவனைக்கரையேற்றினான் எனும் நுட்பம் பரஞ்சோதியாரின் வாக்கால் அறியமுடிகிறது

பரமன் பிரம்படியினை ஏற்றது பொறையுடைமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் முனிவர் சிவபெருமான் மாபாதகம் புரிந்த அவந்தி நகர் அந்தணன் பிழையையும் பொறுத்து ஆட்கொண்டான் என்பதையும் விவரித்துள்ளார்.

ஆ. தேவகுருவின் பொறை

இந்திரன் வியாழபகவானின் அறிவுரையின்படி விண்ணுலகை ஆண்டு வந்தான். ஒரு பொழுது தேவலோகப் பெண்களின் ஆடல் பாடல்களில் மயங்கி இருந்தனன் அவ்வேளையில் அங்கு வியாழபகவான் சென்றார். இந்திரன் அவரை மதிக்காமல் மயக்கத்தில் கிடந்தான். தேவகுரு அவன் பிழை பொறுத்து அங்கிருந்து அகன்றார்.

இ. அடியவரின் பொறை

பொறையுடைமைக்கு அருளுணர்ச்சி அடிப்படையாகும். பெரிய புராணத்தில் வரும் திருநாவுக்கரசர், மெய்ப்பொருளார், ஏனாதிநாதர் ஆகியோரின் வரலாறுகள் அடியவர் பொறைக்கு எடுத்தக் காட்டுகளாகும். திருமூலர்,

தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றாது ஒழிவது மாகமை யாமே

(531)

எனப்பொறையினை நீராக உருவகம் செய்கிறார். இது போன்று திருநாவுக்கரசரும்,

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கி பொறையெனும் நீரைப்
பாய்ச்சித்
தம்மை நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையுமாறே

(4.76:2)

என உருவகிக்கிறார் இதனால் பயிர்கள் வளர்வதற்கு நீர் தேவைப்படுவது போல, சிவபக்தி சிறப்பதற்குப் பொறையுடைமை இன்றியமையாதது என்பது முனிவருடைய வாக்கிலிருந்துப் பெறப்படுகிறது.

திருஞானசம்பந்தரோடு வந்த சைவர்கள் வாகீச மடத்தில் தங்கியிருந்தனர். அப்பொழுது சமணர்கள் அம்மடத்திற்குத் தீயிட்டனர். திருஞானசம்பந்தர் அதனை அறிந்தார். உடன்,

துட்டர் பொய்யுரை மேற்கொண்டு தொன்முறை துறந்து
விட்ட வேந்தரைப் பற்றெனப் பாடினார்

(62:45)

சம்பந்தர் தீயைச் சமணர் பக்கம் செலுத்தவில்லை. அவர் சமணர்களின் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டார். சமணர்களைப் பற்றுக எனப் பாடவில்லை. அவர்கள் தீயிட்ட செயல் அரசன் முறை வழுவிய காரணத்தால் நிகழ்ந்தது. ஆதலால், சமணர்கள் மீது தீயினை ஏவாது, அரசன் மேல் ஏவினர் என்பர். அத்தீ பாண்டியனைச் சாராமலும் செய்திருப்பார். அத்துன்பம் தமக்கு நேர்ந்ததாயின் பொறுத்திருப்பார். தம்மைச் சார்ந்த அடியவர்களைத் துன்புறுத்தியதால், தீ பாண்டியனைப் பற்ற வேண்டும் என்று பாடினார்.

சமணர்கள் வாதத்தில் தோற்றுவிட்டனர் சம்பந்தர் அருளுணர்ச்சி யோடு, அவர்கள் திருந்த ஒரு வழி வகையினைக் கூறுகிறார்

அன்னை அனையான் எம்இறைவனுக்கு ஆளாய்
உய்மின்கள்

(63:59)

என்றார். அதற்குச் சமணர்கள்,

.....ஏட சிறியாய்நீ எவ்வாறு எங்கட்கு
அடாதமொழி
சொன்னது என்று மானமுளார் கழுவிலேறத்
தொடங்கினார்

(63.60)

இப்பாடற்பகுதியிலுள்ள மானமுளார் எனும் தொடருக்கு, சைவமே மெய்ச்சமயம் என அறிந்து வைத்தும், தம் சமயத்தை விடமாட்டாராய் உயிர்துறக்கவும் துணிந்தாராகலின் மானமுளார் கழுவிலேறத் தொடங்கினார்கள் எனப் பாடினார் என உரை எழுதினார் ந.மு. வேங்கடசாமி நாட்டார்

ஈ. அரசர்களின் பொறை

விக்கிரம பாண்டியனுக்கும் காஞ்சி நகர சோழ மன்னனுக்கும் பகை இருந்தது சோழன் பாண்டியனோடு நேரில் போரிட அஞ்சினான். அதனால் வேறுவகையில் அவனை வெல்லத் திட்டம் இயற்றினான். சமணர்கள் அவனுக்குத் துணைநின்றனர் ஆபிசார வேள்வி ஒன்றை நிகழ்த்தினர் அதிலிருந்து ஒரு யானை வெளிப்பட்டது அதைப் பாண்டியன் மீது ஏவினர் சோழனின் செயலைப் பாண்டியன் பொறுத்துக் கொண்டான் பிறகு, இதுபற்றிச் சோமசுந்தரனிடம் முறையிட்டான் அவன் பாண்டியனுக்கு வெற்றியினைத் தேடித் தந்தான்.

அனந்தகுணபாண்டியனைக் கொல்ல சமணர்கள் ஆபிசார வேள்வியினை இயற்றினர் வேள்வியில் ஓர் அசுரன் தோன்றினான். அவன் பாம்பாகிப் பாண்டி நாட்டு மக்களை அச்சுறுத்தினான் பாண்டியன் இறையருளால் அர்த்தசந்திரபாணத்தை ஏவினான். அப்பாம்பு இறந்தது. அதன்பிறகு சமணர்கள் மாயப்பசு ஒன்றை அனுப்பினர் அது இடபத்தின் அழகில் மயங்கி இறந்தது.

உ. மகளிரின் பொறை

சித்தன் என்பவன் வாளாசிரியரின் மனைவிமீது விருப்பம் கொண்டான். பலமுறை அவளை அடைய முயற்சித்தான். அவன் செயலைத் தன் கணவனுக்கும் தெரிவிக்காது, தன் உள்ளத்தே அடக்கி வைத்து பொறுமை காத்தாள். ஒருநாள், இது பற்றி கடவுளிடம் முறையிட்டாள். அவனும் வாளாசிரியனாகத் தோன்றி, சித்தனுடைய உறுப்புகளை ஒவ்வொன்றாக வெட்டி வீழ்த்தினான்.

பாணபத்திரரின் மனைவிக்கும், இராசராச பாண்டியனின் காமக் கிழத்திக்கும் இசை காரணமாகப் பகை உண்டாயிற்று. பாண்டியனின் காமக் கிழத்தி, பாணர் மனைவியின் செருக்கினை அடக்க எண்ணினாள். அதற்காக ஈழநாட்டிலிருந்து பாடினி ஒருத்தியை அழைத்து வந்தாள். பாணன் மனைவிக்கும், பாடினிக்கும் இசைப்போட்டி நிகழ்ந்தது. தோற்றவர் வென்றவருக்கு அடிமையாக வேண்டும் என்பது போட்டியின் நிபந்தனையாயிற்று. சபையோர் முதலில் பாணபத்திரன் மனைவியின் பாட்டைப் புகழ்ந்தனர். அரசனின் கருத்தறிந்ததும், பாடினியின் பாடலைப் போற்றினர். பாணன் மனைவி, பொறுமையுடன் இருந்து தொடர்ந்து போட்டியில் பங்கேற்றாள். பரமனருளால் பாண்டியனே இவள் இசையைப் புகழ்ந்தனன்.

இவ்வாறு ஒவ்வொருவரும் முன்பு பிறர் செய்த கொடுமைகளைப் பொறுத்துள்ளனர். பகைவரின் செயல் பொறுமையின் எல்லையை மீறிப்போனபோது, சொக்கேசனிடம் முறையிட்டுள்ளனர். அவனும் அவர்களைத் துன்பத்திலிருந்து காத்துள்ளான். பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. பொறுமை உடையவரைத் தொடர்ந்து துன்புறுத்தினால், கடவுள் அவர்களைத் தண்டிப்பான் என்றும் கூறுகிறார் முனிவர் இறைவனைப் பொறை உடையவனாகக் காட்டி, பின் அடியவர், அரசர்கள், மகளிர் முதலியோர் வரலாறுகளிலும் பொறையுடைமைக்கு இடமிருக்கிறது என்றும் கூறியுள்ளார்

9. அழுக்காறின்மை

அழுக்காறு எனும் சொல் பிறர் ஆக்கம் கண்டு பொறுக்காததைக் குறிக்கும்.இது பொறைக்கு மறுதலையானதாகும். அழுக்காறு கொள்ளாமை என்னும் இயல்பை ஒருவன் சிறந்த ஒழுக்க நெறியாக ஏற்க வேண்டும்.

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இல்லாத இயல்பு

(161)

என்பது குறள். அழுக்காற்றைப் பாவி எனவும் உருவகிப்பர் திருவள்ளுவர். அறத்தை விரும்பாதவன் பொறாமை கொள்வான். மனிதனிடம் பொறாமை உணர்ச்சி தலை எடுப்பது இயல்பு. ஆனால், எல்லா நலன்களும் பெற்ற இந்திரனே அழுக்காறு கொண்டதாக வரலாறு உள்ளது ஆகவே, இந்திரன் பொறாமை கொண்டவனாக இருந்தான் என்று கூறி மற்றவர்க்கு எச்சரிக்கை விடுக்கிறார் முனிவர்.

உக்கிரகுமாரன் தொண்ணூற்றாறு பரி வேள்வி செய்தான்,. அவன் இன்னும் நான்கு வேள்வி செய்து முடித்தால், இந்திரனுடைய பதவி போய்விடும் அதனால் அவன் உக்கிரகுமாரன் மீது பொறாமை கொண்டான். இதனை,

கரும்பரி பெரும்படைத் தோன்றல்.....
பொரும்பரி வீரன்மேல் பொறாது பொங்கினான்

(13:3)

எனக் குறிப்பர். உக்கிரகுமாரனின் வேள்வியைத் தடுப்பதற்காக இந்திரன் வருணனிடம் கடலை ஏவி மதுரையை அழிக்குமாறு ஆணையிட்டான். இந்திரன் கொண்ட பொறாமைத் தீயினால் கடல் பொங்கியது உக்கிரகுமாரன் தன் வேலை விடுத்துக் கடலை வற்றச் செய்தான்

உக்கிரகுமாரன் ஆட்சி செய்யும் ஒரு கால எல்லையில் நாட்டில் மழை இல்லாமல் போயிற்று. சேர, சோழ, பாண்டியர் மூவரும்கூடி இந்திரனைக் கண்டனர் இந்திரன் மூவரையும் வரவேற்றனன். தன் எதிரில் மூன்று இருக்கைகளை அமைத்து, அதில் மூவேந்தர்களையும் அமரச் சொன்னான். சேரரும், சோழரும் அவன் எதிரில் அமர்ந்தனர். ஆனால் பாண்டியன் அவன் எதிரில் அமரவில்லை. இந்திரனுக்கு அருகிலுள்ள ஒரு இருக்கையில் அமர்ந்தான். இதனால் இந்திரன் பாண்டியனை மதிக்காது, மற்ற இரு அரசர்களோடும் உரையாடினான். அவர்கள் தங்கள் நாட்டில் மழை பெய்ய உதவ வேண்டினர். இந்திரன் அவர்களுக்கு உறுதியளித்ததோடு, பரிசில் பல அளித்து மண்ணுலகிற்கு அனுப்பி வைத்தான். பிறகு அவன்,

................கன்னிநாடன்
பின்னரு மாரி வேண்டாப் பொருமித வீறு நோக்கி
இன்னது புலப்படாமை யினையதோர் வினையை முன்னா

(14:36)

என இருந்தான். பொறாமையினால் பாண்டியனை அவமதிக்க எண்ணி, பாரம் உள்ள மாலை ஒன்றை அவன் கழுத்தில் அணிவித்தான். அவன்

அதை மலர்மாலை போல் ஏற்றுக்கொண்டான். இந்திரன் உக்கிரகுமாரன் மேல் கொண்ட பொறாமையினால் கடலை மதுரைக்கு ஏவியும், பாரம் உள்ள மாலை ஒன்றை இட்டும் அவமதித்தான். அதனால் உக்கிரகுமாரன் வளையால் அவன் முடியைச் சிதைத்தான். இந்திரன் இதனால் நாணமடைந்து தேவலோகம் சென்றான். அவனிடம் அறச்சிந்தனை குறைந்ததால் மற்றவர் நலத்தைக் கண்டு மகிழாது பொறாமை கொண்டான். இவ்வரலாற்றின் மூலம் அழுக்காறு எனும் தீயகுணம் விண்ணவரையும் நாணச் செய்யும்; பழியையும் உண்டாக்கும் என்பதை மக்கட்குப் பெறவைத்துள்ளார் முனிவர்.

குலேச பாண்டியன் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவன். ஆதலால் அவனைத் தமிழ்ச் சங்கத்தினர் மதித்துப் போற்றினர். இடைக்காடன், அவனைச் சார்ந்து தன் நூலைப்படித்துக் காட்டினான். பாண்டியன் பொறாமையினால் முடியசைக்காமலும், முகமலர்ச்சி செய்யாமலும் தூண் போன்றிருந்தான். குலேசபாண்டியன் கொண்ட அழுக்காற்றினை,

வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும்
பகிர்ந்துஅருந்த வல்லோன் உள்ளத்து
அழுக்காற்றால் சிரந்துளக்கான் அகமகிழ்ச்சி
சிறிதுமுகத்து அலர்ந்து காட்டான்
எழுக்காயும் திணிதோளான் ஒன்றும்உரை
யான்வாளா இருந்தான்

(56:7)

எனக் கூறியுள்ளார் முனிவர்.

10. செல்வச் செருக்கு இன்மை

செருக்கெனும் உணர்வு, மனிதன் தாழ்வதற்குக் காரணமாகிறது, செல்வமே ஒருவனை எளிதில் செருக்குடையவனாக்குகிறது. செருக்குடையவர் தெய்வம், சுற்றம், துணை முதலியவற்றைப் பேணாது இருப்பர். அவரிடத்து வெற்றிபெற வேண்டும் என்ற நினைவே மிக்கிருக்கும். தெளிந்த அறிவுடையார் செருக்குக் கொள்ளார். இதனை,

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம்என்று
தலையா யாவர்செருக்குச் சார்தல்-இலை

(14)

என்று நன்னெறி உணர்த்துகிறது. மேரு வளையாத சிறப்புடையது. அதுவே செல்வத்தினால் தாழ்ந்தது ஒருவருக்குச் செல்வம் பகையாதலை, 'அறிவிலாத அற்பரானவர்க்குச் செல்வம் அல்லது பகைவேறு உண்டோ' எனக் குறிப்பர் முனிவர்.

குருவிருந்த துறை எனும் ஊரில் சுகலன், சுகலை என்னும் வேளாளர் தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். அவர்கட்குப் பன்னிரண்டு குழந்தைகள் இருந்தனர். குழந்தைகள் போன்று செல்வமும் மிகுதியாக இருந்தது. அதனால் அவர்கள் மனம் போன போக்கில் வாழ்ந்தனர். தம் குழந்தைகளை நல்வழியில் செல்லச் செய்யாமல் செல்லமாக வளர்த்தனர். குழந்தைகள் தீயவழியில் செல்லும்போது கண்டிக்காமல் விட்டனர். இதனை,

சுகலன்என்று ஒருவே ளாளன் அவன்மனை சுகலை என்பாள்
இகலருங் கற்பினாள்பன் னிருமகப் பெற்றாள் செல்வப்
புகலரும் செருக்கால்அன்ன புதல்வரைக் கடியா ராகி
அகலரும் களிப்பு மீதூ ரன்பினால் வளர்க்கும் நாளில்

(45:4)

எனச் சுட்டுவர் முனிவர். பெற்றோர் இறந்ததும் குழந்தைகள் ஆதரிப்பார் யாருமின்றிக் காட்டில் வாழ்ந்தனர். அங்கு வியாழமுனிவரின் தவத்தைக் கலைத்தனர் அவர் அவர்களைப் பன்றிக்குட்டிகளாகப் பிறக்குமாறு சபித்தார். பெற்றோரிடம் இருந்த செருக்குணர்வு பிள்ளைகளுக்குக் கேடாய் விளைந்தது என்கிறார் பரஞ்சோதியார். மக்கள், செருக்கெனும் இழிஉணர்வை நீக்கி வாழவேண்டும் என்பதை வேளாளர் தம்பதிகளின் வரலாறு புலப்படுத்துகிறது செருக்கு எனும் உணர்வு இறைவனை அடைவதற்குத் தடையாயிருப்பதால், இவ்வுணர்வை நீக்கி வாழ வழி கூறியுள்ளார் முனிவர்.

11. காமக்கேடு

காமமே எல்லாத் தீங்கிற்கும் வழிவகுப்பது இவ்வுணர்விற்கு ஆட்பட்டவர், அதிலிருந்து கரையேறுதல் அரிது. விண்ணவரும் இதற்கு விதிவிலக்கல்லர். காமமாகிய தீ, நீரில் குளித்தாலும், மலையில் ஒளிந்தாலும் நீங்காது இருந்து, உடலையும் உள்ளத்தையும் வருத்தும். காமத்திற்கு ஆட்பட்டவரின் இயல்பை,

கொலையஞ்சார் பொய்நாணார் மானமும் ஓம்பார்
களவொன்றோ ஏனையவும் செய்வார்-பழியோடு
பாவம் இஃதுஎன்னார் பிறிதுமற்று என்செய்யார்
காமம் கதுவப்பட் டார்

(284)

எனக்கூறுவர் குமரகுருபரர். காமத்தின் தீமைகளைப் பரஞ்சோதி முனிவர் கதைகளின் மூலம் விளக்கியுள்ளார். காமவயப்பட்டவருக்கு,

1.பதவி போகும்

2.வழிபாடு மறக்கும்

3.பழியும் பாவமும் உண்டாகும்

4 உயிர் போகும்

எனும் நான்கு தீமைகள் உண்டாவதை, கதைகளின் வழி வரையறை செய்ய முடிகின்றது.

1.பதவி போகும்

நகுடன் என்பவன், நூறு பரிவேள்வியினைச் செய்தனன். தேவர்கள் நகுடனுக்கு முடிசூட்டி இந்திரபதவியை நல்கினர். அவன் இந்திராணியைக் காண ஏழுமுனிவர்கள் சுமக்கும் சிவிகையில் ஏறிப்புறப்பட்டான். அவனுக்குக் காமம் மேலிட்டது. அவன் முனிவர்களிடம், 'சர்ப்ப, சர்ப்ப' என்றான். அகத்தியர் அவனைச் சர்ப்பமாகுமாறு சபித்தார். நகுடன் இந்திரபதவியில் நிலைக்கவில்லை. அவன் பழைய நிலையிலும் இல்லை. பாம்பாகிப் போனான். இதற்குக் காமம் காரணமாயிற்று என்பதை,

கனிதரு காமந் துய்க்கும் காதலால் விரையச் செல்வான்

(1:64)

எனக்குறிப்பர் பரஞ்சோதி முனிவர். காமத்தினால் பதவி போகும் என்பது நகுடன் வரலாற்றால் வலியுறுத்தப் பெறுகிறது.

2. வழிபாடு மறக்கும்

உக்கிரகுமாரன் மேருவை அழைத்தான். மேருவின் தலைவன் உடனே வெளியில் வராமல் காலம் தாழ்த்தினான் அவன் மேருவைச் செண்டால் அடித்தான். மேருவின் தலைவன் எட்டுதோள்களும் நான்கு முகமுமாகத் தோன்றி நாணி நின்றான். உக்கிரகுமாரன் அவன் விரைவில் வாராமைக்குக் காரணம் கேட்டான். அதற்கு அவன்,

இன்றிகேட் டிலையோ ஐய ஏந்திழை ஒருத்தி காமந்
துன்றுமா கடலின் மோகச் சுழித்தலைப் பட்டு வெள்ளி
மன்றுளா டியபொற் பாதம் வழிபடல் மறந்து தாழ்ந்து
நின்றுளேன் இனிய தீங்கின் நிமித்தினால் அடியும் பட்டேன்.
(15:30)

என்று கூறினான். காமம் வழிபடும் கடமையை மறக்கச் செய்து, துன்பத்திற்கு இட்டுச் செல்லும் என்பது இக்கதையால் புலனாகிறது.

3. பழி-பாவம் உண்டாகும்

ஒருவனிடம் காமஉணர்வு மிகுந்தால், அவ்வுணர்வு அவனுக்குப் பழியையும் பாவத்தையும் உண்டாக்கிவிடும். முனிவர் இதனைச் சோமசுந்தரன் கூற்றின் மூலமாக,

அணங்குநோய் எவர்க்கும் செய்யும் அநங்கனால் அலைப்
புண்டுஆவி
உணங்கினார் உள்ளம் செல்லும் இடனறிந்துஓடிச் செல்லா
குணங்குலம் ஒழுக்கம் குன்றல் கொலைப்பழி பாவம் பாரா
இணங்குமின் னுயிர்க்கும் ஆங்கே இறுதிவந்து உறுவது எண்ணா
(26.25)

காமமே கொலைகட்டு எல்லாம் காரணம் கண்ணோ
காமமே களவுக்கெல்லாம் காரணம் கூற்றம் அஞ்சும்
காமமே கள்ளுண் டதற்குக் காரணம் ஆதலாலே
காமமே நரகபூமி காணியாக் கொடுப்பது என்றான்
(26:27)

என விளக்குகிறார். அவந்தி நகர அந்தணன் ஒருவன் தன்தாயிடம் பொருந்தா உறவை ஏற்படுத்திக் கொண்டான். அதன் பொருட்டு அவன் தன் தந்தையையும் கொலை செய்தான். தன் செயலால் பழியையும் பாவத்தையும் தேடிக்கொண்டான். பரஞ்சோதிமுனிவர் மூலநூல்களில் இக்கதை இருப்பதால், அதைப் பாடியுள்ளார். இவ்வுறவு சமூகத்தில் நிகழ்வதை அவர் விரும்பவில்லை. இதுபோன்ற கொடிய பாவத்திற்கும் சைவத்தில் கழுவாய் உண்டு என்பதை விளக்கும் வகையில் இக்கதையை பதிவு செய்துள்ளார்.

4. உயிர்போகும்

சித்தன் குருவின் மனைவியாகிய மாணிக்க மாலையைத் தாயாகக் கருதாமல், தாரமாக எண்ணினான் ஒருநாள், அவள் கரம் பற்றி இழுத்தனன். அவள் அவனைத் தள்ளிவிட்டனள் பிறகு சோமசுந்தரனிடம் முறையிட்டாள். பெருமான் சித்தனோடு போரிட்டான் ஆசிரியர் மனைவியை நினைத்த நெஞ்சு, குறித்துப் பேசிய நா, தொட்ட கை, நோக்கிய கண் முதலியவற்றைக் காத்துக்கொள் என்று கூறி, ஒவ்வொரு உறுப்பாக வெட்டி வீழ்த்தினான். பரஞ்சோதி முனிவர் சித்தனை, உய்வினை உணராத பாவி,' என்றும், 'நாலாம் பாதகன்' என்றும், 'தாயை விரும்பிய அவந்தி நகர அந்தண இளைஞனின் தம்பி' என்றும் குறிப்பிட்டுள்ளார் முறையற்ற காம உணர்வு உயிரைப் போக்கும் அளவிற்குக் கொடுமை வாய்ந்தது என்பது, சித்தனின் கதையால் அறிய வருகிறது இத்தகைய வரலாறுகளால், காமத்தை நீக்க வேண்டும் என்பதைப் பெறவைக்கிறார் முனிவர்

12.பொச்சாப்பை நீக்குக.

பொச்சாப்பு என்பதற்கு மறதி என்று பொருள் மறதி ஒருவனிடம் இருந்தால் அவன் புகழ் கெடும் திருவள்ளுவர்,

பொச்சாப் பார்க்குஇல்லை புகழ்மை அதுவுலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு

(533)

என்றார். பரஞ்சோதியார் பொச்சாப்பினால் துன்பம் உண்டாகும்; சாபம் விளையும் என்றும், அச்சாபத்தை இறைவனால் மட்டுமே நீக்கமுடியும் என்றும் குறிப்பிடுகிறார் கார்த்திகைப்பெண்கள் பெற்ற படிப்பினையை இந்நீதிக்குச் சான்றாக எடுத்துரைக்கிறார்

கார்த்திகைப் பெண்கள் அறுவரும் முருகனைப் பாலூட்டி வளர்த்தவர்கள். இவர்கள், சிவபெருமானிடம் அட்டமாசித்திகளை உபதேசிக்குமாறு வேண்டினர் அவன் அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம்,வசித்துவம் எனும் எட்டு சித்திகளையும் உபதேசித்தான். அப்பெண்கள் சிறிது காலம் கழித்து அவற்றை மறந்தனர். பெருமான் அதனால் அவர்களைப் பட்டமங்கையில் ஆயிரம் ஆண்டுகள் பாறைகளாய் இருக்கும்படிச் சபித்தான். சாபம் முடிவுறும் காலத்தில், மீண்டும் ஒருமுறை அட்டமாசித்திகளை உபதேசித்தான் என்பது வரலாறு. அப்பெண்கள் முருகனை வளர்த்ததால் தகுதி பெற்றனர். ஆயினும் மறதி அவர்களைக் கற்களாய் நிறுத்திவிட்டது அதுவும் உபதேசப் பொருளை

மறந்தது மிகப்பெரிய குற்றம் யாவராயினும் மறதிக்குரிய தண்டனையைப் பெறவேண்டும் என்பதை இவ்வரலாறு உரைக்கிறது.

13.பெரியாரைப் பிழையாமை

பெரியாரை அவமதிக்காமல், போற்றி வாழ்வது சிறப்பாகும். வேந்தனும், முனிவரும் பெரியாராவர் திருவள்ளுவர் பெரியாரைத் துணைக்கோடல், பெரியாரைப் பிழையாமை எனும் இரு அதிகாரங்களை அமைத்துள்ளார். துணைக்கொள்வதால் நன்மையும், பெரியாரை பிழைத்தால் தீமையும் உளவாகும் என்கிறார்.

பெரியாரைப் பேணாது ஒழுகில் பெரியாரால்
பேரா இடும்பை தரும்

(892)

என்கிறது குறள் பெரியார் பொறுமை உடையவர் ஆயினும் அவர்கள் வெறுக்கத்தக்க அளவில் ஒருவன் செயல்களைச் செய்யாதிருக்கவேண்டும் நாலடியார் பெரியாருடன் சென்று பழகாத நாளைப் பயனற்ற நாள் என்கிறது. பெரியாருடன் கூடிவாழ்தல் பேரின்பத்தைத்தரும் என்கிறார் திருமூலர். இவற்றால் பெரியாரைப் போற்றுதலே நன்று; அவமதித்தல் தீது எனத் தெரிகிறது. பரஞ்சோதி முனிவர் இந்திரன், பெரியாரைப் போற்றாது வாழ்ந்ததை விவரிக்கிறார் இதன் மூலம் பெரியாரைப் பிழைத்தலைச் செய்யாதீர் என்று எச்சரிக்கிறார் எனக் கூறமுடிகிறது

இந்திரன் வியாழபகவானை மதிக்காது இருந்தான் அதனால் வியாழபகவான் விண்ணுலகை விட்டு நீங்கினான் இந்திரன் குருவைத் தேடினான் அவன் அங்கு இல்லையாதலால், பிரமனை நாடினான். பிரமன் கூற்றின்படி விசுவரூபனைக் குருவாகக் கொண்டான். அவன் அசுரர்களுக்கு ஆக்கம் உண்டாகும் வகையில் வேள்வி ஒன்றைச் செய்தான் இந்திரன் வேள்வியின் உண்மை நிலையினை உணர்ந்தான். விசுவரூபனைக் கொன்றான். அவன் மகன் துவட்டா அனுப்பிய விருத்திராசுரனையும் கொலை செய்தான். இந்திரன் பெரியாரைப் பிழைத்ததால் இரண்டு கொலைகளைச் செய்தான் பிரமகத்தி அவனைப்பற்றியது

இறைவனும் இறைவியுமே மனிதர்களாக வடிவந்தாங்கி வந்து, அறத்தின் வழிநின்று வாழ்ந்ததாகப் பாடியதால் பரஞ்சோதி முனிவர் சிறப்பிடம் பெறுகிறார்.

7
சைவ சமயக் கூறுகள்

சமயக் கடவுள், சமய சாதனங்கள், வழிபாட்டு முறைகள், தொண்டு நெறிகள் முதலியன சமயத்தின் கூறுகளாகும். பரஞ்சோதி முனிவர் சிவபக்தியில் நன்கு தோய்ந்தவர். திருக்கோயில்கட்குச் சென்று பரம்பொருளைப் பணிந்தவர் எனவே அவருடைய படைப்புகளில் சைவ சமயக் கூறுகள் மிகுதியாகப் பயின்று வந்துள்ளன.

சமயக்கடவுள்

சைவத்தின் கடவுளாக வணங்கப்படுவர் சிவபெருமான் ஆவார். 'சைவம் சிவசம்பந்தமாவது' என்பது திருமந்திரம் (1512) தென்னாட்டில் சிவனென அழைக்கப்படும் இவரே எந்நாட்டவர்க்கும் தலைவருமாவார் (திருவாசகம்-போற்றித் திருவகவல் 164-5) சிவன் தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலா ஆற்றலுடைமை,வரம்பிலின்பமுடைமை எனும் எண்குணங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல்,மறைத்தல் அருளல் எனும் ஐந்தொழில் களையும் உடையவர் இத்தகையவரே திருவிளையாடற் புராணத்தின் தலைவர் இதனால் பிற காப்பியங்கட்கு இல்லாத சிறப்பு இந்நூலுக்கு உண்டாயிற்று. இதனைப் பரஞ்சோதியார்,

தன்னிகர் உயர்ச்சி இல்லான் காப்பியத் தலைவனாக

(108)

எனத் தொடங்கும் பாடலிலும்,

அன்னவ ன்ஆணை யால்தான் நடப்பதிவ் அகிலம்

(109)

என வரும் தொடரிலும் பதிவு செய்துள்ளார்

இறைவன் உயிர்கள் மீது கொண்ட கருணையினால் தனுகரண, புவ... ...களை அருளுகிறார் அதன் பின்னர் ஆணவ த்தை மெலியச்

செய்கிறார். அவ்வேளையில் அவர் உயிர்கட்கு உள்நின்று உணர்த்தியும் மனித சட்டை தாங்கியும் வந்து அருளுவர் இறைவன் கொள்ளும் வடிவம் மூன்று அவை போக வடிவம், யோக வடிவம் வேக வடிவம் என்பன. இறைவன் உமையோடும் முருகனோடும் தோன்றும் வடிவம் போக வடிவம் பெருமான் இவ்வடிவத்தை ஏற்பதால் உலக உயிர்கள் போகங்களைப் பெறுகின்றன 'போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல்'(70) என்பது சித்தியார். உயிர்கள் செய்த வினைகளை நீக்கி அருளக் கொள்வது வேகவடிவம் வைரவர், வீரபத்திரர் முதலிய வடிவங்கள் இத்தகையன இதனை, 'வேகிஆ னாற் போல செய்த வினையை வீட்டல்' எனச் சித்தியார் கூறும் யோக வடிவம் உயிர்கட்கு ஞானத்தை வழங்கி அதன்வழி வீடுபேற்றை அருளுவதாகும் 'யோகியாய் யோகமுத்தி உதவுதல்' என்பது சித்தியார் இவ்யோக வடிவமே தட்சிணாமூர்த்தியாகும் பரஞ்சோதியார் இவ்வடிவச் சிறப்பை வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அட்டமாசித்தி உபதேசித்தருளிய படலத்தில் போக மற்றும் யோக வடிவங்ககளைச் சுட்டுகிறார்.

......கனகவெற்பன் மகளெனும்
வடுப்படாத கற்பினாள் மடித்து வெள்ளிலைச் சுருள்
கொடுப்பநேச முறுபோக குரவனாகி வைகினான்

பிருங்கி நந்தியே முதற்பெருந்தகைக் கணத்தரும்
மருங்கிறைந்த சனகனாதி மாதவத்தர் நால்வரும்
ஒருங்கிறைஞ்சி உண்ணவுண்ண அமுதம் ஊறும்
சிவகதைக்
கரும்பருத்த வாய்மலர்ந்து கருணை செய்யும்

என்பன அப்பாடற்பகுதிகளாகும்.

பன்றிக்குட்டி,கரிக்குருவி, நாரை முதலியவற்றுக்கு அருளிய விதம் திருவிளையாடற் புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளது பெருமான் மண்சுமந்துள்ளார், பிரம்படிபட்டுள்ளார் குதிரைவீரன், வியாபாரி, விருத்தன், குமாரன் எனப் பல்வேறு நிலைகளில் தம்மைத் தாழ்த்திக் கொண்டும் அருள் வழங்கியிருக்கிறார்

சாதனங்கள்

சைவச் சாதனங்களாக விளங்குவன மூன்று. அவை திருநீறு, திருவைந்தெழுத்து, கண்டிகை என்பன. திருநீறு சைவர்கட்குக் கவசம்

போன்றது. இதனை அணிவதால், இம்மை, மறுமை, அம்மை எனும் மூவகை இன்பமும் கிட்டும். திருநீற்றின் பெருமையைத் திருமுறையில் விரிவாகக் காணலாம் திருவைந்தெழுத்து சைவர்களுக்குப் படைக்கலமாக விளங்குவது இதனை ஓதுபவர் முக்தியடைவர் தீமையுடையோரும் ஓதினால் காலப்போக்கில் பயன்பெறுவர் இதனைத் தோத்திரமும் சாத்திரமும் சிறப்பிக்கின்றன உருத்திராக்கம் உடலுக்கு உறுதியை அளிப்பது நாயன்மார்களில் மூர்த்தி நாயனார் உருத்திராக்கத்தை அணிகலனாகக் கொண்டு அரசாண்டார் எனப் பெரியபுராணம் குறிக்கிறது. இச்சாதனங்கள் போற்றிப் பாதுகாத்த விதம் நாகம் எய்த படலத்தில் வருகிறது. அனந்தகுண பாண்டியன் மேற்காட்டிய மூன்றையும் உண்மைப் பொருள் எனத் தேர்ந்ததாகப் பரஞ்சோதியார் குறிப்பர்

கோதிலா குணத்து அனந்த குணப் பெருந்தகை மீனவன்
ஆதிநாயகன் உருவாகிய ஐந்தெழுத்தொடு கண்டிவெண்
பூதிசாதன மாவதேபொருள் என்று பத்திசை பூண்டு
(2)

என்பது பாடல்

வழிபாடு

உயிர்கள் இம்மை, மறுமை இன்பங்களைப் பெறுவதற்கு வழிபாடு நிகழ்த்துகின்றன வழிபாடு மனம், மொழி, மெய்களால் நிகழ்த்தப் பெறுவதாகும் சைவர்கள் நாள்வழிபாடும் சிறப்பு வழிபாடும் நிகழ்த்துவர் அந்நாட்களில் விரதமும் மெற்கொள்வர்.

அ. நாள் வழிபாடு

இறைவனை நாள்தோறும் வழிபடல் வேண்டும். அதுவும் ஒருநாளில் மூன்று வேளை வழிபாடு நிகழ்த்துவது சிறப்பானது காலை, உச்சி, அந்தி என்பன முப்பொழுதுகள் இப்பொழுதுகள், திரிசந்திக் காலம் எனப் பெறும். முக்கால வழிபாட்டில் ஒவ்வொன்றுக்கும் பயன் உண்டு.

காலைதொழ அற்றவினை கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்-மாலையினில்
வந்துசிவன் தாளை வந்தித்தல் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்.

எனவரும் வெண்பாவின் வழி, பயனை அறியலாம் பாணபத்திரன் காலை, உச்சி, அந்தி வேளைகளில் வழிபட்டான். இறைவன் அருள் கிட்டிய பின் நள்ளிரவிலும் வழிபாட்டைத் தொடர்ந்தான் என்பர் எனவே இறைவனருள் கிடைத்த பிறகு, மேலும் வழிபாட்டில் தீவிரம் காட்ட வேண்டும் என்று தெரிகிறது. வழிபாட்டால் பாவிக்கும் உய்தி உண்டு. இதற்கு மாபாதகம் தீர்த்த படலம் சான்றாகிறது

பாண்டி நாட்டின் பஞ்சத்தைப் போக்க இறைவன் குலபூடணனுக்குப் பொற்கிழி அருளினார். அவன் பொற்கிழியைச் சிவன் என்றே கருதி ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்திரோதனம், அவகுண்டம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமணீயம், அர்க்கியம், புட்பதானம் எனும் பத்து வகை வழிபாட்டை நிகழ்த்தினான். மேலும், சந்தனம், அகில், கருப்பூரம், கத்தூரி, குங்குமம் எனும் ஐவகை மணமும் ஊட்டினான் என உரைப்பர் பரஞ்சோதி முனிவர். இதனை,

....தசாங்க விரைத்தூப நறுநெய்ச்சுடர் வளைத்துக்
கங்கை மிலைந்த கடவுளெனக் கருதிப் பூசை
வினைமுடித்தான்
(15)

எனும் பாடற்பகுதியால் அறியலாம்

ஆ. சிறப்பு வழிபாடு

வேள்வி செய்தல் சிறப்பு வழிபாடாகும். சிவன் சிவபாத இருதயர் வேள்வி செய்வதற்காகப் பொன் வழங்கிய வரலாறு பெரியபுராணத்தால் அறிய முடிகிறது சோமாசி மாறரின் வேள்வித் தொண்டும் இதில் குறிப்பிடத்தக்கது. இம்மரபு திருவிளையாடற் புராணத்திலும் பேசப்படுகிறது. மதுரைச் சொக்கநாதர் வேள்விக்காகக் குலபூடணனுக்கு பொற்கிழி அருளியுள்ளார். இதனை உலவாக்கிழி அருளிய படலம் விளக்குகிறது தீர்த்தமாடுதலைத் தீர்த்தவிசேட படலமும், எழுகடலை அழைத்தபடலமும் விவரிக்கின்றன

விரதம்

மனம் பொறிவழிச் செல்லாது நிற்றற்குத் திரிகரணங்களால் வழிபடுதல் விரதம் எனப்படும். அக்காலத்தில் உண்டி சுருங்குதல் சிறப்பு சிவனுக்குரிய விரதம் ஒன்பது சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுவரர் விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம் கலியாணசுந்தர விரதம், சூலவிரதம், இடபவிரதம், பிரதோஷ விரதம்

என்பன அவை. சந்திரன் விரதம் இருந்து 'சோமன்' என்ற பெயரையும், சிவபெருமானின் சடையிலிருந்து நீங்காதிருக்கும் வாழ்வையும் பெற்றான். அந்நாளே சோமவார நாளாகும். இவ்விரதம் கார்த்திகை மாதம் முதல் சோமவாரத்திலிருந்து இருத்தல் வேண்டும். இவ்விரதத்தின் சிறப்பு இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்தில் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்விரதத்தை மதுரையில் இருந்து மேற்கொண்டால் காசியிலிருந்து நோற்பதை விடக் கோடிப்பயன் விளையும். சோமவார முடிப்புச் சடங்கைப் பரஞ்சோதி முனிவர் மட்டுமே குறித்துள்ளார்.

தவம்

உலகப்பற்றை விடுத்து பரம்பொருளை அடைய மேற்கொள்ளும் ஒழுகலாறே தவம் எனப்பெறும். சிவத்தைப் பேணுதல் தவத்திற்கு அழகு என்பர் ஔவையார் தவம் பற்றிய குறிப்பும் இப்புராணத்தில் வருகிறது காஞ்சனமாலை தவமும், தடாதகைப் பிராட்டியார் தவமும் குறிக்கத்தக்கன. காஞ்சனமாலை, கௌதமரிடம் பிறவித் துன்பத்தினைப் போக்க வல்ல தவம் யாது என வினவினாள் மானதம், வாசிகம், காயிகம் என்பன முத்தவங்கள் மனத்தால் செய்யப்படுவது மானதம் வாக்கால் செய்யப் பெறுவது வாசிகம், காயிகம் உடம்பினால் இயற்றுவது. இவற்றுள் காயிகமே சிறந்தது என்று கௌதமர் விளக்கினார். இது எழுகடல் அழைத்த படலத்தில் இடம்பெற்றுள்ளது

வழிபாட்டு நிலை

குருவினை வழிபட்டு உய்தல், இலிங்கத்தை வழிபட்டுச் சிறத்தல், சிவனடியார்களைப் போற்றி வாழ்தல் எனும் மூன்று நிலைகள் சைவத்தில் சிறப்பிக்கப் பெறும் இதனை,

கிரியையால் ஞானம் தன்னால் கிளர்சிவ பத்திபூசை
தரிசனம் சைவலிங்க தாபனம் செய்தல் ஈசற்கு
உரியமெய் யன்பர்பூசை உருத்திரசின்னம் தாங்கல்
அரியதே சிகன்பாற் பத்திஅனைத்தையும் தெரியலாகும்

எனும் பாடல் குறிக்கிறது. சவுந்தரசாமந்தன் சிவனடியார்களைச் சிவனெனக் கருதி வழிபட்டான் என்பதை,

சவுந்தரசா மந்தன்எனத் தானைகா வலன்ஒருவன்
சிவந்தசடை முடியண்ணல் அடியவரே சிவமாகக்
கவர்ந் தொழுகி அருச்சிக்கும் கடப்பாட்டின் நெறி நின்றோன் (10)

எவரேனும் உருத்திரசா தனங்கண்டால் எதிர்வணங்கி
அவரேநம் பிறப்பறுக்க வடிவெடுத்த அரன் என்று
கவராத அன்புள்ளங் கசிந்தொழுக அருச்சித்துச்
சுவையாறு இனமுதருத்தி எஞ்சிஇன் சுவைதெரிவான் (11)

எனவரும் பாடல்களால் அறியலாம்

நான்கு நெறிகள்

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கும் தொண்டு நெறிகள் இத்தொண்டுகள் சிவபுண்ணியமாகும் இவை முறையே, தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று கூறப்பெறும். சரியைக்கு இங்கு ஒரு சான்று காட்ட முடிகின்றது. திருக்கோயிலைத் தூய்மை செய்தல், மலர் தொடுத்தல், தோத்திரம் பாடுதல், சிவனடியார்களுக்குப் பணி செய்தல் முதலியனவே சரியையாம்.

புலரு முன்புன லாடிநீ றாடிநம் புனிதன்
இலகு மாலயம் விளக்கிநந் தனப்பணி இயற்றி
மலர்கொய்து ஆய்ந்தனர் தொடுத்துஅரன் புகழ்
செவிமடுத்து
உலக வாணராய்ப் போகமுற் றுறைகுநர் (40)

என்று சரியைக்கு விளக்கம் தந்துள்ளார் முனிவர்

8
வழக்காறுகள்

மக்களிடத்தில் தொன்று தொட்டுப் பலகதைகளும், பழக்கவழக்கங்களும் நிலவி வருகின்றன. அவ்வாறு வருவன வழக்காறுகள் எனப்பெறும் அத்தகையவற்றை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் வழக்காறுகள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம், நரி பரியாக்கிய படலம், மண்சுமந்த படலம் எனும் மூன்று படலங்களில் இடம் பெற்றுள்ள வழக்காறுகள் இங்குத் தொகுத்துத் தரப்பெறுகின்றன.

1.தீக்கை வழக்கு
தீக்கைக்குரியவர் தேர்வு

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில், தீக்கைக்குரிய மாணாக்கரைச் சோதிப்பது சுட்டப்பட்டுள்ளது. தீக்கைக்குரிய வரை முதல் நாளிரவு தருப்பைப் புல்லிலான படுக்கையில் துயிலச் செய்வர். தீக்கைக்குரியவர் அப்பொழுது கனவு காணுவர். அவர் கண்ட கனவு நன்மையுடையதாயின், தீக்கைக்குரியதான தகுதியைப் பெறுவர். கனவு தீமையுடையதாயின், அதன் பொருட்டு ஆகமத்தில் கூறப்பட்ட கழுவாய் புரிந்து தீக்கை கொடுப்பர்.

கால முங்கனாக் காட்சியு நிமித்தமுங் கடிந்தார்
சீல மானவர் செல்விதேர் தேசிகன் என்னை
மூல வாகமம் ஓதினான் முறுக்கவிழ் கழுநீர்
மாலை சாந்தணிந்து அடியின்மேல் வன்கழல் வீக்கீ

எனும் பாடல் மணிவாசகர் உபதேச வரலாற்றில் அமைந்தது. ஆதீனத் தலைவர்கள் தம் சீடர்களுக்குத் தீக்கை செய்வது மரபாக இருந்து வருகின்றது. குருக்கள், தேசிகர், சைவச் செட்டியார், சைவப்பிள்ளைமார் முதலாயினோர் சிவ பூசை எடுத்துக் கொள்வதற்கு முன் தீக்கை பெறுவது வழக்கம். சிவ பூசை பெறும் விழா ஆச்சாரியாபிடேகம் என்று மூன்று

நாட்கள் நடைபெறும். அப்போது சமயதீக்கை, நிர்வாண தீக்கை முதலியன நிகழும்.

2. வீரர் வழக்கு

1. வாளுக்கு நஞ்சு பூசுதல்

பழங்காலத்தில் முக்கியமான போர்க்கருவிகளுள் ஒன்றாக வாள் விளங்கியது. போர்வீரர் பகைவரைத்தாக்க இதனைப் பெரிதும் பயன்படுத்துவர். அவ்வாளில் நஞ்சு பூசும் வழக்கமும் இருந்துள்ளது. அவ்வழக்கத்தைப் பரஞ்சோதியார்,

நஞ்சொழுகு வாளானுங் குறைப்பேன் அல்லேன்

என்று மணிவாசகர் குருநாதரைக் காணாது புலம்புமிடத்துக் காட்டியுள்ளார்.

2. வீரக் கழலணிந்து வாளேந்துதல்

பகை வெல்லப் போர் செய்வோர், வீரக்கழலணிந்து வாளேந்திப் போர் புரிவர். அதுபோன்று அடியார்களின் பிறவிப் பகையை அறுக்க இறைவன் கழலணிந்து வாளேந்தினான் என்கிறார் பரஞ்சோதியார் இச்செய்தி,

வான நாயகன் ஏந்திய மறையுறை கழித்த
ஞான வாள்புற இருளையு நக்கிவாள் எறிப்ப

என்று நரிபரியாக்கிய படலத்தில் அமைந்துள்ளது.

3. வணிகவழக்கு

1. கயிறுமாறுதல்

பசு, எருமை, குதிரை முதலியனவற்றை வாங்குவோர், அவை தமக்கு உரிமையானமைக்கு அடையாளமாக வேறு கயிறு பூட்டிக் கொள்ளுதல் மரபு. இவ்வணிக வழக்கை, குதிரைச் சேவகனாக வந்த சிவபெருமான், பாண்டியனிடத்துக் குதிரைகளை ஒப்படைத்த பின்னர், கயிறு மாற்றிக் கொள்ளக் கூறினான் என்ற விடத்துக் காணமுடிகிறது.

இன்னவாம் பரிகள் என்பால் இன்றுநீ கயிறுமாறி
நின்னவாக் கொள்ளு நீதான் இன்னவாம் பரியே நாளை
என்னவாயிருந்த வேணு மென்குமுன் தனக்குங் கொண்டு
மன்னவா கருமம்இல்லை பரிவிலை வழக்கீது என்றார்

என்பது பாடல்.

2. குதிரைகளைப் பூசித்தல்

வேந்தர்கள் குதிரைகளை வாங்கும் பொழுது குதிரைகளைப் பூசித்து வணங்கிக் கயிறு மாறுவர். இவ்வழக்கு இன்றளவும் மேற்கொள்ளப் பெறுகின்றது இதனைப் பரஞ்சோதியார்,

பரியைப் பூசனஞ்செய்து இறைஞ்சி

என்று நரிபரியாக்கிய படலத்தில் கூறியுள்ளார்.

4. பணியாளர் வழக்கு

1. கூலியாட்கள் பெயர்ப்பதிவு

கூலியாட்கள் தம்பெயரை எழுதிக்கொள்ளச் செய்தல். அலுவலர்கள் கூலியாட்களுக்குரிய பணியளவினை அளவிடுதல் முதலியன பொதுப் பணியில் உள்ள வழக்குகள். இவ்வழக்கு,

வெறித்த டக்கைமத யானை மந்திரிகள்
வேறு வேறுபல குடிகளும்
குறித்தெ டுத்தெழுதி எல்லை யாட்டு அளவு
கோல்கி டத்திவரை கீறியே
அறுத்து விட்டு நகர் எங்க ணும்பறை அறைந்து
அழைத்துவிடும் ஆளெலாஞ்
செறித்து விட்டு அவரவர்க்கு அறைந்தபடி
செய்மின் என்று வருவித்தனர்

எனும்பாடலில் காணப்படுகிறது.

2. கூலியாட்களின் சீழ்க்கைஒலி

வாயைக் குவித்து எழுப்பும் சீழ்க்கை ஒலியால் காற்றை வருவித்தல் பணியாளரிடையே காணப்படும் ஒரு வழக்கு. அதனைப் பரஞ்சோதியார்,

வேலையினால் அறவருந்தி இளைத்தார்போல் மெய்வேர்வை
காலமிசை மூச்செறிந்து வாயொலியால் காற்றழைத்து

என்று மண்சுமந்த படலத்தில் உணர்த்தியுள்ளார். இவ்வழக்கு இன்றும் பணியாளரிடையே உள்ளது அவர்கள் மகிழ்ச்சி வெளிப்பாட்டின் போதும், பொழுது போக்காகவும் சீழ்க்கை ஒலியை எழுப்புவர்.

திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் தொன்று தொட்டு மக்களிடம் உள்ள வழக்காறுகளைக் கூறியுள்ளார். அவற்றுள் சில இன்றளவும் பின்பற்றப் படுகின்றது அவற்றில் வாளில் நஞ்சு பூசுதல் ஒன்றே வழக்கொழிந்ததாகத் தெரிகின்றது.

9
பழமொழிகள்

நாட்டுப்புறவியல், பல்வேறு கூறுகளை உள்ளடக்கித் திகழ்கின்றது இதன் கூறுகளுள் பழமொழியும் ஒன்று. இம்மொழி நாட்டுப்புற மக்களின் அனுபவ முதிர்ச்சியில் வெளிப்பட்டது. ஆகவே ஆய்வாளர்கள் இதனை நாட்டுப்புறவியலின் இதயமாகக் கருதுகின்றனர். உணவிற்கு உப்பு போன்று, பேச்சிற்குப் பழமொழி அவசியம் இது பேச்சிலே மிகுதியாக ஆளப்பட்டு, எழுத்திலும் பதிவாயிற்று.

பழமொழியும் புராணமும்

பழமொழி போன்றே புராணமும் நாட்டுப்புறவியலின் ஒரு கூறு பழமொழி-பழமையான மொழி புராணம்-பழமையான வரலாறு. புராணங்கள் வரலாறுகளைக் குறிக்கையில், பழமொழிகளை இடையிடையே புகுத்தி விளக்கம் அளித்துள்ளன இந்த இரண்டிற்கும் ஓரளவு இயைபிருக்கிறது. புராணங்களில் பழமொழிகள் மாற்றம் பெறாமை,சிறிய மாற்றம்,பொருள் மட்டும் இடம் பெறும் என்ற நிலைகளில் அமைந்திலங்குகின்றன.

முனிவர் மொழிந்தவை

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் இறையருளோடு மக்களின் வாழ்வியலையும் இணைத்துப் பாடியுள்ளார் ஆகவே புராணத்தில் பழமொழிக்கு உரிய இடம் உண்டாயிற்று.

1.பழமொழி - விளக்கம்

பழமொழியைத் தொல்காப்பியம், 'குறித்த பொருளை முடித்தற்கு வருஉம், ஏது நுதலிய முதுமொழி'(1425)என்று குறிப்பிடுகிறது அகநானூறு, 'தொன்றுபடு மொழி'(101) என்கிறது திருவிளையாடற் புராணம், 'மிக்கவர் எடுத்துக் கூறுவது பழமொழி' (47 22)'பலர் மொழிவது'(44 43) என்று விளக்கம் தருகிறது.

2.வகைப்பாடு

பழமொழிகளை, சு.சக்திவேல், சு.சண்முகசுந்தரம் முதலிய ஆய்வாளர்கள் பொருள், வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு செய்துள்ளனர் அவ்வகையில் திருவிளையாடற்புராணத்தில் அமைந்துள்ள பழமொழிகளைப் பகுக்க முடிகிறது. பழமொழிகளை அவை தரும் பொருள் முடிவின் அடிப்படையில் ஆகும், உண்டு, இல்லை எனும் மூன்றாக்கலாம் இவையன்றி உவமையாக விளங்கும் மொழிகளும், ஐயமாக அமையும் மொழிகளும் இந்நூலில் உள்ளன.

2.1ஆகும்

புராணத்தில் ஆகும் எனும் பொருள் முடிவு கொண்டதாக ஒரு பழமொழி உள்ளது இந்திரன் சாபநீக்கம் வேண்டி, துருவாசரைத் துதிக்கிறான் அப்பொழுது அவர்,

'தலைமட் டாக வந்தது முடிபட்டு ஆக'

என்று அருளிச் செய்ததாகப் புராணம் குறிக்கிறது தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று எனும் பழமொழி சிறிது மாற்றத்துடன் பயன்படுத்தப் பட்டுள்ளது. 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்ற பழமொழியும் இதனோடு தொடர்புடையதாய் வழங்கி வருகிறது

2.2 உண்டு

புராணத்தில் உண்டு எனும் பொருள் முடிவு தரவல்ல பழமொழிகள் இரண்டு உள்ளன ஈழநாட்டுப் பாடினிக்கும், பாணபத்திரன் மனைவிக்கும் இசைப்போட்டி நடந்தது சபையினர் முன்பு பாணன் மனைவியின் இசையைப் புகழ்ந்தனர் இராசராசபாண்டியன் ஈழநாட்டுப் பாடினியைப் பாராட்டியதைக் கண்டதும் பின்பு பாடினியைப் பாராட்டினர். இச்செய்தியை விளக்குவதற்குப் பரஞ்சோதியார் ஒரு பழமொழியினை ஆண்டுள்ளார்

முன்னவன் அருளைப் பெற்று மும்மையும் துறந்தோரேனும்
மன்னவன் சொன்னவாறே சொல்வது வழக்காறன்றோ

இது, 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' எனும் பழமொழியை உட்கொண்டிருக்கிறது. இங்கு,

இகழின் இகழ்ந்தாங்கு இறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப-இகல் மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை

(43)

எனும் நீதிநெறி விளக்கப் பாடல் குறிக்கத்தக்கது.

கரிக்குருவிக்கு உபதேசித்த படலத்தில் நாட்டுப்புறப் பழமொழி ஒன்று பதிவாதியுள்ளது. அக்குருவி தன்னைப் போலவே, தன் இனமும் வலியனவாய் விளங்குவதற்கும் அருள் பெற்றது, இது புராண வரலாறு

தக்கன் ஒருவன் வாழத் தன்கிளை வாழ்வதென்ன
மிக்கவர் எடுத்துக்கூறும் பழமொழி விளங்கிற்றன்றே

என்பது அப்பழமொழி அமைந்த பகுதி. இதில் வாழ்தல் உண்டு எனும் முடிவு கிடைக்கிறது. 'தக்கவன் ஒருவன் வாழ அவன் கிளை வாழும்' எனும் பழமொழி அப்படியே வந்துள்ளது

2.3 இல்லை

புராணத்தில் இல்லை எனும் பொருள்வகையிலான பழமொழிகள் இரண்டு காணப்படுகின்றன பாண்டியன் இசைப் போட்டியின் முடிவினைச் சிவனருளால் அறிவிக்கின்றான். இதனைப் பாண்டியன்,

மன்னவர்வலிகள் எல்லாம் தெய்வத்தின் வலிமுன்றில்லா
வன்னமாதெய்வம் செய்யும் வலியெலாம் அரண் மூன்றுஅட்ட
முன்னவன் வலிமுன் நில்லாஎனப் பலர்மொழிவதெல்லாம்
மின்ன பாண்மகளிற் காணப்பட்டது

(22)

என்று கூறுவதாகப் பாடியுள்ளார் முனிவர். இப்பாடல், 'சிவத்திற்கு மேல் தெய்வமில்லை' எனும் பழமொழியை விவரிப்பாய் உள்ளது.

பன்றிக்குட்டிகளுக்கு முலை கொடுத்த படலத்தில் ஒரு அருமையான பழமொழி அமைந்திருக்கிறது. பன்றியரசன் பன்றியரசியிடம் பாண்டியனோடு போர்புரிவது உறுதி என்று உரைக்கிறான். அதில் அவன்,

பொய்த்திடும் உடம்பேயன்றிப் புகழுடம்பு
அழிவதுண்டோ

(86)

என்று கூறுகிறான். இதில், பூத உடல் அழிந்தாலும் பொன்னுடல் அழியாது என்னும் முதுமொழியின் கருத்து இடம் பெற்றிருக்கிறது.

3.உவமைப்பழமொழிகள்

தமிழில் உவமைகளும் பழமொழிகளாக வழங்குவதுண்டு. உவமஉருபை நீக்கி விட்டால், அது பழமொழியாகிவிடும். புராணத்தில் உவமைப் பழமொழிகள் மிகுதியாக உள்ளன.

> *அராவுண்ண மாசுண்டு பொலிவுமாழ்கும் திங்கள் அனையான்*
>
> (1-70)

> *பணிவாயிற் பட்ட தேகண்ட தீந்தண்மதிபோல்*
>
> (40-10)

என வருவன திங்களைப் பாம்பு கொண்டற்று என்ற கருத்தைக் குறிப்பிடுகின்றன.

வரகுணன் பிரமகத்தியினால் துன்புற்றதை முனிவர், 'மாவுண்ட வெள்ளில் போல' (40-10) ஆனான் என்கிறார். இது யானை உண்ட விளங்கனி போல எனும் பழமொழியின் இலக்கியவடிவம்.

> *வான் பயிர்க்கு எழுகளை என்ன*
>
> (17.1)

> *இல்லார்க்குக் கிழியீடு நேர் பட்டாலென*
>
> (23.14)

> *பருந்தொடு நிழல் போக்கென்ன*
>
> (40-36)

> *அகங்கை நெல்லிக் கனி போல*
>
> (42-20)

இவை உவமையாக அமைந்த பழமொழிகளாகும்.

4.பழமொழித்தன்மை

மக்கள் மத்தியில் பழமொழியாக வழங்கப்படவில்லையாயினும் நீதிமொழிகள் சில பழமொழியின் தன்மையினைப் பெற்றிருக்கின்றன. திருவிளையாடற்புராணத்தில் இதுபோன்ற மொழிகள் மிகுதியாக உள்ளன.

அற்பரான வர்க்குச் செல்வம் அல்லதுபகை வேறுஉண்டோ

(1.65)

உடையவன் இடையூறு உற்றால் அடுத்தவர்க்கு உவகை உண்டோ

(15 27)

ஈவதே பெருமை அன்றி இரக்கின்றது இழிபே அன்றோ

(17.30)

வான்செய்யும் நன்றிக்கு வையகத்தோர்
செய்யும்கைம் மாறு ஒன்று உண்டோ

(17.86)

குலந்தரு நல்லோர் செல்வம் குன்றினும் தம்பால்
இல்லென்று
அலர்ந்தவர்க்கு உயிரை மாறியாயினும்
கொடுப்பர் அன்றோ

(52.17)

அலமரும் வறியோர் வைத்தநிதி கண்டால்
அகல்வரேயோ

(52 69)

இவற்றை ஐயமாக அமையும் பழமொழிகள் என்றும் கூறலாம்.

திருவிளையாடற் புராணத்தில் பழமொழிக்கு விளக்கம் இருக்கின்றது. மக்களிடம் பெருவழக்கில் உள்ள பழமொழிகளைப் பரஞ்சோதி முனிவர் எடுத்துக் காட்டியுள்ளார். உவமையாகவும், ஐயமாகவும் அமைந்த பழமொழிகள் புராணத்தில் காணப்படுகின்றன. முனிவர் இவ்வகையில் பழமொழிகளைப் பதிவு செய்து நாட்டுப்புறவியலுக்குத் தன் பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு-1

பரஞ்சோதி திருவிளையாடற்புராணம்-படலங்களின் வரிசை

1. இந்திரன் பழிதீர்த்த படலம்
2. வெள்ளையானைச் சாபந்தீர்த்த படலம்
3. திருநகரங்கண்ட படலம்
4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்
5. திருமணப் படலம்
6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்
7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்
8. அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம்
9. ஏழுகடல் அழைத்த படலம்
10. மலையத்துவசனை அழைத்த படலம்
11. உக்கிரகுமாரப் பாண்டியன் திருவவதாரப் படலம்
12. உக்கிரகுமாரப் பாண்டியனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்
13 கடல் சுவற வேல்விட்ட படலம்
14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்
15. மேருவைச் செண்டாலடித்த படலம்
16. வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம்
17. மாணிக்கம் விற்ற படலம்
18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்
19. நான்மாடக் கூடலான படலம்
20 எல்லாம் வல்ல சித்தரான படலம்
21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்
22. யானை யெய்த படலம்
23. விருத்த குமார பாலரான படலம்

24. கால்மாறி யாடின படலம்
25. பழியஞ்சிய படலம்
26. மாபாதகந் தீர்த்த படலம்
27. அங்கம் வெட்டின படலம்
28. நாகமெய்தியபடலம்
29. மாயப்பசுவை வதைத்த படலம்
30 மெய்க்காட்டிட்ட படலம்
31. உலவாக் கிழியருளிய படலம்
32. வளையல் விற்ற படலம்
33. அட்டமாசித்தயுபதேசித்த படலம்
34 விடையிலச்சினையிட்ட படலம்
35. தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்
36. இரசவாதஞ் செய்த படலம்
37. சோழனை மடுவில் வீட்டிய படலம்
38. உலவாக் கோட்டையருளிய படலம்
39 மாமனாக வந்து வழக்குரைத்தபடலம்
40 வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம்
41. விறகு விற்ற படலம்
42 திருமுகங் கொடுத்த படலம்
43. பலகையிட்ட படலம்
44. இசைவாது வென்ற படலம்
45 பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்த படலம்
46 பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்
47 கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலம்
48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம்
49. திருவாலவாயான படலம்
50. சுந்தரப் பேரம்பெய்த படலம்
51 சங்கப் பலகை கொடுத்த படலம்
52. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

53. கீரனைக் கரையேற்றிய படலம்
54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தபடலம்
55. சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்
56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தபடலம்
57. வலைவீசின படலம்
58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்
59. நரிபரியாக்கிய படலம்
60. பரி நரியாக்கி வைகையழைத்த படலம்
61 மண் சுமந்த படலம்
62. பாண்டியன் சுரந்தீர்த்த படலம்
63. சமணரைக் கழுவேற்றிய படலம்
64. வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்

பின்னிணைப்பு - 2

2.1 முறைவைப்பில் மாறுபாடு

படல எண் நம்பிதிருவிளையாடல்	படல எண் திருவிளையாடற் புராணம்
1.இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்	1. இந்திரன் பழிதீர்த்த படலம்
2.வெள்ளானைக்குச் சாபம் தீர்த்த திருவிளையாடல்	2.வெள்ளையானை சாபம் தீர்த்த படலம்
3.தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்	4.தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்
4 மணம் செய்த திருவிளையாடல்	5.திருமணப் படலம்
5 பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்	6.வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்
6 பூதம் உண்ட திருவிளையாடல்	7 குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்
7. ஆறழைத்த திருவிளையாடல்	8.அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம்
8.கடலழைத்த திருவிளையாடல்	9 எழுகடல் அழைத்த படலம்
9.ம்லையத்துவசனை அழைத்த திருவிளையாடல்	10. மலையத்துவசனை அழைத்த படலம்
10. உக்கிரன் பிறந்த திருவிளையாடல்	11.உக்கிரகுமாரப்பாண்டியன் திருவவதாரப் படலம்
11.வளைவேல் செண்டு கொடுத்த திருவிளையாடல்	12. உக்கிரகுமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்

12.நான்மாடக் கூடலான திருவிளையாடல்	19.நான்மாடக் கூடலான படலம்
13.சித்தரான திருவிளையாடல்	20. எல்லாம் வல்ல சித்தரான படலம்
14.கல்லானை கரும்பு வாங்கிய திருவிளையாடல்	21.கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்
15. சங்கப்பலகை கொடுத்த திருவிளையாடல்	51. சங்கப்பலகை கொடுத்த படலம்
16 கிழியறுத்ததிருவிளையாடல்	52. தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்
17.நக்கீரனைக்கரையேற்றின திருவிளையாடல்	53.கீரனைக் கரையேற்றிய படலம்
18. குறுமுனிக்குத் தமிழுரைத்த திருவிளையாடல்	54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்
19 ஊமை தமிழறிந்த திருவிளையாடல்	55. சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்
20. இடைக்காடன் பின்போன திருவிளையாடல்	56.இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்
21.கடல் சுவற வேலெறிந்த திருவிளையாடல்	13. கடல் சுவற வேல் விட்ட படலம்
22.வலைவீசின திருவிளையாடல்	57. வலை வீசின படலம்
23 வளையல் விற்ற திருவிளையாடல்	32. வளையல் விற்ற படலம்
24.இலச்சினையிட்ட திருவிளையாடல்	34.விடையிலச்சினையிட்ட படலம்
25.மாணிக்கம் விற்ற திருவிளையாடல்	17. மாணிக்கம் விற்ற படலம்

26 ஆனை யெய்த திருவிளையாடல்	22. யானை எய்த படலம்
27.ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடல்	58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்
28.நரிகுதிரையான திருவிளையாடல்	59. நரி பரியாக்கிய படலம்
29.குதிரை நரியான திருவிளையாடல்	60. பரி நரியாக்கி வையையழைத்த படலம்
30. மண் சுமந்த திருவிளையாடல்	61. மண் சுமந்த படலம்
31.விருத்தகுமார பாலரான திருவிளையாடல்	23.விருத்தகுமார பாலரான படலம்
32.மாறியாடின திருவிளையாடல்	24. கால்மாறியாடிய படலம்
33. பழியஞ்சின திருவிளையாடல்	25. பழியஞ்சின படலம்
34. மகாபாதகந் தீர்த்த திருவிளையாடல்	26. மாபாதகம் தீர்த்த படலம்
35 அங்கம் வெட்டின திருவிளையாடல்	27.அங்கம் வெட்டின படலம்
36. மதுரையான திருவிளையாடல்	.. .., ...
37.வெப்புத் தீர்த்த திருவிளையாடல்	62 பாண்டியன் சுரந்தீர்த்த படலம்
38.கழுவேறின திருவிளையாடல்	63.சமணரைக் கழுவேற்றின படலம்
39.மெய்க்காட்டிட்டதிருவிளையாடல்	30 மெய்க்காட்டிட்ட படலம்
40.உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல்	31. உலவாக்கிழியருளிய படலம்
41 மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடல்	39.மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

42.அட்டமாசித்தி பகர்ந்த திருவிளையாடல்	33. அட்டமாசித்தி யுபதேசித்த படலம்
43.தண்ணீர்ப் பந்தர் வைத்த திருவிளையாடல்	35.தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்
44.இந்திரன் முடிமேல்வளை யெறிந்ததிருவிளையாடல்	14.இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலம்
45.பொன்னனையாளுக்கு அருள் புரிந்த திருவிளையாடல்	36.இரசவாதம் செய்த படலம்
46 சோழனைக் கொண்டு ஆழியில் தாழ்த்த திருவிளையாடல்	37.சோழனை மடுவில் வீட்டிய படலம்
47 திருவாலவாயான திருவிளையாடல்	49 திருவாலவாயான படலம்
48 வரகுணனுக்குச் சிவலோகங் காட்டின திருவிளையாடல்	40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்
49 விடைக்குறியம்பெய்த திருவிளையாடல்	50 சுந்தரப் பேரம்பு எய்த படலம்
50.உலவாக் கோட்டை வைத்த திருவிளையாடல்	38.உலவாக்கோட்டை அருளிய படலம்
51 மூர்த்தியாருக்கு அரசளித்த திருவிளையாடல்	......
52 காரியார் நாரியார் பாப்பகுத்த திருவிளையாடல்	. . ...
53.புலிமுலை புல்வாய்க்கு அருளின திருவிளையாடல்	..
54 சாதாரி பாடின திருவிளையாடல்	41 விறகு விற்ற படலம்

55.திருமுகங் கொடுத்த திருவிளையாடல்	42.திருமுகம் கொடுத்த படலம்
56.பலகையிட்ட திருவிளையாடல்	43.பலகையிட்ட படலம்
57 இசைவாது வென்ற திருவிளையாடல்	44.இசைவாது வென்ற படலம்
58.பன்றிக்குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல்	45. பன்றிக்குட்டிகளுக்கு முலை கொடுத்த படலம்
59. பன்றிக்குட்டிகளுக்கு அருள் புரிந்த திருவிளையாடல்	46. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்
60 கரிக்குருவிக்கு அருள். புரிந்த திருவிளையாடல்	47.கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்
61.மாமேருவில் கயல் செண்டு பொறித்த திருவிளையாடல்	15. மாமேருவைச் செண்டால் அடித்த படலம்
62.சான்றழைத்த திருவிளையாடல்	64.வன்னியும் கிணறும் இலிங்கமும் சான்றழைத்த படலம்
63 நாரைக்கு அருள் புரிந்த திருவிளையாடல்	48.நாரைக்கு முத்தி கொடுத்த படலம்
64.வேதம் உணர்த்திய திருவிளையாடல்	16. வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம்

2.2. பெயரில் வேறுபாடு - 30

நம்பி திருவிளையாடல்	திருவிளையாடற் புராணம்
1.தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்	தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப் படலம்
2. மணம் செய்த திருவிளையாடல்	திருமணப் படலம்
3.கடலழைத்த திருவிளையாடல்	எழுகடலழைத்த படலம்
4.உக்கிரன் பிறந்த திருவிளையாடல்	உக்கிரகுமாரப் பாண்டியன் திருவவதாரப் படலம்
5 வளைமேல் செண்டு கொடுத்த திருவிளையாடல்	உக்கிரகுமாரப் பாண்டியன் திருவவதாரப் படலம்
6.சித்தரான திருவிளையாடல்	எல்லாம் வல்ல சித்தரான படலம்
7 கல்லானை கரும்பு வாங்கின திருவிளையாடல்	கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்
8.கிழியறுத்த திருவிளையாடல்	தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்
9.நக்கீரனை கரையேற்றின திருவிளையாடல்	கீரனைக் கரையேற்றிய படலம்
10 இடைக்காடன் பின்போன திருவிளையாடல்	இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்
11 இலச்சினையிட்ட திருவிளையாடல்	விடை இலச்சினையிட்ட படலம்
12.ஆனை எய்த திருவிளையாடல்	யானை எய்த படலம்
13 ஞானோபதேசம் செய்த திருவிளையாடல்	வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

14.நரிகுதிரையான திருவிளையாடல்	நரிபரியாக்கிய படலம்
15.குதிரை நரியான திருவிளையாடல்	பரி நரியாக்கி வையையழைத்த படலம்
16.மாறியாடின திருவிளையாடல்	கால்மாறியாடிய படலம்
17.மகாபாதகம் தீர்த்த திருவிளையாடல்	மாபாதகம் தீர்த்த படலம்
18 வெப்புத் தீர்த்த திருவிளையாடல்	பாண்டியன் சுரம் தீர்த்த படலம்
19 கழுவேறின திருவிளையாடல்	சமணரைக் கழுவேற்றிய படலம்
20 உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல்	உலவாக்கிழியருளிய படலம்
21 அட்டமாசித்தி பகர்ந்த திருவிளையாடல்	அட்டமாசித்தி உபதேசித்தி படலம்
22.சோழனைக் கொண்டு ஆழியில் தாழ்த்த திருவிளையாடல்	சோழனை மடுவில் வீட்டிய படலம்
23 உலவாக் கோட்டை வைத்த திருவிளையாடல்	உலவாக்கோட்டை யருளிய படலம்
24 பன்றிக்குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல்	பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்த படலம்
25.பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல்	பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்
26.கரிக்குருவிக்கு அருள்புரிந்த திருவிளையாடல்	கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்

27. மாமேருவில் கயல்செண்டு பொறித்த திருவிளையாடல்	மாமேருவைச் செண்டால் அடித்த படலம்
28.கடல் சுவறவேலெறிந்த திருவிளையாடல்	கடல்சுவற வேல்விட்ட படலம்
29. நாரைக்கு அருள் புரிந்த திருவிளையாடல்	நாரைக்கு முத்தி கொடுத்த படலம்
30. வேதம் உணர்த்திய திருவிளையாடல்	வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம்

2 3 பெயரில் ஒப்புமை - 21

நம்பி திருவிளையாடல்	திருவிளையாடற் புராணம்
1.இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்	இந்திரன் பழிதீர்த்த படலம்
2 வெள்ளையானைக்குச் சாபம் தீர்த்த திருவிளையாடல்	வெள்ளையானைச் சாபம் தீர்த்த படலம்
3 மலையத்துவசனை அழைத்த திருவிளையாடல்	மலையத்துவசனை அழைத்த படலம்
4 நான்மாடக் கூடலான திருவிளையாடல்	நான்மாடக்கூடலான படலம்
5 சங்கப்பலகை கொடுத்த திருவிளையாடல்	சங்கப்பலகை கொடுத்த படலம்
6 வலைவீசின திருவிளையாடல்	வலை வீசின படலம்
7 வளையல் விற்ற திருவிளையாடல்	வளையல் விற்ற படலம்
8.மாணிக்கம் விற்ற திருவிளையாடல்	மாணிக்கம் விற்ற படலம்

9.மண்சுமந்த திருவிளையாடல்	மண் சுமந்த படலம்
10.விருத்தகுமார பாலரான திருவிளையாடல்	விருத்த குமார பாலரான படலம்
11 பழியஞ்சின திருவிளையாடல்	பழியஞ்சின படலம்
12.அங்கம் வெட்டின திருவிளையாடல்	அங்கம் வெட்டின படலம்
13.மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்.	மெய்க்காட்டிட்ட படலம்
14 மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடல்	மாமனாக வந்து வழக்குரைத்த படலம்
15 தண்ணீர்ப்பந்தர் வைத்த திருவிளையாடல்	தண்ணீர்ப்பந்தர் வைத்த படலம்
16 இந்திரன் முடிமேல் வளை எறிந்த திருவிளையாடல்	இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலம்
17. திருவாலவாயான திருவிளையாடல்	திருவாலவாயான படலம்
18 வரகுணனுக்குச் சிவலோகம் காட்டின திருவிளையாடல்	வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்
19 திருமுகம் கொடுத்த திருவிளையாடல்	திருமுகம் கொடுத்த படலம்
20. பலகையிட்ட திருவிளையாடல்	பலகையிட்ட படலம்
21.இசைவாது வென்ற திருவிளையாடல்	இசைவாது வென்ற படலம்

2.4. படலப் பெயரில் புதுமை -9

நம்பி திருவிளையாடல்	திருவிளையாடற் புராணம்
1.பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்	வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்
2.பூதம் உண்ட திருவிளையாடல்	குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்
3 ஆறழைத்த திருவிளையாடல்	அன்னக் குழியும், வையையும் அழைத்த படலம்
4 குறுமுனிக்குத் தமிழுரைத்த திருவிளையாடல்	கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்
5 ஊமை தமிழறிந்த திருவிளையாடல்	சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்
6 பொன்னனையாளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல்	இரசவாதம் செய்த படலம்
7 விடைக்குறி அம்பு எய்த திருவிளையாடல்	சுந்தரப் பேரம்பு எய்த படலம்
8 சாதாரி பாடின திருவிளையாடல்	விறகு விற்ற படலம்
9 சான்றழைத்த திருவிளையாடல்	வன்னியும், கிணறும், இலிங்கமும் சான்றழைத்த படலம்

2.5. புதிய படலங்கள் -4

நம்பி திருவிளையாடல்	திருவிளையாடற் புராணம்
1.நான்மாடக் கூடலான திருவிளையாடல்	வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்
2 மதுரையான திருவிளையாடல்	நாகம் எய்த படலம், மாயப்பசுவை வதைத்த படலம்
3 புலிமுலை புல்வாய்க்கு அருளின திருவிளையாடல்	திருநகரம் கண்ட படலம்

2.6 விடுத்தவை திருவிளையாடற் புராணம்

நம்பி திருவிளையாடல்

1 மூர்த்தியாருக்கு அரசளித்த திருவிளையாடல் ----

2.காரியார் நாரியார் பாப்பகுத்த திருவிளையாடல் ---

3 புலிமுலைபுல்வாய்க்கு அருளின திருவிளையாடல் ....

துணைநின்ற நூல்கள்

தமிழிலக்கிய வரலாறு, பதினாறாம் நூற்றாண்டு, முதல்பாகம், அருணாசலம், மு.,காந்திவித்தியாலம், திருச்சிற்றம்பலம், 1977

சோழமண்டலசதகம், ஆத்மநாததேசிகர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994

திருவிளையாடற்புராணம், ஆறுமுகநாவலர் (கு.ஆ.), வித்தியாநுபாலன அச்சுயந்திரசாலை, சென்னை, 1907

திருவிளையாடற்புராணம், இரத்தினவேலு முதலியார், ஈக்காடு (உ.ஆ.), முருகவேள் புத்தகசாலை, சென்னை, 1937

தமிழ்ப்புலவர் வரிசை, நான்காம் புத்தகம், இராமசாமிப்புலவர், சு.அ , கழக வெளியீடு, சென்னை, 1953

பரஞ்சோதி திருவிளையாடற்புராணம், இலக்கிய மதிப்பீடு,கோபாலன், டாக்டர் ப., இலட்சுமி பதிப்பகம், கோவை, 1983

பாவலர் சரித்திர தீபகம், சதாசிவம், அ , ஏசியன் எசுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி, இரண்டாம் பதிப்பு, 1993

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், சாமிநாத ஐயர், டாக்டர் உ.வே. (பதி.), கபீர் அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1972

வேதாரணிய புராணம், சோமாஸ்கந்த பட்டாரகர் (பதி.), மதராஸ் ரிப்பன் அச்சு யந்திர சாலை, சென்னை, 1904

திருவிளையாடற்புராணம், பட்டுசாமி ஓதுவார், வித்துவான் தி.(பதி), ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1955

பரஞ்சோதி முனிவர் வரலாறு, பாலசுப்பிரமணியன்,சோ , தோப்புத்துறை, வேதாரணியம், 1988

தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், பிள்ளை, கே.கே , தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1972

கடம்பவன புராணம், வீமநாதபண்டிதர், வித்யாவர்த்தினி அச்சுக்கூடம், சென்னை, விக்கிரமவருடம் (ஆங்கில ஆண்டு இல்லை)

திருவிளையாடற் புராணம், மூன்று காண்டங்கள், வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.), கழக வெளியீடு, சென்னை, 1965

தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும், வேலுப்பிள்ளை, டாக்டர் ஆ., பாரி புத்தகப் பண்ணை, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1978

சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், 5ஆவது மாநாடு, கழக வெளியீடு, சென்னை, 1962

திருவிளையாடல் சொற்பொழிவுகள், கழக வெளியீடு, சென்னை, 1981

பரஞ்சோதி முனிவர் : வேதாரணியத்தில் தோன்றியவர். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். வடமொழிப் பயிற்சி உடையவர். இரண்டு புராணங்களையும் இரண்டு சிற்றிலக்கியங்களையும் படைத்த பெருமைக் குரியவர். திருவிளையாடற்புராணத்தால் தமிழ்ச்சைவ உலகிற்கு நன்கு அறிமுகமானவர். புராண நிகழ்வுகளுக்கு நுட்பவிளக்கங்களை வழங்குவதிலும், எளிய சொற்களை ஆளுவதிலும் தேர்ந்தவர். இவருடைய படைப்புகளில் சிவனியல்பு, சைவ வழிபாட்டுமுறைகள், அறநெறிகள், கலைகள், தமிழின்திறம், கருத்துப் புதுமைகள் ஆகியன பதிவாகி உள்ளன.

முனைவர் பா. சிவநேசன் குடந்தை அரசு கலைக் கல்லூரித் (தன்னாட்சி) தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரை யாளராகப் பணியாற்றிவருபவர். பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் தோய்ந்தவர். சைவ இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர். புதுக்கவிதையியலில் மனம் செலுத்திவருபவர். ஆய்வரங்குகளில் பங்கேற்பவர். பல்வேறு இதழ்களில் இவருடைய ஆய்வுப் படைப்புகள் வெளியாகி யுள்ளன.

Paranjothi Munivar (TAMIL) Rs. 25.

ISBN - 81-260-2375-9